Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk


விலை 30 ரூபா • தீபம் 67 • 20.11.2016



## அடுத்து இறங்கும் பயணி தவராசா?



# 'பற தமிழா'



## மீண்டும் நாறுமா யாழ்ப்பாணம்?



## யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி



**நக்கல் நங்கூரம்**
நல்லவேளை டைம் மெஷின் சூர்யா கைல கிடைச்சதுனால சமந்தாவுக்கு பூவும் பொட்டும் வைச்சுவிட்டதோட முடிஞ்சுது... இதுவே சிம்பு கைல கிடைச்சிருந்தா....



**அஜந்தன் அரிமா**
அடுத்த நிமிடத்தைக்கூட நாம் ஆள முடியாதென்பதே நிஜம் இதில் தேவையற்ற திமிர்,வெறுப்பு,ஆணவம் போன்ற குப்பைகளைச் சுமந்து சாக வேண்டாம்,அன்பு செய்வோம்..



**Joshua Rajee**
வெற்றி என்பது நயன்தாரா மாதிரி யாராலும் தக்க வச்சிக்க முடியாது...!!



**கரிக்கட்டி கவி**
"சரவணன் மீனாட்சி இன்னும் முடியலையா .." என கேட்டாங்க.. வெளிநாடு சென்று நேற்று திரும்பிய அம்மா.



**Satheesh Khan**
குளிக்கிறத வீடியோ எடுத்து நெட்ல போட்டா சைபர் கிரைமாம் .... டீவில போட்டா சோப்பு விளம்பரமாம்... !"
#என்னங்கடா_உங்க_பிரச்சன





**Kani Kani**
சிரிக்க மட்டுமே!
வாய்விட்டுச் சிரித்தால்
நோய்விட்டுப் போகும்!

1
சார்! நீங்க எந்தக் கடவுளைக்
கும்புடுவீங்க .....?
கல்யாணத்துக்கு முன்னாடியா,
பின்னாடியா.....?
கல்யாணத்துக்கு முன்னாடிதான்
சொல்லுங்களேன்.....
கல்யாணத்துக்கு முன்னாடி,
எனக்கு முருகனைத்தான்
ரொம்பப் பிடிக்கும் .....
அப்போ பின்னாடி.....?
அட,
அதை ஏன் கேக்குறீங்க,
கல்யாணத்துக்கு அப்புறம்
நான் வேண்டாத தெய்வமே
இல்லை.....!!?!!?!!?

2
சத்தியவான் சாவித்திரி .....
தன் கணவனை.....
எமதர்ம ராஜாவிடமிருந்து
தன் தந்திர வரங்களால்
கடுமையாகப் போராடி மீட்டாள்.....
கதையின் கருத்து :
ங்கொய்யால!
ஒரு புருஷன...
பொண்டாட்டிகிட்ட இருந்து .....
எமதர்மனால கூட
காப்பாத்த முடியாது.....!!!

3
மனைவி:
ஏங்க! உங்களைக்
கல்யாணம் பண்ணிக்கிட்டதுக்கு
என் புத்தியை
செருப்பாலத்தான்
அடிச்சுக்கோணும்.....!
கணவன்:
செருப்பு இந்தா இருக்கு.....!
புத்திக்கு எங்கே போவ!!??

4
கணவன்:
"என்ன சமைச்சிருக்கே ...?
சாணி வரட்டி மாதிரி இருக்கு...
நல்லாவேயில்லை"......
மனைவி:
"கடவுளே! .....
இந்த மனுஷன்
இன்னும் என்னவெல்லாம்
சாப்பிட்டுப் பார்த்திருக்காரோ.....?
தெரியலையே... ஏ...ஏ... ஏ....." !

5
மனைவி என்பவள் திருக்குறள்
போன்றவள்.....
அடேங்ங்ங்ங்ங்கப்பா!
எவ்வளவு அதிகாரங்கள்.....?

**குப்புனு சிரிச்சுட்டேன்... :**
*****************

"சார்..! இந்த மை தண்ணிபட்டா போகுமா"

"போகாது"

"சோப்பு விட்டு கழுவுனா..?"

"போகாது.."

"அப்படி எவ்வளவு நாள் சார் இருக்கும்..."

"ஒரு வருசத்துக்கு..."

"அப்படியா...அத கொஞ்சம் என் தலைலயிம் தேச்சு விடுங்க சார்... பழாப்போன எந்த டை அடிச்சாலும் ஒரே வாரத்துல வெளுத்துருது.."



**Mano Ganesan**
"..நாட்டில் சிங்கள மக்களை அச்சத்தில் உறையச் செய்து விட்டு தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்ந்து விட முடியாது.." பசில் ராஜபக்ச நாளை காலை சிங்கள மொழி ஊடக மாநாட்டில் நான் சொல்லப்போவது "..நாட்டில் தமிழ், முஸ்லிம் மக்களை அச்சுறுத்தி விட்டு சிங்கள மக்களும் நிம்மதியாக வாழ்ந்துவிட முடியாது. ஒருவரை ஒருவர் அச்சுறுத்தி வாழ்ந்த காலம் முடிவுக்கு வந்து விட்டது. ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு, அங்கீகரித்து வாழும் காலம் வந்து விட்டது, ஆட்சியை மீண்டும் பிடிக்க முயல உங்களுக்கு உரிமை உண்டு. ஆனால், அதற்காக இனவாதத்தை ஆயுதமாக கொள்ள உரிமை கிடையாது..."



**Rimaz Ahamed**
வெளிப்படையான வெகுளி ஆணின் மேல் ஒரு பெண் கொள்ளும் சந்தேகம் தான் அவனை ப்ளே போயாக மாற்றுகிறது, பெண்ணுக்கு பொசஸிவ்னஸ் என்று சிம்பிளாகத்தெரிவதன் பின்னணியில் ஒரு ஆண் தினசரி தன்னை நிரூபிக்கவேண்டிய மன உளைச்சல் இருக்கிறது.



**Abdul Haq Lareena**
பெண்கள் விவகாரத்தைப் பொறுத்தவரையில் நம் மத்தியிலும் உள்ளும் புறமுமாய் நிறையவே Donald Trumpகள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.


# YUKON
SOFTWARE

## ARE YOU FED UP WITH TRAFFIC?
### DO YOU WISH TO HAVE MORE TIME WITH YOUR FRIENDS & FAMILY?

**Do you want to be part of a team that values:**
- Long-term commitment
- Trusted, family-like work environment
- Engage in challenging projects whilst developing your skillset

*Our success is people. We are a European software company with over 15 years of experience in the industry. Our clients originate from the U.S.A and the Netherlands.*


**PHP Developer (Senior)**
**Jaffna based**
- Has good communication skills and converse articulately in English
- Is able to build a good relationship with your teammates and clients
- Has strong critical thinking skills
- Has 3- 4 years of experience with the following technologies
  - Experience with PHP Frameworks (Zend,codeigniter, yii,symfony ..)
  - Core PHP
  - Mysql (ORM doctrine, stored procedure development, performance optimization)
  - CMS (wordpress,drupal,magento,woocommerce)
  - PHPUnit
  - FrontEnd (js,html,css, jquery,angular 2,bootstrap)
  - Version control, Svn, git

**C# / .Net Developer (Senior)**
**Jaffna based**
- Has good communication skills and converse articulately in English
- Is able to build a good relationship with your teammates and clients
- Has strong critical thinking skills
- Has 3- 4 years of experience with the following technologies
  - C#
  - Experience with building desktop .NET applications
  - NET Windows Presentation Foundation (WPF)
  - XAML
  - Language Integrated Query (LINQ)
  - Model-View-ViewModel design pattern (MVVM)
  - Serialization

**Java developer (Senior)**
**Jaffna based**
- Has good communication skills and converse articulately in English
- Is able to build a good relationship with your teammates and clients
- Has strong critical thinking skills
- Has 3- 4 years of experience with the following technologies
  - Java 8
  - Experience with Spring Framework (MVC/REST/Security)
  - Hibernate
  - JUnit (Mockito/PowerMock/EasyMock)
  - JavaScript (JS Frameworks, JS Test Frameworks)
  - HTML & CSS is a strong advantage
  - Maven
  - SVN/GIT

**Front end Developer (Senior)**
**Jaffna based**
- Has good communication skills and converse articulately in English
- Is able to build a good relationship with your teammates and clients
- Has strong critical thinking skills
- Has 3- 4 years of experience with the following technologies
  - Angular2 framework Or React framework
  - Bootstrap
  - Jquery

Applicants should send their CVs along with a cover letter to srilanka@yukon.cv.ua stating the position in the subject line. For more information, visit www.yukon.cv.ua/en





# 'சாது மிரண்டும் நாடு கொள்ளும்'

நம்மாழ்வார்

'பற தமிழா... உன்னை கொல்லுவேன்' இதுதான் கடந்தவாரம் முழுக்க ஊடகங்கள், சமூகவலைத்தளங்களில் பரபரப்பாக பேசப்பட்ட, விவாதிக்கப்பட்ட, பகிரப்பட்ட விவகாரம். மட்டக்களப்பின் மங்களாரமய விகாராதிபதி அம்பிட்டிய சுமனரத்தின தேரர் நாகரிகம் தவறி பேசிய வார்த்தைகளின் ஒன்றுதான் இது.

அகிம்சையை போதித்த போதி தர்மனின் வழிவந்தவர்கள் என கூறும், காவியுடை தரித்த தேரர் அன்று அரங்கேற்றியது சாதாரண காட்சியல்ல. ஒரு இனத்திற்கு எதிரான... ஒரு மதத்திற்கு எதிரான... ஒரு மொழிக்கு எதிரான உச்சக்கட்ட காழ்ப்புணர்வு.

மட்டக்களப்பின் எல்லைக்கிராமமான மண்முனை தெற்குமேற்கு பட்டிப்பளை பிரதேச செயலர் பிரிவின் கச்சக்கொடி கிராம உத்தியோகத்தர் பிரிவில் கால்நடைகளிற்கான ஒதுக்கப்பட்டுள்ள மேய்ச்சல் தரைகளை சுருட்டி, சிங்களவர்களை குடியமர்த்த சுமனரத்தினதேரர் முயற்சித்துள்ளார். இதனை அந்தப்பகுதி கிராமசேவர் தடுத்து நிறுத்திய தால் ஆத்திரமுற்று, இனத்துவேசத்தை கொட்டித் தீர்த்துள்ளார் பௌத்த பிக்கு.

அதிகாரிகள், பொலிசாரிற்கு முன்பாக வெறிகொண்டவரை போல நடந்து, கிராம சேவகரை கெட்ட கெட்ட வார்த்தைகளினால் நாகரிகம்தவறி திட்டி தீர்த்தார். இத்தனைக்கும் அருகில் பொலிசார். பொலிசார் நிற்பதால்தான் அடிக்காமல் விட்டேன் என்ற சவடால் வேறு. அகிம்சையை போதிப்பதாக கூறிக்கொள்ளும் தேரர் வெறிகொண்டு கத்திக்கொண்டிருக்க, பயங்கரவாதியென தேரரால் குறிப்பிடப்பட்ட கிராமசேவகர் ஒரு வார்த்தை திரும்ப பேசாமல், முகத்தில் எந்த உணர்ச்சியையும் காண்பிக்காமல் நின்றார். சமூக ஊடகங்களில் விதந்தோதப்பட்ட



கிராமசேவகர்

விடயங்களில் இதுவும் ஒன்று.

அதற்கு பின்னர் பொலிஸ்நிலையம் என ஊகிக்கக்கூடிய இடமொன்றில் பொலிசாரையே அந்த தேரர் அடிக்க துரத்தும் வீடியோ ஒன்றும் வெளியாகியுள்ளது.

கடந்த பல வருடங்களாகவே மட்டக்களப்பில் அடாவடியாக தேரர் செயற்படுவதாக அதிகாரிகளும், மக்கள் பிரதிநிதிகளும் பகிரங்கமாக குற்றம் சுமத்தி வருகின்றனர். ஒருங்கிணைப்புக்குழு கூட்டங்களிற்குள் புகுந்து குழப்பம் விளைவித்தார் என்று நீதிமன்றத்தில் ஒரு வழக்கும் தாக்கல் செய்யப்பட்டது.

என்ன பிரச்சனை?

மட்டக்களப்பில் அண்மைக்காலமாக விரைவான சிங்கள குடியேற்றம் நடந்து வருகிறது. சிங்கள குடியேற்றத்தின் பிரதான மூளையாக அம்பிட்டிய சுமனரத்தினதேரர் செயற்படுகிறார் என்கிறார்கள். அவரால் நூற்றுக்கணக்கான சிங்கள குடும்பங்கள் கிழக்கில் குடியமர்த்தப்பட்டுள்ளது. காணியற்ற, பொருளாதார வசதியற்றவர்களை குறிவைத்து அவர்களை அழைத்து வந்து மட்டக்களப்பில் குடியமர்த்துகிறார். 35,000 சிங்கள குடும்பங்களை குடியமர்த்தும் வரை ஓயமாட்டேன் என்றும் சூளுரைத்துள்ளார்.

அதிகாரிகளிற்கு சிறிய அழுத்தம் கொடுப்பதன் மூலம் அவர்களிற்கு கட்டாயம் நிலம் வழங்க வைத்து அந்த பகுதியை சிங்கள பகுதியாக்கிவிடலாம், சிங்கள மக்கள் மத்தியில் விரைவில் ஹீரோவாகி விடலாம் என்பதுதான் அவரது மாஸ்டர் பிளான். இவரது சிங்கள குடியேற்ற முயற்சிகளை அவதானித்த புலிகள் முன்னர் வாகரைக்கு இவரை அழைத்து "இத்தோடு நிறுத்திக் கொள்ளுங்கள்" பாணியில் "அன்புக்கட்டளை" இட்டதாகவும் ஒரு தகவலுண்டு.

இப்பொழுது சர்ச்சையாக உருவெடுத்துள்ள மேய்ச்சல் தரை விவகாரம் கடந்த பல வருடங்களாகவே நீடிக்கிறது. அந்த நிலத்தில் தேரர் கண்வைத்து பலகாலம். மண்முனை தென்மேற்கு, மண்முனை மேற்கு, வெல்லாவெளி பகுதிகளில் உள்ள கால்நடை வளர்ப்பவர்களிற்காக ஒதுக்கப்பட்ட 2500 3000 ஏக்கர் மேய்ச்சல்தரைக்கு வேட்டு வைப்பதே தேரரின் நோக்கம். மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் தெற்கிலிருந்து அழைத்து வரப்பட்ட சிங்களவர்களை அங்கு குடியமர்த்தி, அத்துமீறிய விவசாய நடவடிக்கையில் ஈடுபட வைத்துள்ளனர். சிங்களவர்கள் அத்துமீறி குடியிருந்த சமயத்திலேயே மகிந்த ராஜபக்ச, கிழக்கில் கோலோச்சிய கருணா அம்மான் போன்றவர்கள் அவர்களை வெளியேற்றியிருந்தால் இவ்வளவு சிக்கல்கள் தோன்றியிராது. எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றிவிடுவதைபோல அவர்கள் மௌனமாக இருந்துவிட, தேரர் தலைமையில் மட்டக்களப்பே ஆபத்தை எதிர்கொள்ள ஆரம்பித்துள்ளது.

அத்துமீறி பயிர் செய்த நிலங்களை தமக்கே எழுதி தருமாறு இப்பொழுது சிங்கள சட்டவிரோத குடியேறிகள் அடம்பிடிக்க ஆரம்பித்துள்ளனர். இதற்கு அதிகாரிகள் சம்மதிக்கவில்லை. நிர்வாகத்தை கையில் எடுத்த தேரர், கடந்தவாரம் அந்த நிலங்களை அவர்களிற்கே பகிர்ந்தளிக்க முயன்றுள்ளார். கச்சக்கொடி கிராமசேவகர் பிரிவில் இந்த சம்பவம் நடந்தது. கச்சக்கொடி பகுதியில் நடக்கும் நில அபகரிப்பை தீபத்தின் கடந்த 23.10 இதழில் வெளிச்சமிட்டிருந்தோம்.

தேரர் தலைமையில் காணி பகிர்ந்தளிப்பு நடக்கவிருந்த சமயத்தில் கெவிலியாமடு கிராம அலுவலர் உள்ளிட்ட அதிகாரிகள் அங்கு சென்று தடுத்து நிறுத்தியுள்ளனர். இதனால் ஆத்திரமடைந்த தேரர் நிதானமிழந்து பேசியதே இப்பொழுது விவகாரமாகியுள்ளது.

ரகளை மன்னன்

சுமணரத்தின தேரர் இப்படி நிதானமிழந்து பேசுவது இது முதலல்ல. சாட்சாத் தேரரின் பெயரை கூகிள் பண்ணினால் விதவிதமான ரகளை வீடியோக்கள் வந்திறங்கும்.

மட்டக்களப்பில் நடக்கும் ஒருங்கிணைப்புக்குழு கூட்டம், மகிந்த ராஜபக்சவின் மட்டக்களப்பு விஜயம், தேரரால் குடியமர்த்தப்பட்ட சட்டவிரோத குடியேறிகளின் சட்டவிரோத மின்சார இணைப்பை பொலிசார் துண்டித்த சமயம் என தேரர் சன்னதங்கொண்ட வீடியோக்கள் இணையத்தில் தாராளமாக உலாவுகின்றன. (தேரரின் அடாவடி அதிரடி வீடியோக்களை காண தீபத்தின் யூரியுப் பக்கத்திற்கு செல்லுங்கள்)

சுமணரத்தின தேரரின் கருத்துக்கள் ஒவ்வொன்றும் சரவெடிகள். வாயிலிருந்து வந்ததும் சர்ச்சைகள்தான். கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது மகிந்த மட்டக்களப்பிற்கு வந்திருந்தார். அதன்போதும் ரகளை செய்தார். பின்னர், மகிந்த போன பின்னர் "பிள்ளையான் என்னை கூட துரத்தினார்" என கொளுத்திப் போட்டார்.

கிராமசேவகருடன் வில்லங்கப்பட்ட பின்னர் சுமணரத்ன தேரர் அடுத்து கிளப்பிய சர்ச்சை பதுளைவீதியில் அநுராதபுரகாலத்திற்குரிய விகாரையொன்று அழிக்கப்பட்ட இடமென கூறி தனியார் காணியொன்றிற்குள் புகுந்து உட்கார்ந்துவிட்டார். அரசாங்க அதிபர் வந்தால்தான் இந்த இடத்தை விட்டு எழும்புவேன் என அடம்பிடித்துள்ளார். அப்போது கூறினார் "என்னை பிரபாகரன் ஏசவில்லை... கௌசல்யன் ஏசவில்லை... கருணா அம்மான் ஏசவில்லை... காடியனாறில் இருந்த புகழன் ஏசவில்லை... அவர் எனக்கு அப்பா மாதிரி. ஏனெனில் நான் தமிழர்களிற்கு எதிரானவன் அல்ல" என.

1990 இல் மங்களாரமய விகாரையை பொறுப்பேற்ற பின்னர் அவர் மட்டக்களப்பில்தான் தங்கியிருந்தார். விடுதலைப்புலிகள் இருந்த காலத்தில் தன்னையொரு நடுநிலையாளராக காட்டிக்கொண்டார். மட்டக்களப்பில் பொங்குதமிழ் நிகழ்வு நடந்தபோது தேரரும் அதில் உரையாற்றியிருந்தார்.

விடுதலைப்புலிகள் களத்திலிருந்து அகற்றப்பட்ட பின்னர்தான் தேரர் புது ரூபம் எடுத்தார். அதன்பின் தேரரில் சொல், செயல் எல்லாம் அதிரடி... சரவெடிதான்.

சுமணரத்தின தேரர் ஒரு துறவியாக இருந்தாலும் அவர் அதற்குரிய விதத்தில் நடந்து கொள்வதில்லை. காவல்த்துறை, அரச அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் அனைவருடனும் அடாவடியாகத்தான் நடந்து கொள்கிறார். அவர் பௌத்த மதகுரு என்ற பாதுகாப்பு ஒன்றே இத்தனை அடாவடிக்கும் கவசமாக உள்ளது. ஒரு இந்து, முஸ்லீம் மதகுரு இப்படி நடந்து கொண்டால் இப்போது என்ன நிலைமை என்ற கேள்வியும் சமூகவலைத்தளங்களில் பரவலாக எழுப்பப்படுகிறது.

தேரரின் நடத்தையை கண்டித்தும், அரச அதிகாரிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய கோரியும் பட்டிப்பளை பிரதேச செயலகத்தின் முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டியிருக்கிறதென்றால் நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து கொள்ளுங்கள். அவர் பௌத்த தேரர் என்பதால் காவல்த்துறையினர் கையை பிசைந்து கொண்டு நிற்கிறார்கள். பௌத்ததுறவிகளை சாதுக்கள் என்றும் அழைப்பார்கள். சுமணதேரரரையும் அப்படி அழைக்கலாமா?

## சுமணரத்தின தேரர் கிராமசேவகரை திட்டிய வீடியோ பதிவின் தமிழ் மொழிபெயர்ப்பு.

வில்பத்துல வெட்டுறாங்கள். அங்க போய் வழக்கு போடுடா..
ஶ்ரீபாதல வெட்டுறாங்கள் அங்க போங்கோடா.. போங்கோ..
பறையன்களே...
நீ புலிடா...
புலிடா...
நீ புலியே தான்ரா...
சிங்களவன அண்டைக்கு சுட்ட...
இண்டைக்க அடிக்கிற
நீ அதைத் தான்ரா செய்யிற...
உன்னைப் பாக்கும்போது எரிச்சல் வருது..
இந்த நாய்தான் தொடர்ந்து வழக்கு போட்டது...
நீ கிராம சேவகர் எண்டத நினைச்சிக்கொள்...
நீ தமிழன்...
நீ சிங்களவனுக்கு எதிரா தொடர்ந்து வழக்கு போடுறத நிப்பாட்டு..
உனக்கு நல்லபடியா சொல்றன்...
ஒரு சிங்களவனையும்
ஒரு இடத்திலயிருந்து அசைச்சாலும்..........
தம்பிய நீதிமன்றமும் முடிந்துவிட்டது. (முஸ்லிம் நீதிமன்றம்)
தமிழனின் நீதிமன்றமும் முடியும்...
நீ நல்லா நினைவு வச்சிக்கொள்...
உன்ர தாடைய இப்ப அடிச்சி நொருக்கிடுவேன்...
நான் பொறுமையா இருக்கிறன்
ஏன் எண்டா இந்தக் காக்கிச்சட்டைக்காகத்தான்.
அதை நீ நினைவு வச்சிக்கொள்
பறையா....தமிழா...
இவனுக்கும் சொல்லனும் (பொலிஸ்க்கு )........
(கிராம சேவையாளருக்கு) நீ சிங்களவன் எட்டுப் பேருக்கு எதிரா வழக்குப் போட்ட
ஏன் உன்ர அப்பாவின்ர இடமா? அம்மாவின்ர இடமா?...
டேய் அப்பாவிகளுக்கு இப்பிடி செய்யாத...
நீ புலியாகி சுட்ட.....
நாங்க பொறுமையா இருந்தோம்....
(கெட்டவார்த்தை)
திரும்பியும் கைவைக்க வெளிக்கிட்டால் எந்தவொரு (கெட்டவார்த்ததை) மகனுக்கும் (கெட்டவார்த்தை) நான் சொல்றன் நல்லா தெரிஞ்சிக்கொள் கடைசி காலம்தான்
அம்மா (கெட்டவார்த்தை)
உங்களுக்கு....அடிப்பேண்டா...ம்ம்ம்....
இவன் சாகும் வரைக்கும்....!






# அடுத்த முறை நாறுவது எப்பொழுது?




✒ வன்னிமது

ஒருவாரத்தின் பின் யாழ் மாநகரசபை பிரதேசத்தில் கழிவுகள் அகற்றப்பட்டு நிலைமை வழமைக்கு திரும்பியுள்ளது. ஒரு வாரமாக மூக்கை பொத்திக்கொண்டு... தடுக்கி விழுந்தால் ஏதாவதொரு குப்பை மேட்டின் மேல்த்தான் விழ நேரிடுமென்ற பயத்தில் திரிந்தவர்கள் எல்லோரும் இப்போதுதான் நிம்மதிப் பெருமூச்சு விடுகிறார்கள். காரணம் சுகாதார பணியாளர்களின் போராட்டத்தால் யாழ் நகரத்தில் தேங்கியது கிட்டத்தட்ட 650 இற்கும் அதிக தொன் கழிவுகள்!

தமக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டுமென வலியுறுத்தி யாழ் மாநகரசபையின் தற்காலிக சுகாதார தொழிலாளர்கள் 180 பேர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட, நிரந்தர சுத்திகரிப்பு தொழிலாளர்கள் 382 பேரும் அவர்களுக்கு ஆதரவாக களமிறங்க... யாழ் மாநகரசபை பகுதியே நாறியது.

யாழ் மாநகர சபைக்கு முன்பாக கூடாரம் அமைத்து போராட்டத்தில் ஈடுபட ஆரம்பித்தனர். தமிழர்களிற்கு பொது இடத்தில் குப்பை போடுவது பற்றிய சுரணையே கிடையாது தானே. யாழ்ப்பாண பேரூந்து நிலையம், பிரதானவீதிகள், உள்வீதிகள் என அனைத்தும் குப்பைமேடாகி நாறத் தொடங்கிவிட்டது. யாழ் மாநகரசபையின் கீழ் தற்காலிக அடிப்படையில் 180 சுத்திகரிப்பு தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். 'கடந்த ஐந்து வருடங்களாக பணியாற்றுகிறோம், எமக்கு நிரந்தர நியமனம் வழங்குங்கள்' என்பதே அவர்களின் கோரிக்கை.

தற்காலிக அடிப்படையில் பணியாற்றும் இவர்களின் சிரமங்கள் சொல்லில் அடங்காதவை. சுத்திகரிப்பு பணிதானே என யாரும் சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது. மனிதக்கழிவுகள், தொழிற்சாலை, வியாபார நிலைய கழிவுகள் உள்ளிட்ட அனைத்து கழிவுகளையும் இவர்கள் அகற்றுகிறார்கள். கழிவகற்றல் தொழிலாளிகள் அடிக்கடி சுகாதார பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டி வரலாம். எனினும், வேலைக்கு வராத ஒருநாளும் அவர்களுக்கு சம்பளம் கிடைக்காது. ஒரு தொழிலாளியின் நாளாந்த சம்பளம் 930 ரூபா. சுத்திகரிப்பு தொழிலாளிகள் மருத்துவ விடுமுறை எடுக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் அதிகமாக உள்ளன. அப்படியான சந்தர்ப்பங்களில் சம்பளம் கிடைப்பதில்லை, நிரந்தர நியமனம் கிடைத்தால் இது மட்டுமல்ல நிறையப்பிரச்சனைகளிற்கு தீர்வு கிட்டும் என்கிறார்கள் சுத்திகரிப்பு தொழிலாளர்கள்.

யாழ் மாநகரசபை பகுதியில் கழிவுகளை சேகரித்து கல்லுண்டாய்வெளியில் கொட்டி, மீள்சுழற்சி செய்வதும் இவர்களின் பணிதான்.

தொழிலாளர்களின் நிரந்தர நியமன கோரிக்கையை முன்வைத்து பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவது இது முதன்முறையல்ல. இதற்கு முன்னர் ஒருமுறை போராட்டத்தில் குதித்தபோது 03 மாதத்தில் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என வடக்கு முதலமைச்சர் வாக்குறுதியளித்திருந்தார். எனினும் அது நிறைவேற்றப்படவில்லை. மீண்டும் இம்முறை போராட்டத்தில் குதித்தனர். இம்முறை பல்வேறு அதிகாரிகள் பலசுற்று பேச்சில் ஈடுபட்டனர். எனினும், தொழிலாளர்கள் விடாப்பிடியாக நின்றதால் இழுபறி தொடர்ந்தது. இறுதியில் ஒருவழியாக சமரசப் பேச்சுக்களின் மூலம் போராட்டம் முடிந்துள்ளது. இம்முறையும் 03 மாத அவகாசம் தொழிலாளர்களிற்கு கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு தொகுதி தொழிலாளர்களிற்கு 03 மாதங்களில் நிரந்தர நியமனம் என்றும், ஏனையவர்களிற்கு 06 மாதங்களில் நிரந்தர நியமனம் என்றும் கூறப்பட்டுள்ளது.

எனினும், இது சாத்தியமா என்பதே இப்போதைய கேள்வி. இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. முதலில், நிரந்தர நியமனம் வழங்கும் அதிகாரம் வாக்குறுதியளித்தவர்களிடம் உள்ளதா என்பது. இரண்டு, அரச சுற்றுநிருபத்தின் அடிப்படையிலான தகுதியை தொழிலாளர்கள் கொண்டுள்ளார்களா என்பது.

யாழ் மாநகரசபையின் சுகாதாரசேவைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட ஆளணி 382. எனினும், அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையைவிட அதிகமானவர்கள் தற்போது பணியில் உள்ளனர். தேவைக்கதிகமானவர்களை பணியில் வைத்திருந்துவிட்டு, அவர்களின் உரிமைகளை அங்கீகரிக்க மறுப்பது மாநகரசபையின் கோளாறு. கடந்த ஆட்சிக்காலத்தில் அரசியல் செல்வாக்கால் நியமனங்கள் வழங்கப்பட்டதாக ஒரு தகவலுண்டு.

யாழ்.மாநகரசபை பகுதியில் உள்ள நிரந்தர குடியிருப்பாளர்கள் 92,000

நகருக்கு தினமும் வந்து செல்வோர் 100,000

மாநகரசபையில் நாளாந்தம் சேரும் கழிவுகள் 82 தொன்

இதையும் மீறி நியமிப்பதெனில் திறைசேரியின் கீழ் இயங்கும் ஆளணி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துக்கு முன்மொழிய வேண்டும். அவர்கள் அனுமதி வழங்கினால் மாத்திரமே நிரந்தர நியமனம் சாத்தியம்.

அடுத்த சிக்கல், புதிய அரச சுற்று நிருபம். சுத்திகரிப்பு தொழிலாளர்கள் போன்றவர்களை ஆட்சேர்க்க வேண்டுமாயின் முறையாக பத்திரிகைமூலமே பணிக்கான ஆட்களை இணைத்துக் கொள்ள முடியும். அத்துடன் நிரந்தர ஊழியர்களை உள்வாங்குவதாயின் ஆகக்குறைந்தது க.பொ.த சாதாரண தரத்தில் 06 பாடங்களில் சித்தியடைந்திருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள சுத்திகரிப்பு தொழிலாளர்களில் எத்தனைபேர் அந்த தகுதியை கொண்டவர்கள் என்பது ஒரு பிரச்சனையென்றால், அடுத்த பிரச்சனை அவர்கள் தற்காலிக அடிப்படையில் பணியாற்றியதை கவனத்தில் கொண்டு தற்போதைய சுற்றறிக்கைக்கு முன்னரான நடைமுறைகளின் அடிப்படையில் இவர்களிற்கு நிரந்தர நியமனம் வழங்கப்படுமா என்பது.

யாழ் மாநகரசபை ஆணையாளர் பொ.வாகீசனுடன் பேசியபோது இந்த சிக்கல்களை அவரும் குறிப்பிட்டார். நிரந்தர நியமனம் வழங்கும் அதிகாரம் தமது கையில் இல்லையென்பதை குறிப்பிட்டவர், தற்காலிக பணியாளர்களை நிரந்தரமாக்க தொடர்ந்து முயற்சிப்பதாக கூறினார்.

சுத்திகரிப்பு தொழிலாளர்களிற்கு ஆதரவாக சாவகச்சேரி நகரசபை சுத்திகரிப்பு தொழிலாளர்கள் ஒரு அடையாள போராட்டத்தை நடத்தியிருந்தார்கள். அதற்கப்பால் பொதுவெளியில் சுத்திகரிப்பு தொழிலாளர்களின் போராட்டம் பற்றிய அபிப்பிராயங்கள் எழவில்லை. அதைவிட ஆபத்து, நகரத்தை எப்படி சுத்தமாக வைத்திருப்பதென்பது நம்மவர்களிற்கு தெரியவில்லையென்பது. யாழ் மாநகரசபை பிரதேசம் குப்பைகளை அதிகளவில் உற்பத்தி செய்யும் இடம். தொழிலாளர்களின் பணிப்புறக்கணிப்பு போன்ற நெருக்கடியான சமயங்களில் எப்படி சமாளித்துக் கொள்வதென்ற விழிப்புணர்வு நம்மவர்களிடம் இல்லை. எல்லோரும் கழிவுகளை வீதிகளில், பொது இடங்களில் கொட்டினார்கள். மழை வேறு. அனைத்து பகுதிகளும் மொத்தமாக நாறின.

இதே நிலைமை மீண்டும் ஏற்படாதென்பதற்கு எந்த நிச்சயமும் இல்லையென்பதே உண்மை. காரணம், சுத்திகரிப்பு தொழிலாளர்களின் நிரந்தர நியமனம், தொழிலாளர்களிற்கு வாக்குறுதி வழங்கிய யாரின் கைகளிலும் இல்லை. நிரந்தர நியமனத்தை பெற்றுக்கொடுப்பதில் அதிகாரிகள் பொறுப்பில்லாமல் செயற்பட்டால் அடுத்த மூன்று மாதங்களின் பின்னர் மீண்டும் யாழ் நகரம் நாறும்.

# புதிய அரசியலமைப்பிற்கான பாடங்கள்

மட்டக்களப்பு மங்களாரமய விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரரின் நடவடிக்கைகள் வீடியோக்களாக வெளியாகியுள்ளன. உண்மையில் இந்த வீடியோ பௌத்தத்தை நேசிக்கும் ஒவ்வொருவருக்கும் பெரும் தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது.

மட்டக்களப்பில் வெளிப்படையான இனமுரண்பாட்டை தோற்றுவிக்கும் செயலில் தேரர் ஈடுபட்டுள்ளார் என்றுதான் ஊகிக்க முடிகிறது. இப்படியான செயற்பாடுகளை வளரவிடுவதன் முதலாவதும் பெரியதுமான ஆபத்து இனங்களிற்கிடையிலான ஐக்கியம் சீர்குலைவது.

இனங்களிற்கிடையில் பகைமை பாராட்டி, சந்தேகத்தை வளர்த்து இலங்கை முன்னால் செல்லவே முடியாதென்ற படிப்பினையை பெற இலங்கை கொடுத்தவிலை அதிகம். ஆற்றவே முடியாத காயங்கள் உள்ளன. ஈடு செய்ய முடியாத இழப்புக்கள் உள்ளன. நிரப்பப்பட முடியாத வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன. இத்தனைக்கும் பிறகுதான் இனஐக்கிய பேச்சுக்கள் உருவாகியுள்ளன.

இதனை சீர்குலைப்பதில் பல்வேறு சக்திகள் ஆர்வம் காட்டுகின்றன. குறிப்பாக தெற்கு கடும்போக்குவாதிகள் ஒவ்வொரு சிறு துரும்பையும் தமது ஆயுதமாக்க பார்க்கிறார்கள். இந்தநிலையிலேயே பொதுபலசேனவின் மட்டக்களப்பு அமைப்பாளர் சுமணரத்ன தேரரின் அடாவடி வீடியோ வெளியாகியுள்ளது.

கடந்த ஆட்சியில் முஸ்லீம்களிற்கெதிரான வெறுப்பை தூண்டிய பொதுபலசேனாவின் மட்டக்களப்பு அமைப்பாளரான சுமணரத்ன தேரர் கிழக்கிலுள்ள தமிழ், முஸ்லீம்களிற்கெதிரான வெறுப்பை தூண்டி வருகிறார்.

யுத்தம் முடிந்து, இனக்குரோதத்தை தூண்டிய ஆட்சி இல்லை இப்பொழுது. குரோதத்தை வளர்ந்த ஆட்சி மாறிய அடுத்த விநாடியே இனஐக்கியம் ஏற்பட்டுவிடுமென்பது கனவு. பதற்றத்தையும், சச்சரவுகளையும் ஏற்படுத்துவது இலகு. ஐக்கியத்தையும் சமாதானத்தையும் கட்டியெழுப்புவது சிரமம். இனக்குரோத ஆட்சி இல்லாதுவிட்டாலும் அதன் வீரியம் முற்றாக அகற்றப்படவில்லை. இனங்களிற்கிடையிலான புரிந்துணர்வு மெதுமெதுவாகத்தான் ஏற்படும். இப்போது இனங்களிற்கிடையிலான பதற்றம் இல்லை. ஆனால் அது இனஐக்கியத்தை கட்டியெழுப்பியதாக அர்த்தமல்ல. இன்னும் விளக்கமாக சொன்னால், இனமுரண் தீ அடங்கி எரிபற்று நிலையில் உள்ளது. சிறிய பதற்றமும் பெரிய அதிர்வுகளை ஏற்படுத்திவிடும் சூழல் இது. இப்படியான நிலையில் சுமணரத்ன தேரரின் நடவடிக்கைகள் நிச்சயம் எதிர்வினைகளை ஏற்படுத்தும்.

இந்த இடத்தில் இன்னொரு விடயத்தையும் கவனத்தில்கொள்ள வேண்டும். காவல்த்துறைக்கே சவால்விடும் துணிவை சுமணரத்ன தேரர் எங்கிருந்து பெற்றார்? நாட்டின் அரசியலமைப்பும், சட்டங்களும், சம்பிரதாயங்களும் அவரை பாதுகாக்கிறது. இது ஆபத்தான முன்னுதாரணம். இது புதிய அரசியல் யாப்பு உருவாக்க பணிகள் நடக்கும் சமயம். சுமணரத்ன தேரர் மட்டுமல்ல, அவர் முன்னெடுக்கும் அரசியலையும் அனுபவமாக கொண்டு, அரசியலமைப்பு உருவாக்கத்தில் தமிழர் பிரதிநிதிகள் அவதானமாக செயற்பட வேண்டும்.

அரசியலமைப்பு நாட்டில் உள்ள சகல இனமக்களையும் சமத்துவமாக பேணிப்பாதுகாப்பதாக அமைய வேண்டும். ஒரு இனம், மதம் மட்டும் மேலோங்கியதென்ற பிரிவினைகள் தேவையில்லை. மனிதர்களில் உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் இல்லையென்ற புரிதல் ஏற்பட்டு வெகுகாலமாகிறது. சாதியால், இனத்தால், மதத்தால், மொழியால், நிறத்தால் மனிதர்களிற்கிடையில் பேதங்களை காண முடியாது. அப்படியான பேதங்களை உருவாக்க முனைபவர்கள் மனிதகுலத்திற்கே எதிரானவர்கள்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் பௌத்தத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருந்ததும், தமிழ்தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் அதனை நிராகரித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. இதே பொறுப்புணர்வுடன் தமிழர் பிரதிநிதிகள் அரசியலமைப்பு உருவாக்கத்தில் தொடர்ந்தும் பணியாற்ற வேண்டும்.

பல்லின நாட்டில் எந்த இனமும், மதமும் முன்னுரிமை, முக்கியத்துவம் பெற முடியாது. அப்படி செய்வது பல்லின கட்டமைப்பின் அடித்தளத்தையே ஆட்டம் காண செய்துவிடும். தமிழர்கள் எந்தகாலத்திலும் பௌத்த பிக்குகளை எதிரிகளாகவும், துவேசிகளாகவும் பார்த்தவர்கள் அல்ல. இன்னும் சொன்னால், பௌத்தத்தின் நல்ல அம்சங்களை ஆதரித்து கடைப்பிடித்தவர்கள். யுத்தம் தீவிரம்பெறும் வரையிலும் ஒரு தொகுதி தமிழர்கள் பௌத்தத்தை தமது மதமாக கொண்டும் வந்துள்ளனர். உலகெங்கும் பல்லின மக்கள் வாழும் நாடுகளில் இது சாதாரணமானது. எல்லா மதங்களும் சமனாக நோக்கப்படும்போது, பதற்றங்கள் உருவாகாது. எதிர்ப்புணர்வு உருவாகாது.

ஆனால் சுமணரத்ன தேரர் போன்றவர்களின் நடத்தைகள் தமிழர்களின் மனநிலையில் மாற்றத்தையும் ஏற்படுத்திவிடும். அது இனஐக்கிய பாதையை மேலும் கரடுமுரடாக்கிவிடும். உண்மையான தேசபக்தர்கள் இதனை புரிந்து கொள்வார்கள்.

சோபிததேரர் போன்றவர்கள் வாழ்ந்த நாட்டில் சுமணரத்ன தேரர்களும் வாழ்கிறார்கள் என்பது துயரமே!

**தீபம்**

197, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

☎ 0212216633, 0214927561

ஆசிரியர்பீடம் : editor@deepam.lk ☎ 0214927562

சந்தா : subs@deepam.lk ☎ 0768255566

விளம்பரம் : sales@deepam.lk ☎ 0768255567

செய்திகளுக்கு : news@deepamnews.com

பத்திரிகை, இணையத்தளத்தில் செய்தியாளர்களாக செயற்பட ஆர்வமுள்ளவர்களிற்கு களங்கள் விரிந்துள்ளன. செய்தித்துறை ஆர்வம், புத்தாக்க திறனுள்ளவர்கள் உடன் தொடர்புகொள்ளுங்கள்.


0768255562, editor@deepam.lk

# சொன்னார்கள்



**பசில் ராஜபக்ச**
**– ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன**

2005 தேர்தலின் வெற்றிக்குப் பின்னால் நான் இருந்தேன். ஆனால் அதற்காக நான் பெருமை தேடிக்கொள்ளவில்லை. அதேபோன்று தோல்விக்கான காரணத்தையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். அதுவே பண்பாக இருக்குமென்று நான் நினைக்கிறேன். மஹிந்த ராஜபக்ஷ யுத்தம் செய்யாது பிரபாகரனுடன் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண முற்பட்டார். ஆனால் அது முடியாமல்போனது. எனவே தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினை எட்டுவதற்கு எமது கட்சி ஏற்பாடு செய்யும்.



**எம்.ஏ.சுமந்திரன்**
**– பேச்சாளர் தமிழ்தேசிய கூட்டமைப்பு**

அரசியலமைப்பு பேரவையின் வழிகாட்டல் குழுவிலேயே அமர்ந்திருக்கின்ற போது பௌத்தத்திற்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்று யாரவது பேசினால் மட்டக்களப்பு தேரரின் காணொளியை நான் காட்டுவேன். இதற்கா முதலிடம் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்பேன். எனவே நாங்கள் பேச வேண்டிய இடங்களில் சரியானதை பேசுவோம். ஒத்துழைக்க வேண்டிய இடங்களிலேயே சேர்ந்து ஒத்துழைப்போம்.



**பைசர் முஸ்தபா**
**– உள்ளூராட்சி அமைச்சர்**

நாட்டின் சகல பகுதிகளும் சமமான அபிவிருத்தி முன்னெடுக்கப்பட வேண்டும். ஒரு காலத்தில் மேல்மாகாணத்தில் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டன. அரச தலைவர் மேல்மாகாணத்தைச் சேர்ந்தவராக இருந்தது அதற்கு காரணம். அதன் பின்னர், தெற்கிலிருந்து அரச தலைவர் தெரிவானபோது தெற்கில் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தின் காலத்தில் சகல பகுதிகளிலும் சமமான அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படுகின்றன.



**கோவிந்தன் கருணாகரம்**
**– கிழக்கு மாகாணசபை உறுப்பினர்**

கௌதம புத்தர் காவியுடை தரித்தவர். மக்களுக்கு நல்ல போதனைகளை செய்தவர். எல்லோரும் ஒழுக்கசீலர்களாக வாழவேண்டும் என்ற போதனையினை செய்த அந்தவழியில் வந்த மங்களராம விகாராதிபதியை ஒரு தேரர் என்று கூறுவதில் நாகூசுகின்றது. அவர் ஒரு காவியுடை தரித்த காவாலி.கடையன் என்றுதான் நான் கூறுவேன். இன்று கௌதம புத்தர் உயிருடன் இருந்திருந்தால் குறித்த தேரரை உச்ச கோபம் காரணமாக மரத்தில் கட்டிவைத்து அடித்திருப்பார்.

தீபம் வாரஇதழில் முழுநேர தட்டச்சாளர் (பெண்கள்) தேவை. உடன் தொடர்புகொள்ளுங்கள். அலுவலக நேரங்களில் தொடர்புகொள்ளவும். 0768255562.

எந்த சீரியஸான விடயத்தையும் சிக்கலில்லாமல் நகைச்சுவையாக கிறுக்க ஆர்வமாக இருக்கிறீர்களா? அரசியல், சமூகம், ஆன்மீகம் எந்த எல்லையையும் தொடலாம். உடனே வரைய ஆரம்பியுங்கள். தரமானவை தீபம் வாரஇதழிலும், தீபம் இணையத்தளத்திலும் வெளியாகும். உங்கள் படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி

editor@deepam.lk



தமிழ்தேசியகூட்டமைப்பின் எம்.பி சரவணபவனுடன் நிகழ்வொன்றில் கலந்து கொண்டபோது

# அடுத்ததாக இறங்கும் பயணி தவராசாவா?

## தொடரும் ஈ.பி.டி.பியின் உள்கட்சி சிக்கல்

எஸ்.நிதர்சன்

சாண் ஏற முழம் சறுக்குமென்றொரு மூதோர் வாக்குண்டு. அது யாருக்குப் பொருந்துகிறதோ இல்லையோ ஈபிடிபிக்கு நன்றாக பொருந்துகிறது. ஈபிடிபி கட்சிக்குள்ள பெரிய பிரச்சனையே, ஓரடி முன்னால் வைத்தால் அதே வேகத்தில் பின்னால் சறுக்குவது. ஆரம்பம் முதல் இன்றுவரை அதுதான் நிலவரம். கட்சி ஒரு நிலையை எட்ட முடியாமல் தத்தளிப்பதற்கு பிரதான காரணம் இது.

விடுதலைப்புலிகளின் வீழ்ச்சியின் பின்னால் ஏற்பட்ட வெற்றிடம் அந்த கட்சிக்கு கிடைத்த சாதகம். எனினும், அவர்களால் அதை பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை. இதற்குள் மகிந்த மண் கவ்வஞ் அமைச்சர் பதவியும் கிடைக்காமல் போனது. இது போதாதென, அண்மைக்காலமாக கட்சி முக்கியஸ்தர்கள் வரிசையாக வெளியேற தொடங்கியுள்ளனர். நிறைய சவால்களை சந்தித்து வளர்ந்த கட்சிதான். ஆனால் அண்மைய தேய்மானங்கள் நல்லவிதமாக தெரியவில்லையென்பதுதான் பொதுவான அபிப்பிராயம்.

நெடுந்தீவு பிரதேசசபை தலைவராக இருந்த டானியல் றெக்சியன் கொலை, அப்போதைய மாகாணசபை எதிர்க்கட்சி தலைவராக இருந்த கட்சி முக்கியஸ்தர் கமலேந்திரனின் கைது மற்றும் கட்சியை விட்டு நீக்கல், சந்திரகுமார் வெளியேற்றம் என தொடர்ந்தது இப்போது தவராசா சர்ச்சையில் வந்து நிற்கிறது.

வடக்கு மாகாண எதிர்க்கட்சி தலைவர் பதவியிலிருந்து த்வராசாவை அகற்றிவிட்டு, கிளிநொச்சியை சேர்ந்த தவநாதனை நியமியுங்கள் என கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கடிதம் அனுப்பியதாக கடந்த திங்கள் கிழமை இணைய ஊடகங்களில் அரசல் புரசலாக செய்தி வெளியானது. ஆனால் அதற்கு முன்னர் ஞாயிற்றுகிழமையே சிறிதர் தியேட்டருக்குள் நடக்கும் லடாயை தீபம் மோப்பம் பிடித்து இணையத்தளத்தில் செய்தி வெளியிட்டது. தவராசாவை நீக்கி விட்டு தவநாதனை நியமியுங்கள் என கடிதம் எழுதிய விபரத்தை தீபம் வெளியிட்டது.

'எங்களுக்குள் எந்தப்பிரச்சனையும் இல்லை. எதிர்க்கட்சி தலைவர் பதவியை கிளிநொச்சிக்கும் இரண்டு வருடம் கொடுப்ப

தொடர்ச்சி அடுத்த பக்கம்



**சி.தவராசா**
எதிர்க்கட்சி தலைவர்
வடமாகாணசபை

**தீபம்: கட்சியின் முக்கிய உறுப்பினர் நீங்கள். உங்களிற்கும் கட்சிக்குமிடையில் பிரச்சனை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறதே?**

சி.தவராசா: முரண்பாடுகள் என்று பெரிதளவில் ஒன்றும் இல்லை. ஆனால் கருத்து வேறுபாடுகள் உள்ளன. என்னுடைய அரசியல் செயற்பாடுகள் அல்லது என்னுடைய வழி சிலநேரம் கட்சியினர் சிந்திக்கும் நடைமுறைக்கு மாறாக இருக்கலாம். அது கருத்து முரண்பாடு. அதேநேரம் கட்சியினர் சிலரது செயற்பாடுகள் தொடர்பில் நான் கட்சிக்குள்ளே விமர்சித்தும் இருக்கிறேன். அதை வெளியில் சொல்ல வேண்டிய விடயமல்ல. இது ஜனநாயகக் கட்சிகளில் சாதாரணமானது.

**தீபம்: சரி. நீங்கள் குறிப்பிடும் இந்த கருத்து முரண்பாடுகள் ஏன் ஏற்பட்டன?**

சி.தவராசா: ஒரு சம்பவமென்றில்லை. தொடர்ச்சியான பல சம்பவங்களைக் குறிப்பிடலாம். நான் மாகாணசபையின் செயற்பாடுகளை நன்றாக விமர்சிக்கிறேன். அதே நேரத்தில் 'தேசியரீதியில் முதலமைச்சரோ அல்லது சபையோ முன்னெடுக்கும் சரியான விடயங்களை ஆதரிக்கிறேன். இதுவும் சில கருத்து முரண்பாடுகளைத் தோற்றுவித்திருக்கிறது. 'நான் மாகாணசபையின் ஆளும் கட்சிக்கு சாதகமாகச் செயற்படுகின்றேன். எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு எல்லாவற்றையும் எதிர்க்காமல் இருப்பதாக கட்சிக்குள் அபிப்பிராயம்இருந்தது. ஆனால் அதை கட்சி உறுப்பினர்களுக்கு விளங்கப்படுத்தியிருக்கிறேன். புரிந்து கொள்வதும் புரிந்து கொள்ளாததும் அவர்களைப் பொறுத்தது.

**தீபம்: கருத்து முரண்பாடுதான் என்கிறீர்கள். ஆனால், கட்சித்தலைமைக்கும் உங்களிற்கும்முரண்பாடு, அதன் விளைவுதான் இந்த நீக்க கடிதம் என கூறப்படுகிறதே?**

சி.தவராசா: நீங்கள் கூறுவதைபோல தனிப்பட்ட ரீதியில் எனக்கும் கட்சித் தலைமைக்கும் இடையில் எத்தகைய முரண்பாடுகளும் இல்லை.

**தீபம்: அப்படி முரண்பாடு இல்லையென வைத்தால், ஏன் உங்களிற்கு தெரியாமல் எதிர்கட்சி தலைவர் பதவியை பறிக்க முயற்சிக்க வேண்டும்?**

சி.தவராசா: அதுவும் எனக்குத் தெரியாது. அந்த நடவடிக்கை எடுத்தவர்களிடமே அதை கேட்க வேண்டும்.

**தீபம்: இந்த கடிதம் தொடர்பான உங்கள் அபிப்பிராயம் என்ன?**

சி.தவராசா: கட்சி ஒரு வேண்டுகொளை விடுத்திருக்கிறது. அந்த வேண்டுகோள் நடைமுறைப்படுத்தப்படுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். இவ்வாறு வெண்டுகோள் விடுத்தவுடன் நடைமுறைப் படுத்த முடியாது. அதற்கான நடைமுறைகள் உள்ளன. அதற்கான அதிகாரங்களைக்கொண்டவராக தவிசாளர் இருக்கிறார். இவர் சபையில் அதற்கான நடவடிக்கையை எடுப்பார்.

**தீபம்: உங்களுடன் கலந்தாலோசிக்காமல் பதவியை மாற்ற முயற்சி நடக்கும் நிலையில், கட்சியுடன் தொடர்ந்து இயங்குவீர்களா?**

சி.தவராசா: இதுவரை நான் கட்சியுடன் தான் இருக்கிறேன். கட்சி எனக்கெதிராக எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. நான் ஏதாவது பிழை செய்ததாகவோ, கட்சியினுடைய கொள்கைகக்கு முரணாக நடந்ததாகவோ, கட்சியை விமர்சித்ததாகவோ எந்தவித குற்றச்சாட்டையும் என்மீது வைக்கவில்லை. நான் யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சார்ந்தவன். கிளிநொச்சியைச் சேரந்த சகஉறுப்பினர் தவநாதனுக்கு எதிர் கட்சி தலைவர் பதவியை வழங்க வேண்டுமென்றுதான் கடிதத்தில் கோரப்பட்டிருக்கிறது. நான் இப்போதும் கட்சி உறுப்பினர்தான்.

**தீபம்: அண்மைக்காலத்தில் ஈ.பி.டி.பியிருந்து சிலர் வெளியேறியுள்ளனர். உங்களை போன்றவர்கள் கட்சியைவிட்டு விலகுவது கட்சிக்கு பாதகமாக அமையாதா?**

சி.தவராசா: நான் கட்சியிலிருந்து விலகவில்லை. இதுவரை கட்சியிலிருந்து விலக்கப்படுவதாக எனக்கு அறிவிக்கப்படவும் இல்லை. ஆனபடியால் நான் கட்சியிலே இருக்கிறேன். நான் செய்கின்ற ஒவ்வொரு காரியமும் அதன் நன்மைகளும் கட்சிக்குத்தான் போய்ச் சேருகின்றதென்றே நான் கருதுகின்றென். கடந்த இரண்டு நாட்களாக எனக்கு நிறைய தொலைபேசி அழைப்புக்கள் வருகின்றன. பல நலன் விரும்பிகள் என்னுடன் தொடர்பு கொண்டிருந்தனர். கட்சிக்குத்தான் இது பாதகம் என்றுதான் அவர்கள் கவலைப்படுகிறார்கள்.

**தீபம்: கட்சி பற்றி அக்கறையுள்ள தென்றால், இந்த முரண்பாடுகளை வளரவிடாமல் கட்சித்தலைவருடன் உட்கார்ந்து பேசியிருக்கலாமே?**

சி.தவராசா: கருத்து வேறுபாடுகள் தொடர்பாக கட்சித் தலைமையுடன் தொடர்ந்து கதைத்து வருகிறேன். ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் விவகாரம் ஊடகங்களூடாக வெளியில் வந்ததன் பின்னர் இன்னும்; அவருடன் கதைக்கவில்லை. கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டபோது கட்சித் தலைமையுடனும் கட்சிக்குள்ளிருக்கின்ற குழு ஒன்றுடனும் கதைத்தும் இருக்கிறேன்.

**தீபம்: உங்களுடன் பேசாமல் எதிர்க் கட்சி தலைவர் பதவியில் மாற்றம் செய்ய கட்சி முயற்சிக்கிறது. நீங்கள் விட்டுக்கொடுப்பீர்களா? என்ன செய்யப்போகிறீர்கள்?**

சி.தவராசா: இல்லை. என்னிடம் கேட்டிருந்தால் நான் இராஜஜினாமா செய்திருப்பேன் என்றில்லை. ஆனால் ஒரு இணக்கப்பாட்டுக்குச் சென்று, விட்டுக்கொடுப்புக்களை செய்திருப்பேன். சகஉறுப்பினர் தவநாதனுடன் பேசி சில ஏற்பாடுகளை செய்திருக்கலாம். அது பிரச்சனைக்குரிய விடயமல்ல. ஆனால் இனி அவ்வாறு நடக்குமென்று நினைக்கவில்லை. என்னுடன் கலந்தாலோசிக்காமல் கட்சி தன்னிச்சையாக முடிவெடுத்துச் செய்ததற்குப் பின், விட்டுக்கொடுப்பை இனி செய்ய முடியுமா என்பதை உடனடியாகச் சொல்லமுடியாது.

தென்ற முடிவு முன்னரே இருந்தது. அதைத் தான் இப்பொழுது நடைமுறைப்படுத்து கிறோம். இது கட்சியின் முடிவு' என டக்ளஸ் தேவானந்தா கூறுகிறார்.

'நான் கட்சியின் முக்கியஸ்தன். எதிர்க் கட்சி தலைவர் பதவியை சுழற்சிமுறையில் பங்கிடுவதாக இதுவரை கட்சிக்குள் எழுத்து மூலமோ, வாய்மூலமோ பேசப்படவில்லை. ஜனநாயககட்சிக்குள் கருத்து முரண்பாடுகள் இருப்பது வழக்கம். ஆனால் எனக்கும் கட்சிக்குமிடையில் மோதல் இல்லை' என்கிறார் தவராசா.

இந்த இருவரும் அழுத்திக்கூற விரும்புவது கட்சிக்குள் எந்த பிரச்சனையும் இல்லையென்பதை. ஆனால், மேலதிகமாக வரும் ஒவ்வொரு வார்த்தையும் கட்சிக்குள் நடக்கும் புகைச்சலை நன்றாகவே வெளிச்ச மிடுகிறது.

தவரர்சாவை நீக்கிவிட்டு கிளிநொச்சியை சேர்ந்த மாகாணசபை உறுப்பினர் தவநாத னிற்கு அந்தப்பதவியை வழங்க வேண்டு மென்பது ஈ.பி.டி.பியின் நிலைப்பாடு. மாகாண சபைக்கு கமலேந்திரனும், தவநாதனும் தேர்வு செய்யப்பட்டார்கள். அவர்களிடையே எதிர்க்கட்சி தலைவர் பதவியை பங்கிடுவதாக இருந்தோம். அதற்குள் கமலேந்திரன் றெக்கிசயன் கொலைவழக்கில் கைதாகி சிக்கலை ஏற்படுத்தினார். ஆதனால் அப்போது மாற்றம் பற்றி யோசிக்கவில்லை. இப்போது பொறுத்தமான நேரம். ஆதனால் தவநாதனிற்கு பதவியை வழங்கப்போகிறோம் என்கிறது ஈ.பி.டி.பி தரப்பு.

ஈ.பி.டி.பி அங்கம் வகிக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரகூட்டமைப்பின் பொதுசெய லாளர் மகிந்த அமரவீரவிற்கும் கடிதம் அனுப்பியுள்ளனர். அவர் வடக்கு ஆளுன ருக்கு கடிதம் எழுதியுள்ளதுடன், அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானத்திற்கு பிரதியை அனுப்பியுள்ளார். 'எதிர்க்கட்சி தலைவர் மாற்ற விவகாரத்தில் ஆளுனரிற்கு எந்த அதிகாரமும் இல்லை, எனக்கு கடிதம் எழுதி னால் அது பற்றி யோசிக்கலாம்' என ஒரே போடாகபோட்டுவிட்டார் அவைத்தலைவர்.

ஈ.பி.டி.பிக்குள் நடக்கும் குத்துப்பாடாக மட்டுமல்லாமல் பலமுனை சிக்கலாக இந்த விடயம் உருவாகியுள்ளது என்பதையே மேற்படி நிகழ்வுகள் தெளிவாக்குகின்றன.

'எங்களுக்குள் எந்தப்பிரச்சனையும் இல்லை' என அடிக்கடி சொல்வதே எங்கப்பன் குதிருக்குள் இல்லை ரகம்தான். உண்மையில் இருதரப்பிற்கும் பிரச்சனை இல்லையா?

விடயமறிந்தவர்கள் கூறும் தகவல் பிரச் சனை உள்ளதென்பதே. இப்பொழுதல்ல கடந்த ஆறேழு மாதங்களாக நீடித்த புகைச்சல் இப்பொழுதுதான் பகிரங்க மாகியுள்ளதென்கிறார்கள். இதுபற்றிய தகவல்கள் அரசல்புரசலாக அடிக்கடி வெளி யாகிக் கொண்டுதானிருந்தது. உண்மையில் அந்த தகவலை முதன்முதலில் வெளியிட்டது தீபம் வாரஇதழ்தான். கடந்த 14.08.2016 இதழில் வெளியான 'சிறிதர் தியேட்டருக்குள் பேய் குடியிருக்கிறதா?' என்ற செய்திக்கட்டுரையில் 'தாவுவாரா தவராசா' என்ற உபதலைப்பில் சில விடயங்களை குறிப்பிட்டிருந்தோம். தவராசா தொடர்பில் ஈ.பி.டி.பிக்குள் எழுந்து வரும் அதிருப்தியையும், அதனால் தவராசா ஒதுங்கிச்செல்வதையும் அதில் குறிப்பிட்டிருந்தோம்.

எதிர்க்கட்சி தலைவர் பதவியை ஏற்றதிலிருந்து தவராசாவின் அணுகுமுறை ஈ.பி.டி.பியின் அணுகுமுறையிலிருந்து நிறைய வேறுபட்டது. தமிழ்தேசிய கூட்டமைப்பில் குற்றம் கண்டுபிடிப்பதே ஈ.பி.டி.பியின் அரசியலாக இருக்க, அதிலிருந்து மாறுபட்டு புதிய அரசியல்களமொன்றை தவராசா திறந்தார். தமிழ் அரசியல் பிரமுகர்களிற்குள் அரசியலமைப்பு சட்ட விவகாரத்தில் அதிக அறிவுடைய வெகு சிலரில் அவரும் ஒருவர். தற்போதைய வடமாகாணசபை உறுப்பினர்களில் அதிக நிபுணத்துவ தேர்ச்சி மிக்கவர் அவர்தான்.

மாகாணசபையின் நியதிச்சட்ட உருவாக்கம் உள்ளிட்ட பல விடயங்களில் முக்கிய பங்காற்றினார். எதிர்க்கட்சியென்றால் ஆளுங்கட்சி செய்யும் அத்தனையையும் எதிர்த்தே ஆகவேண்டு மென்ற தமிழ் அரசியல் பாரம்பரியத்திற்கு மாறாக, தவராசா செய்தது புதிய அரசியல். வுடக்கு முதல்வருடன் முக்கிய பல விடயங்களில் இணைந்தும், நெருங்கியும் செயற்பட்டார். விமர்சனங்கள் இருந்தால் அதனையும் பகிரங்கமாக வைத்தார். இதுதான் பிரச்சனையின் ஆரம்பமென்கிறார்கள்.

தமிழ்தேசிய கூட்டமைப்புடன் அவர் நெருங்கிச் செல்கிறார், தனியான அரசியல் பயணம் செய்ய முயல்கிறார் என்ற சந்தேகம்

**ஈ.பி.டி.பி கட்சிக்குள் ஒரு சூறாவளியே சத்தமில்லாமல் சுழன்றடித்துக் கொண்டிருக்கிறது. சந்திரகுமார், தவராசா போன்ற கவர்ச்சிமிக்க முகங்கள் கட்சியைவிட்டு வெளியேறுவது கட்சியை அதளபாதாளத்திற்கு விழுத்திவிடலாம்**

கட்சிக்குள் உருவாகியுள்ளது. கட்சித்தலை மையை சுற்றியிருந்த சிலர் தவராசாவின் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் வேறு அர்த்தம் சொல்லி, தினம்தினம் மந்திர மோதுவதை போல ஓத, இயல்பாகவே தவராசாவுட னான இடைவெளி விழுந்துவிட்ட தென் கிறார்கள் தவராசாவின் ஆதரவாளர்கள்.

கட்சி முக்கியஸ்தர்கள் பலரிடம் தவராசா தனித்தவில் வாசிக்க எத்தனிக்கிறார் என்ற சந்தேகம் இருப்பதை அவதானிக்க முடிந்தது. ஆனால் அவர்கள் அதை முன்னிலைப்படுத்தாமல், 'கட்சி தீர்மானம். அதை தவராசா ஏற்கத்தானே வேண்டும்' என பேசுகிறார்கள்.

ஆனால் தவராசா எதிர்க்கட்சி தலைவர் பதவியை இலகுவில் விட்டுக்கொடுக்க தயார் இல்லையென்பதே இப்போதைய நிலை. 'கட்சியின் தீர்மானம் என்றாலும், அதை நேரடியாக என்னிடம் பேசியிருக்கலாம். அப்படி பேசியிருந்தால் நானே பதவியை விட்டுக் கொடுத்திருப்பேன். ஆனால் கட்சி அப்படி நடந்து கொள்ளவில்லை. ஐக்கிய மக்கள் சுதந்திரகூட்டமைப்பிற்கு கடிதம் எழுதி, அதன் பிரதியொன்றைத்தான் எனக்கும் அனுப்பினார்கள். கட்சி இப்படி நடந்து கொண்டதன் பின், இனி பதவியை விட்டுக்கொடுக்கும் வாய்ப்பில்லை' என உறுதியாக கூறுகிறார் தவராசா.

'ஈ.பி.டி.பி கட்சி தனிநபர்களை நம்பிய கட்சியல்ல. கமலேந்திரன் காலத்திலேயே பதவியை சுழற்சிமுறையில் வழங்குவதென எடுத்த முடிவை இப்பொழுது நடை முறைப்படுத்துகிறோம். இது கட்சி எடுத்த முடிவு. அவர் அதை ஏற்கத்தான் வேண்டும். ஏற்காமல் முரண்டுபிடித்தால் கட்சியின் முடிவை அவர் ஏற்கவில்லையென்றாகும். அப்படியான நிலை வந்தால் அந்த சமயத்தில் என்ன முடிவெடுப்பதென தீர்மானிப்போம்' என்கிறது ஈ.பி.டி.பி.

மொத்தத்தில் ஈ.பி.டி.பி கட்சிக்குள் ஒரு சூறாவளியே சத்தமில்லாமல் சுழன்றடித்துக் கொண்டிருக்கிறது. சந்திரகுமார், தவராசா போன்ற கவர்ச்சிமிக்க முகங்கள் கட்சியைவிட்டு வெளியேறுவது கட்சியை அதளபாதாளத்திற்கு விழுத்திவிடலாம் என கட்சியின் கடைநிலை தொண்டன் பதைபதைத்துக் கொண்டிருக்க, 'எமது பயணம் ஒரு இரயில் பயணம்போல. யாரும் ஏறலாம். இறங்கலாம். இரயில் யாருக்காகவும் பயணத்தை நிறுத்தாது' என தத்துவம் பேசுகிறார் டக்ளஸ் தேவானந்தா.

இந்த வார்த்தைப் போர் எதில் போய் முடியும்?

---

**டக்ளஸ் தேவானந்தா**
செயலாளர் நாயகம்
ஈழமக்கள் ஜனநாயக கட்சி

**தீபம்: ஏன் இந்த முடிவு?**

**டக்ளஸ்தேவானந்தா:** வடமாகாணசபை தேர்தல் முடிந்ததும் கட்சி ஒரு தீர்மானம் எடுத்தது. கமலேந்திரன், தவநாதன் ஆகிய இரண்டு உறுப்பினர்கள்தான் எமது கட்சியிலிருந்து தெரிவானார்கள். சுழற்சி முறையில் எதிர்கட்சி தலைவர் பதவியை வழங்குவதாக முடிவெடுக்கப்பட்டது. கிளிநொச்சி மக்களிற்கும் ஒரு சந்தர்ப்பம் வழங்கத்தானே வேண்டும். அப்போதுதான் கமலேந்திரன் பிரச்சனை வந்தது. அதற்கு நடவடிக்கை எடுத்தோம். கமலேந்திரன் இருந்தபோது கட்சி எதை தீர்மானித்ததோ, இப்போது தவராசா இருக்கும்போது அதைதான் நடைமுறைப்படுத்துகிறோம். கமலேந்திரனை கட்சியை விட்டும் விலக்க தீர்மானித்தோம். ஆனால் தவராசாவை கட்சியைவிட்டு விலக்க தீர்மானிக்கவில்லை.

**தீபம்: கட்சிக்கும் தவராசாவிற்குமிடை யில் முரண்பாடு உள்ளது, அதனால்தான் இந்த மாற்றமென்கிறார்களே?**

**டக்ளஸ் தேவானந்தா:** முரண்பாடு இருக்கிறதாஇல்லையானஎன்பதுபிரச்சனை யல்ல. வீட்டுக்கு வீடு வாசல்படி தானே இப்ப. எந்தக் கட்சிக்குள் பிரச்சனை யில்லை?. ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பிரச்சனையில்லையா... சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பிரச்சனையில்லையா... ஜேவிபிக்குள் பிரச்சனையில்லையா... ஏன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிக்குள் தான் பிரச்சனையில்லையா? ஜனநாயகச் சூழலுக்குள் அவ்வாறு பிரச்சனை வருவது இயல்பு. இந்த தீர்மானத்திற்கும் முரண் பாட்டிற்கும் எந்தச் சம்மந்தமும் இல்லை.

**தீபம்: கட்சி முடிவு சரி. அவர் உங்கள் கட்சி உறுப்பினர். அவருடன் கலந்துபேசி மாற்றம் செய்திருக்கலாமே. தன்னிடம் பேசவில்லையென தவராசா கூறியுள்ளாரே?**

**டக்ளஸ் தேவானந்தா:** இது கட்சி எடுத்த முடிவு. தனக்கு அறிவிக்கவில்லையென அவர் ஏன் சொல்கிறார் என்றே தெரிய வில்லை. இது இன்று நேற்று எடுத்த முடிவல்ல. மாகாணசபை தொடங்கிய போது எடுக்கப்பட்டது. கட்சி எடுத்த முடிவிற்கு செயலாளர் நாயகமென்ற வகையில் என்னுடைய பொறுப்பு நடை முறைப் படுத்துவது தானே. அவருக்கு அறிவிக் கப்படவில்லை என நான் நினைக்கவில்லை. இது எல்லோரும் சேர்ந்து எடுக்கிற முடிவு. இந் முடிவெடுத்தபோது அவர் அவர் மாகாணசபை உறுப்பி னராக இருக்கவில்லை. அதனால் இந்த விடயம் பேசிய கூட்டத்தில் அவர் கலந்து கொண்டாரா இல்லையான என்பது எனக்கு ஞாபகத்தில் இல்லை. ஏனெனில் இது சுன நாளைக்கு முன்னர் நடந்தது தானே. கட்சிக் கூட்டங்கள் பல நடப்பதால் அவர் எந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார், எந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்பது எனக்கு ஞாபகத்தில் இல்லை. அவருக்குத் தெரியாது என்று சொல்வதில் பிரச்சனையில்லை. ஏன் அவர் அப்படி தனக்குத் தெரியாது என்று சொல்வது அவருக்குத் தான் வெளிச்சம்.

இந்த எதிர்க்கட்சித் தலைவர் பதவி சட்டபூர்வமானது அல்ல. அது ஒரு ஏற்பாடு. அதைத் தீர்மானிப்பது எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் தான். மாகாணசபையில் ஐக்கியமக்கள் சுதந்திரக்கூட்டமைப்புத்தான் எதிர்க்கட்சியாக இருக்கிறது. ஆகவே அவர்கள் தான் அதனைத் தீர்மானிப் பார்கள். அதை நடைமுறைப்படுத்து வதுதான் மாகாணசபை.

அவைத் தலைவர் இப்ப ஏதோ கூறியிருக்கிறார் என அறிகிறேன். எதிர்க் கட்சித் தவைராக இருந்த கமலேந்திரனை நீக்கும்போது அப்போதைய பொதுச் செயலாளராக இருந்த சுசில் பிரேமஜெயந்த தனக்குத்தான் கடிதம் அனுப்பியதாகவும், இப்போது ஆளுநருக்கு கடிதம் அனுப்பி தனக்கு கொப்பி போட்டிருக்கிறார்கள். ஆனால் தனக்குத் தான் அனுப்பியிருக்க வேண்டுமென்றும் அவர் கூறியதாக சொல்கின்றனர். அவர் நடவடிக்கை எடுப்ப தென்றால் தனக்குத் தான் வரவேண்டு மென்று சொல்லுகிறார்.

எதிர்கட்சி தலைவர் யார் என்பதை மாகாணசபை ஆளும் கட்சி தீர்மானிப்பதில்லைத்தானே . எதிர்த் தரப்புத்தானே தீர்மானிப்பது. எதிர்த்தரப்பில் நாங்கள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இருப்பதால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு கடிதம் அனுப்பியிருக்கிறோம். அவர்களும் அதற்கான நடவடிக்கையை எடுக்கின்றனர்.

**தீபம்: தன்னுடன் கலந்தாலோசிக்காமல் கட்சி இந்த முடிவெடுத்ததால் இனி எதிர்க் கட்சிதலைவர் பதவியை விட்டுக்கொடுக்க மாட்டேன் என தவராசா கூறியுள்ளாரே?**

**டக்ளஸ் தேவானந்தா:** சூழல்தான் இனித் தீர்மானிக்க வேண்டும். அவர் முரண்பட்டால் அந்தச் சூழல் அதனைத் தீர்மானிக்கும். இது கட்சியின் முடிவு. கட்சியின் முடிவுடன் அவர் முரண்பட்டால் அவர் கட்சிக்கு முரணாகப் போகின்றார் என்றுதான் அர்த்தம். இனி அவரைப் பொறுத்தது. தேவையெனில் இனி கட்சி ஒரு குழு அமைத்து அவரைக் கூப்பிட்டு கதைக்கும். இவை எல்லாம் அடுத்த அடுத்த கட்ட நடவடிக்கைகள்.



கமலேந்திரனை கட்சியிலி ருந்தும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்தும் நீக்கும் போது அவரைக் கேட்டா எடுத்தது? இல்லைத் தானே. அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை குறிப் பிட்டு, குறிப்பிட்ட திகதிக் குள் பதில் தரும்படியும், இல்லையெனில் விலக்கப் படுவதாகவும் அறிவித்தோம். அதனை தவராசாதான் முன்னின்று செய்தது. அப்போது யாரும் சிறைக்கு சென்று கமலேந்திரனுடன் கதைத்தோமா? அப்படி யாரும் எதிர்பார்க்க முடியாதுதானே.







# ‘மஞ்சள் தண்ணீரில் நீராட்டி கொன்றேன்’

## புதையலுக்காக பிள்ளைகளை பலிகொடுத்த தந்தை

மாடஸ்தி

கன்னியா காட்டுப்பகுதியில் புதையல் இருக்கிறது. அதனை எடுப்பதென்றால் இரண்டு பிள்ளைகளையும் பலி கொடுக்க வேண்டும் என எனக்கு கடவுள் சொன்னார். பிள்ளைகளை பலிகொடுக்க தருமாறு கேட்க மனைவி மறுத்தாள். அதனால் இருவருக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. அதற்கு பின்னர் என்ன நடந்ததென தெரியவில்லை “இப்படி வாக்குமூலமளித்துள்ளார் திருகோணமலையில் மனைவியையும் இரண்டு பிள்ளைகளையும் வெட்டிக்கொல்லப்பட்ட விவகாரத்தில் கைதுசெய்யப்பட்டுள்ள ராஜலஷ்மன்.

வெட்டிக்கொல்லப்பட்ட நித்தியாவின் அக்காவின் வாக்குமூலத்தில், கணவன் ராஜலஷ்மன் புதையல் பைத்தியத்தில் திரிகிறார். பிள்ளைகளுக்கு ஏதும் ஆகிவிடுமோ என நித்தியா கூறியதாக வாக்குமூலமளித்துள்ளார்.

கடந்த 13ம் திகதி திருகோணமலையை உலுக்கிய சம்பவம் இந்த முக்கொலை. கன்னியா உப்புவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட 4ம் ஒழுங்கையில் நடந்த கோரத்தில் மனைவி, இரண்டு பிள்ளைகளை துடிக்கதுடிக்க வெட்டிக் கொன்ற சம்பவத்தில் கணவன் கைதாகியுள்ளான். ராஜலஷ்மன் நித்தியா (32), ராஜலஷ்மன் காயத்ரி (10), ராஜலஷ்மன் சந்தியா (08) ஆகியோரே வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர். இந்த கொலைக்கு என்ன காரணமென ஆரம்பத்தில் மர்மம் நீடித்தாலும், மூடநம்பிக்கைதான் காரணமென்ற அதிர்ச்சி தகவல் இப்பொழுது வெளியாகியுள்ளது.

அந்த குடும்பம் மிக அமைதியாக வாழ்ந்து வந்தது. குடும்பத்தில் எந்த சிக்கலும் இல்லை. கடந்த ஏழு மாதங்களாகத்தான் சிறிய பதற்றம் கொல்லப்பட்ட நித்தியாவிற்கு இருந்தது. காரணம் கணவன் ராஜலஷ்மன் வேலைக்கு செல்வதில்லை.

ராஜலஷ்மன் (34) ஒரு மேசன் தொழிலாளி. மிகுந்த இறைநம்பிக்கையுடையவர். மந்திர விவகாரங்களில் ஈடுபாடுடையவர். இவருக்கு துரதிஸ்டமான சம்பவம் நிகழ்ந்தது. அது, அவரது தாயாரை தந்தை அடித்துக் கொன்றதென கூறப்படுகிறது.

கடந்த ஏழு மாதங்களாக வேலைக்கு செல்லாமல் வீட்டிலிருந்தபடியே பூசை வழிபாடுகளில் ஈடுபட்டு வருகிறார். அவரது வீட்டுக்கருகில் வசிக்கும் ஒருவரும் இதனை பொலிசாரிடம் உறுதிசெய்துள்ளார்.

பிள்ளைகளின் மேல் ராஜலஷ்மன் அன்பாகத்தான் நடந்து கொண்டார். பிள்ளைகளை தினமும் பாடசாலைக்கு கூட்டிச் சென்று, பின்னர் முச்சக்கரவண்டியிலேயே அழைத்து வருவதை வாடிக்கையாக கொண்டிருந்தார்.

ஆரம்பத்திலிருந்து இறைநம்பிக்கையில் அதிக ஈடுபாடுள்ள ராஜலஷ்மன், அண்மைக் காலமாக மந்திரம், சூனியம் என்பவற்றிலும் ஈடுபாடு காட்ட தொடங்கினார். இவற்றில் கைதேர்ந்த சிலருடன் நெருக்கமான பின்னர், நாள் முழுவதையும் அவற்றிலேயே செலவிட தொடங்கினார்.

அவர்களின் வீட்டுக்கு பக்கத்தில் பெரிய கல்மலையொன்று உள்ளது. அதில் மனித முகத்தை போன்ற உருவமொன்று தெரிவதாக கூறப்படுகிறது. தினமும் அந்த உருவத்தை நீண்டநேரம் பார்த்துக் கொண்டிருப்பதை ராஜலஷ்மன் வழக்கமாகவைத்திருந்தார். அந்த கல்மலைக்கு ஏதோ அதிசய சக்தி உள்ளதாக அவர் நம்பினார். அவர்களது வீட்டு வளாகத்தில் சிறிய கோயிலொன்றும் உள்ளது. அந்த கோயிலுக்கு பூசை செய்வதிலும் அதிக நேரத்தை செலவிட தொடங்கியுள்ளார்.

கடந்த மாதம் செல்வநாயகபுரம் புளியங்குளம் பகுதியிலுள்ள வராயம்மன் கோயிலில் பூசை நடந்தபோது, அங்கு வந்த ராஜலஷ்மன் உடைகளை களைந்து நிர்வாணமாக நின்றுள்ளார். அடிக்கடி தன்னை மறந்து மெய்மறந்த நிலைக்கு அவர் செல்வதாக ஊரில் சொல்கிறார்கள். அவர் பித்து மனநிலையில் இருந்திருக்கலாமென்றும் கூறுகிறார்கள்.

அருகில் பெரும் புதையல் உள்ளதாகவும், கனவில் தனக்குசொல்லப்பட்டதாகவும் அவர் மனைவியிடம் அடிக்கடி கூறியிருக்கிறார். அந்த புதையலை எடுப்பதெனில் இரண்டு பிள்ளைகளையும் பலி கொடுக்க வேண்டுமென்றும் கூறியுள்ளார். இதனால் அதிர்ச்சியடைந்த பின்னரே, தனது அக்காவிடம் கொல்லப்பட்ட நித்தியா “புதையல் பைத்தியத்தில் திரிகிறார். பிள்ளைகளிற்கு ஏதும் நடந்துவிடுமோ என பயப்பிடுகிறேன்” என கூறியுள்ளார்.

அருகிலிருக்கும் அக்கா வீட்டிற்கு அவர்கள் அடிக்கடி செல்வது வழக்கம். சம்பவ தினத்திலன்றும் அங்கு சென்றுள்ளானர். தாயார், சகோதரி அலுவலக வெளியில் சென்றதன் பின்னரே விபரீதம் நிகழ்ந்துள்ளது.

“இரண்டு பிள்ளைகளையும் மஞ்சள் தண்ணீரால் குளிக்க வைத்தேன். அவர்களை பலி கொடுக்க தீர்மானித்தேன். மனைவிக்கு தெரியாமல் இடுப்பில் வாளை மறைத்து வைத்திருந்தேன். கதவு இரண்டையும் மூடி விட்டு, பிள்ளைகளை பலி கொடுக்க போகிறேன் என்றேன். மனைவி அதற்கு உடன்படவில்லை. அவர் சண்டைபோட ஆரம்பித்தார். வாக்குவாதத்தின் உச்சத்தில் என்ன நடந்ததென தெரியவில்லை” என அவர் கூறியதாகவும் கூறப்படுகிறது.

பிள்ளைகளை வெட்டி கொன்றுவிட்டு, அவர்களின் இரத்தத்தை வீட்டின் நான்கு மூலைகளிலும் தெளித்ததாகவும் கூறப்படுகிறது.

ஓரிரண்டு நிமிடங்கள்தான் அவர்களின் அவலக்குரல் கேட்டது. பின்னர் அடங்கி விட்டது. அயலவர்கள் ஓடிவந்து, ஏதோ வீபரீதம் நடக்கிறதென வெளியில் சென்ற சகோதரிக்கும், பொலிஸ் அவசர எண்ணிற்கும் அறிவித்துள்ளனர். உப்புவெளி பொலிசார் அங்கு விரைந்து வந்து, வீட்டு சிற்றை கழற்றி உள்ளே பார்த்தபோது, வீடு இரத்த வெள்ளத்தில் இருந்தது. கைது செய்யப்பட்ட ராஜலஷ்மன் நிர்வாண கோலத்தில் கையில் வாளுடன் நின்றுள்ளான். உள்ளே யாரும் நுழையக்கூடாதென எச்சரிக்கை விட்டதாகவும் கூறப்படுகிறது.

எனினும், பின்னர் பொலிசார் அவனை மடக்கிப்பிடித்தனர்.

அவரை நீதிமன்றத்தில் நிறுத்தியபோது விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.







# மட்டக்களப்பு மயிலந்தனை மக்களுக்கு விடிவு காலம் உண்டா?

ந.குகதர்சன்

யுத்தத்தின் பின்னான அபிவிருத்திகள் நகரத்தை மையப்படுத்தியதாகவே அமைந்து வருகின்றன. அதனால் கிராமப் புறங்கள் பெரும் புறக்கணிப்பை சந்திக்கின்றன. அப்படியான ஒரு கிராமம்தான் புணானை.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக் கிராமமான கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலும், ஓட்டமாவடி பிரதேச சபை எல்லைப் பிரிவிலும் காணப் படும் புணாணை கிராம சேவகர் பிரிவிற்குட்ட மயிலந்தனை கிராமமானது இரண்டு பிரிவுகளை உள்ளடக்கிய கிராமமாக காணப்படுகின்றது.

இக்கிராமத்தில் சுமார் 90 குடும்பங்கள் வாழ்ந்து வருவதாக தெரிவிக்கின்றனர். இக்கிராமமானது 1992ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9ம் திகதி ஆயுதத்துடன் வந்தவர்கள் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் அடங்கலாக 35 பேரை துப்பாக்கிச் சூட்டில் கொலை







செய்து குவித்த சம்பவம் இக்கிராம மக்களை பெரிதும் பாதித்துள்ளது.

இக்கிராமத்தின் அடிப்படை தேவையாக காணப்படும் குடிநீர் பிரச்சனை, மின்சாரப் பிரச்சனை, போக்குவரத்துப் பிரச்சனை, மலசலகூடப் பிரச்சனை, வைத்திய வசதிகள், பாடசாலை வசதிகள், யானைப் பிரச்சனை என பல்வேறுபட்ட பிரச்சனைகளுக்கு மத்தியில் இன்னும் வாழ்ந்து கொண்டு வருகின்றனர்.

இருள் சூழ்ந்து விட்டால் இக்கிராமத்திற்கு யானைகள் ஊடுருவல் காணப்படுவதுடன், வேலிகள் மற்றும் தற்காலிக கொட்டில் வீடுகள், பயிர் செய்கைகள் என்பவற்றை அழித்துவிட்டு எங்களுக்கு பயத்தை காட்டிவிட்டு செல்கின்றது. இப்பிரதேசத்தில் மின்சார தூண்கள் அமைக்கப்பட்டு மின்சார வயர்கள் பொருத்தப்பட்டு, வீதிகளுக்கு மின்குமிழ்கள் போடப்பட்டுள்ளது. ஆனால் இதுவரை மின்சார வசதிகளை எங்களுக்கு ஏற்படுத்தி தரவில்லை. சில இடங்களுக்கு வழங்கியுள்ளார்கள் என்கின்றனர்.

மின்சார விளக்குகள் பொருத்தப்பட்டவற்றை ஒளிரச் செய்து தருவதோடும், மேலும் எங்களது வீடுகளுக்கும் மின்சார இணைப்பை ஏற்படுத்தி தந்தால் நாங்கள் யானையின் தாக்குதலில் இருந்தும், பாம்புகளின் தொல்லைகளில் இருந்தும் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

இக்கிராமத்தில் கல்வி பயிலும் மாண வர்கள் பாடசாலைக்கு நடையாக செல்வதால் இவர்கள் நான்கு கிலோ மீற்றர் தூரம் செல்வது கஷ்டமாக காணப்படுவதால் மாணவர்களின் கல்வி இடைவிலகல் நிலை அதிகரித்த வண்ணம் காணப்படுகின்றது. ஆகவே இம்மாணவர்களுக்கு தேவையாக போக்குவரத்து வசதிகளோ அல்லது பாட சாலைவசதிகளோ ஏற்படுத்தி கொடுக்க வேண் டியது பாரிய கடமையாக காணப்படுகின்றது.

இக்கிராமத்திற்குள் செல்லும் பாதை யானது குன்றும் குழியுமாக பாதி மணல் நிறைந்த வீதியாக காணப்படுவதுடன், போக்குவரத்துப் பிரச்சனையும் ஏற்படுகின்றது. கிழக்கு மாகாண சபையினால் வீதிகள் பல புனரமைப்பு செய்யப்படுகின்றது. ஆனால் இக்கிராம வீதிகளை புனரமைப்பு செய்வதற்கு யாரும் இதுவரை முன்வரவில்லை. தேர்தல் காலங்களில் மாத்திரம் அரசியல் வாதிகள் வருகின்றனர். ஆனால் பின்னர் இக்கிராமத் திற்கு வருவதை காணக்கூடியதாக இல்லை என மக்கள் விரக்தியில் தெரிவிக்கின்றனர்.

இக்கிராமத்தில் குடிநீர் பிரச்சனை முக்கிய பங்கு வகிக்கின்றது. இங்கு சில வீடுகளில் மாத்திரம் கிணறு காணப்படுகின்றது. அதுவும் கோடை காலங்களில் வற்றி விடுகின்றது. அத்தோடு வயல் நிலத்தை அண்டிய பகுதியில் பொதுக் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் அக்கிணறு குளிப்பதற்கு மாத்திரம் பயன்படுகின்றது. குடி நீரைப் பெறுவதற்கு மக்கள் பெரிதும் இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

சில வேளைகளில் பிரதேச சபையால் பவுசர் மூலம் தண்ணீர் வழங்குவார்கள். அதுவும் குறிப்பிட்ட இடத்திற்கு வழங்கி விட்டு சென்று விடுவார்கள். சிலருக்கு அதுவும் கிடைப்பதில்லை. குடி நீரைப் பெறுவதாயின் வேறு கிராமத்திற்கு சென்று நீரைப் பெற்றுக் கொள்ள வேண்டிய தேவைப்பாடு காணப்படுகின்றது என்கின்றனர்.

இக்கிராமத்திற்கு பொதுக்கிணறு அமைக்கும் பணியில் ஒரு வருடத்திற்கு முன்னர் கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபையினால் குழி தோண்டப்பட்டது. ஆனால் இன்றுவரை அக்குழியில் நீர் காணப்படுகின்றது. ஆனால் இது வரைக்கும் பிரதேச சபையினால் கிணறு அமைக்கப்படவில்லை.

இக்குழி தோண்டப்பட்ட ஒரு வருடத் திற்குள் பத்துக்கு மேற்பட்ட சிறுவர்கள் தவறி விழுந்துள்ளனர். பொதுமக்களின் உதவியால் இவர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர். ஆகவே இக்குழியை மூடியோ அல்லது இவ்விடத்தில் பொதுக் கிணறு ஒன்றை அமைத்து எங்களுக்கு குடிநீர் வசதியை ஏற்படுத்தி தருமாறு மக்கள் கோருகின்றனர்.

இக்கிராமத்து மக்களுக்கு இரவு நேரங்களில் நோய் வாய்ப்படும் பட்சத்தில் காட்டு யானையின் பாதையை ஊடறுத்து பிரதான வீதிக்கு சென்று அங்கிருந்து பல மைல் தூரம் வைத்தியசாலைக்கு செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது. அத்தோடு இங்கு எந்தவித வைத்திய முகாமும் நடைபெறுவதில்லையென மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இம்மக்கள் குடியமர்த்தப் பட்ட வேளையில் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையினால் ஒரு குடும்பத்திற்கு இரண்டரை ஏக்கர் காணி 42 குடும்பங்களுக்கு வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் வழங்கப்பட்டு இன்று அக்காணியினை அம்மக்களிடம் இருந்து மீளப்பெற்று அறபுக் கல்லூரி ஒன்று கட்டப்பட்டு விட்டதாகவும், தங்களுக்கு கிரான் பிரதேச செயலகப் பிரிவில் ஒன்றரை ஏக்கர் காணி தருவதாக காட்டியும் அக்காணிக்கான சட்ட ரீதியான எந்த ஆவணமும் இதுவரை வழங்காது இழுத்தடித்து வருவதாகவும், தமிழ் அரசியல்வாதிகள் கரிசனை காட்டாமல் இருப்பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இக்கிராமத்திற்கு ஒரு பக்கத்தில் கிராமத்திற்கு ஒரு வேலைத் திட்டத்ினூடாக கொங்கிறீட் வீதி அமைக்கபபட்டுள்ளது. ஆனால் இவ்வீதியானது உடைந்து காணப்படுகின்றது.

எனவே யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புலம் பெயர் உறவுகள் மற்றும் அரசாங்கம் பல உதவிகளை வழங்கி வருகின் றனர். அந்த வகையில் இக்கிராம மக்களின் நலன் கருதி தங்களால் இயன்ற உதவிகளை வழங்கி மக்கள் மனதில் பதிந்துள்ள யுத்த வடுக் களை அகற்ற வழிவகுக்க வேண்டும். மேலும் அரசியல் வாதிகள் பேச்சளவில் தங்களுடைய அரசியலை கொண்டு செல்லாமல் வேறு இடங்களுக்கு உதவிகள் வழங்குவது போன்று இக்கிராமத்திற்கும் சென்று பார்வையிட்டு அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவது காலத்தின் கட்டாயமாக உள்ளது.

கிழக்கு முதலமைச்சர் அடிக்கடி கூறுகின்றார் கல்குடா தொகுதியை முற்றுமுழுதாக அபவிருத்தி செய்வேன் என்றும், எந்தவித இன பாகுபாடுமின்றி சேவையை வழங்குவேன் என்று கூறுகின் றார். ஆகவே கல்குடாத் தொகுதிக்குட்பட்ட மயிலந்தனை கிராமத்தையும் தங்கள் அபிவிருத்தியில் சேர்த்து அபிவிருத்தி செய்ய முன்வருவாரா?





HOTEL FEATURES

24Hr Room Service | Garden | Wi Fi | LCD Tv with International Channels | Tea / Coffee Maker | Complete Room Amenities | Complete Bathroom Amenities | Rent a Cars, Motor Bike & Bicycle Facilities


தரமான சுவையான உணவுகள் / பாரம்பரிய யாழ்ப்பாண உணவுகள் / கடல் உணவுகள் / வெளிநாட்டவர்கள் விரும்பும் உணவுகள் / ஓடர் மூலம் உணவுகளை பெற்றுக்கொள்ளலாம்...

Luxury Room | Semi - Luxury Room | A/C Room | Non A/C Room

No. 86, Point Pedro Road, Jaffna, Sri Lanka.
Tel : +94 21 221 7770 | Fax : +94 21 221 7727 | Mobile : +94 77 256 1990
E-mail : stationgardenmotelj@gmail.com

**ஓடி ஓடிப் படிக்கணும்னு சொல்வார்கள். அதில் உள்ள சந்தோசமே தனி. அனுபவிக்க ரெடியானவர்கள் இல.1க்கு பார்வையைத் திருப்புங்கள்.**

நிலவன்




**1**
தமிழின் முதலெழுத்துக்கள் எத்தனை? 12 என்பவர்கள் 18க்கும், 30என்பவர்கள் 05க்கும், 18 என்பவர்கள் 29க்கும் செல்லுங்கள்

**4**
கரெக்ட். வெள்ளி தான் சரியான பதில். உங்களுக்கான அடுத்த கேள்வி 13ல் ரெடி..

**3**
தவறு. சரியான விடைக்கு மிஸ்டர் 17ஐ நாடவும்.

**6**
தவறு. ஆம்பள படத்தில் தான் அவர் அறிமுகமானார். இப்போது 26க்குச் சென்று அடுத்த கேள்வியைச் சந்தியுங்கள்.

**8**
சிலி தப்பான பதிலாச்சே. சீனா தான் சரியான பதில். இப்போது 14க்குச் செல்லுங்கள் பார்க்கலாம்.

**5**
வாழ்த்துக்கள். இதுவே சரியான பதில். அடுத்த கேள்வி 20இல்.

**2**
இல்லை. மிகவும் சிறிய கோள் தான் புதன். சரியான விடை அறிய 09க்கு செல்லுங்கள்.

**9**
வாவ். பூமி தான் சரியான பதில். இப்போது நேரே 16க்குச் செல்லுங்கள் பார்க்கலாம்.

**7**
பிழை. 27க்கு செல்லுங்கள். விடை தெரிந்து விடும்.

**10**
கழுகு அல்ல புலி தான் சரியான பதில்.
அடுத்த கேள்விக்கு 22ஐ நாடுங்கள்.

**11**
தவறு. சரியான விடைக்கு 27க்குச் செல்லுங்கள்.

**15**
தவறு. பூமி தான் விடை. 16இல்; உள்ள கேள்வியிலாவது பாஸ் ஆகுங்கள்.

**13**
காகிதத்தைக் கண்டுபிடித்த நாடு எது? பிரேஸில் என்றால் 19ற்கும், சீனா என்றால் 23ற்கும், இந்தியா என்றால் 25ற்கும், சிலி என்றால் 08ற்கும் ஓடுங்கள்.

**16**
ஹிப்ஹாப் முதலில் இசையமைத்த படம் எது? தனி ஒருவன் எனின் 28க்கும், ஆம்பள எனின் 24க்கும், இன்று நேற்று நாளை எனின் 06க்கும் செல்லுங்கள்.

**19**
தவறு. சரியான விடை 23இல்.

**14**
இந்த வார அறிவுப் பயணம் இனிமையாக இருந்திருக்கும் என்று நம்புகின்றேன்.மீண்டும் அடுத்த வாரம் சந்திக்கலாம்.டீலந டரலள.

**17**
புலி தான் கரெக்ட். அடுத்த கேள்வி 22ல்.

**12**
தவறு. வெள்ளி தான் அதி வெப்பமான கோள். அடுத்த கேள்விக்கு 13க்கு செல்லுங்கள்.

**18**
உயிரெழுத்துக்கள் தான் 12. முதலெழுத்துக்கள் 30. சந்தேகம் தீர்ந்ததா? உடனடியாக 20க்குச் செல்லுங்கள்.

**20**
மனித உடலின் மிகப் பெரிய சுரப்பி எதுவென்று தெரியுமா? இரப்பை எனின் 11க்கும், கல்லீரல் எனின் 27க்கும், சதையி எனின் 07க்கும் செல்லுங்கள் பார்க்கலாம்.

**21**
சூரியக் குடும்பத்தில் அடிக்கடி இடம்பெயரும் கோள் எது? நமது பூமி தான் என்றால் 09க்கும், புதன் தான் என்றால் 02க்கும், இல்லை செவ்வாய் தான் என்றால் 15க்கும் விரையுங்கள்.

**28**
தனி ஒருவன் அவரின் 2வது படம். விடை அறிய 24க்கு விரையுங்கள்.

**25**
தவறு. 23ல் சரியான விடை காத்திருக்கின்றது.

**27**
கரெக்ட். கல்லீரல் தான் சரியான பதில். இப்போது நீங்கள் 21க்கு செல்ல வேண்டியிருக்கின்றதே.

**23**
கரெக்ட். சீனா தான் சரியான பதில். இப்போது 14க்கு செல்லுங்கள்.

**24**
கரெக்ட். ஆம்பள தான் சரியான பதில். அடுத்து 26க்கு செல்லுங்கள்.

**26**
சோழ மன்னரகளின் கொடியில் இருக்கும் சின்னம் எது? புலி என்பவர்கள் 17க்கும், மீன் என்பவர்கள் 03க்கும், கழுகு என்பவர்கள் 10க்கும் செல்லலாம்.

**29**
முதல் பந்திலேயே நீங்கள் அவுட். 30 தான் சரியான விடை.மனதைத் தேற்றிக் கொண்டு 20க்கு ஓடுங்கள்.

**22**
அதிக வெப்பமான கோள் எது? புதன் எனின் 30க்கும், வியாழன் எனின் 12க்கும், வெள்ளி எனின் 04க்கும் போகலாமே.

**30**
புதன் சரியான விடை கிடையாது. 04ற்குச் சென்று சரியான விடையைச் சந்தியுங்கள்.

# இது தாவல் சீசன்

கற்பனை: ஜூலியஸ்சீசர்

தாடிக்காரர் கட்சிக்குள் பிடுங்குப்பாடு. கட்சிக்குள் இருக்கும் சொல்லிக் கொள்ளும் படியான பதவியான எதிர்கட்சி தலைவர் பதவியில் கண்டமுள்ளதென நினைக்கும்படியான சம்பவங்கள்தான் நடக்கிறது. முன்னர் அந்தப்பதவியில் இருந்த வரும் காலியானார். இப்போது பதவியிலுள்ளவரின் தலைக்கும் கத்தி வீசப்பட்டாயிற்று.

தாடிக்கட்சிக்குள்ளிருந்து புகை வெளியில் வந்ததால் எல்லாம் அம்பலமானது. ஆனால் வீட்டுக்கு வீடு வாசல்படிதானே. மற்றக் கட்சிகள் புகை வெளியில் வராமல் மூடி வைத்துள்ளன. எங்கெல்லாம் புகைகிறது, எப்படி புகைகிறது என்பதை பார்க்க ஒரு நகைச்சுவை வலம் வருவோம்.



### சைக்கிள் கட்சி

**கட்சித் தம்பிகள்:** அண்ணே! பவராசாவை எதிர்க்கட்சிதலைவரென்டினம். நீங்கள்தானே உண்மையான எதிர்க்கட்சி தலைவர். உங்களைதானே வீட்டுக்காரர் ஒவ்வொரு மேடையிலும் கிழிக்கினம். உண்மையான எதிர்கட்சி தலைவர் நீங்கள்தானண்ணை. மக்களின் எதிர்க்கட்சி தலைவன் அண்ணன் வாழ்க!

**மஜேந்திரகுமார்:** *(இவங்கள் உண்மையாகத்தான் கதைக்கிறாங்களோ... ஏதும் உள்குத்தோ ஒன்டுமா விளங்குதில்லையே... இவ்வளவு அப்பாவியாக இருக்கிறாங்களே)* தம்பிமார் சத்தமாக கதைச்சு போடாதையுங்கே.. அது சிங்கள இனவாத ஒற்றையாட்சி அரசின் தேர்தல்முறை மூலம் தீர்மானமானது. அதை நாங்கள் நிராகரித்து விட்டோம்!

**கட்சித்தம்பிகள்:** எல்லா எலக்சனையும் பகிஷ்கரிச்சு விளையாடிப்போட்டு ஏனண்ணை போன எலக்சனில் போட்டி போட்டனாங்கள்?

**மஜேந்திரகுமார்:** தம்பிகள்... நீங்கள் குறுக்ககுறுக்க கேள்விகேட்டு பழககூடாது. சிங்கள பௌத்த மேலாதிக்க ஒற்றையாட்சி அலகை நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம். கிடைக்கும் எல்லாவழிகளிலும் எதிர்ப்பு தெரிவிப்போம்.

**கட்சித்தம்பிகள்:** *(அண்ணன் அமெரிக்க எலக்சனிலதான் நிற்பாரோ..)*

**மஜேந்திரன்:** அண்ணை எல்லா கட்சிக்குள்ளயும் புகைச்சலா இருக்கு. நாங்களும் அவதானமாக இருக்க வேணும். யாரும் தாவிவிடுவார்கள்.

**மஜேந்திரகுமார்:** தம்பி யோசிக்காதையடா... இருப்பதே நாங்கள் ரெண்டுபேர் தானே.. நாங்கள் ஸ்ரெடியாக இருந்தால் சரி. கட்சி இருக்கும்.

### யானைக்கட்சி

**பிஜயகுலா:** தம்பியவை... எல்லா கட்சிகளிலயும் உடைவு வருது. நாங்கள் வலு கவனமாக இருக்க வேணும். கண்ணுக்க எண்ணெய் விட்டு எல்லாரையும் கவனியுங்கோ.. ஆருக்கும் தாவுற எண்ணமிருந்தால் ஆரம்பத்திலயே தூக்கிட வேணும்.

**தொண்டர் 1:** அக்கா ஓல்ரெடி யாழ்ப்பாணத்தில கட்சி மூன்றாகத்தானே இருக்குது.

**தொண்டர் 2:** அது அக்காவிற்கு தெரியாதா.. கட்சி முப்பது பிரிவாக மாறக்கூடாதென்று சொல்லுறாராக்கும்.

### வீட்டுக்கட்சி

**இரவணபவன்:** ஐயா.. எங்கட கட்சியிலயிருந்து பாயக்கூடிய ஆட்களின் லிஸ்ற் ஒன்றை ரெடி பண்ணியிருக்கிறன். ஆட்களை உன்னிப்பாக கவனிச்சுக் கொண்டும் இருக்கிறம்.

**பாவை:** அந்த லிஸ்றில சிக்னேஸ்வரனைதான் முதலாவதாக போட வேணும். நான் முதலமைச்சர் பதவிக்கு என்றுமே ஆசைப்பட்டதில்லை. நான் உயிரை வெறுத்து தமிழர்களிற்காக என்னை அர்ப்பணிச்சனான். எனக்கு அதை தரயில்லையே...

**பம்மந்தர்:** தம்பி பொறும்... அவசரப்படாதையும். நாங்கள் எல்லாத்தையும் கவனிச்சுக்கொண்டிருக்கிறம். உமக்குரிய தேவை வரும்போது உம்மை நாம் நியமிப்பம்.

**பாவை:** *(ம்.. உலகம் அழிஞ்சாலும் என்ர தேவை வரவே வராது போல)*

**கிறிதரன்:** அண்ணை யோசிக்காதையுங்கண்ணை.. நீங்கள்தான் அடுத்த சி.எம். நான் பேப்பரில சொல்லிப்போட்டன். நாங்கள் சேர்ந்து வேலைசெய்வம். கிளிநொச்சியில இந்திரகுமாரை கொண்டுவாற ஐடியா மமந்திரனுக்கு இருக்கலாம். நாங்கள் தேசியத்தில உறுதியாக நின்று அதுக்கு இடம்கொடுக்காமல் வேலை செய்வம்.

**இரவணபவன்:** ஐயா... சிக்னேஸ்வரன் தொடக்கம் பிற்றம்பலம் வரை பாயக்கூடிய ஆட்கள். நான் பேப்பரில ஆட்களை கிழிச்சு விடுறன்.

**பம்மந்தர்:** அவசரப்படாதையும்... இது தாவிப்போற கட்சியில்லை. மற்றை தாவி தாற கட்சி. இஞ்சயிருந்து போறவைக்கு அட்ரஸ் இருக்காது. வாறவைக்கு புது அட்ரஸ் கிடைக்கும். ஆகவே, அடுத்த தீபாவளிக்கு புதுவெளிச்சம் காட்டும் கருமத்தில் நாம் கண்ணாக இருப்போம்.

### பங்காளி கட்சி

**கிரேஷ் சிரேமசந்திரன்:** தம்பியை ரிவசக்தி பானந்தனிற்கு போன் போட்டு செக் பண்ணி பாருங்கோ.. கமிழரசுக்கட்சி ஆளையும் உள்ளுக்க எடுத்திட்டுதோ இல்லை எங்களோடதான் இருக்கிறாரோ என்று.

**தொண்டர்:** அண்ணை.. அவரே போன் எடுக்கிறார்.. இந்தாங்கோ கதையுங்கோ.

**கிரேஷ் சிரேமசந்திரன்:** தம்பி பானந்தா... எங்கள் கட்சியின் ஒரே முத்து நீதானடா.. கிறிதரன், சைங்காநேசன், நவமோகன் எல்லாரையும் நான்தான் கொண்டுவந்தன். ஆனால் காகக்கூட்டுக்க பொரிச்ச குயில் குஞ்சுகளை போல அவங்கள் எல்லாரும் பறந்திட்டாங்கள். உன்னையும் இழுக்க கமிழரசுக்கட்சி மந்திரீக வேலையளும் செய்யும். உள்ளூராட்சிமன்ற பிரதிநிதிகள் கவனம். ஆட்களுக்கு பின்னால திரிஞ்சு கவனமாக பார்த்துகொள்ள வேணும்.

**தொண்டர்:** அண்ணை ஒன்றுக்கும் யோசிக்காதையுங்கோ.. அடுத்த எலக்சன் வரை பிரச்சனையில்லை. அதில வெற்றிபெறும் எங்கட ஆட்கள் தாவுவினம். அதுவரை யோசிக்காதையுங்கோ.

### தாடிக்கட்சி

**தொண்டர்:** தோழர் பவராசா மேற்றரை எல்லா மீடியாவும் பிய்ச்சு தின்னுது. பிரச்சனையில்லை... பிரச்சனையில்லையென நாங்கள் அடிக்கடி சொன்னதே பிரச்சனையாக போயிற்றுதோ.

**டிக்ளஸ்:** வீட்டுக்குவீடு வாசல்படிதானே

குகன்: தோழர் பவராசாக்காக என்னை நியமித்தால் நான் கட்சிக்கு புதுத்தெம்பளிப்பம்.

**டிக்ளஸ்:** அழுதாலும் பிள்ளையை அவள்தானே பெற வேணும்.

போகா: தோழர் பவராசாவை கட்சியை விட்டே அனுப்ப வேணும்.

**டிக்ளஸ்:** உப்பு தின்றவன் தண்ணீர் குடிச்சுத்தான் ஆக வேணும்.

**தொண்டர்கள்:** வாங்கோ நாங்கள் வெளியால போவம். இஞ்ச நின்றால் நாங்கள் கட்சியை விட்டு ஓட வேண்டி வந்திடும்.






▶ மட்டக்களப்பு தேசிய கல்வி கல்லூரியின் கணித விஞ்ஞான மன்ற ஏற்பாட்டில் டெங்கு ஒழிப்பு நிகழ்வும் விழிப்பூட்டல் கருத்தரங்கும் இன்று (18.11.2016) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிமுதல் பிற்பகல் 4.00 மணிவரை மேற்கொள்ளப்பட்டது. இதன் ஒரு கட்டமாக கல்லூரி வளாகத்தினுள்ளும் அதனை அண்டிய பகுதியிலும் டெங்கு நுளம்பு பரவக்கூடிய இடங்களை அழிப்பதற்கான சிரமாதான நிகழ்வும் நடைபெற்றது.

# ஆயிரம் சூரியன் ஆயிரம் சந்திரன் ஒரே ஒரு பூமி

ம.செந்தமிழன்

மனிதர்களுக்கான அடிப்படை உரிமைகளில் ஒன்று மருந்து இல்லாமல் வாழ்வது. எந்த மருந்தும் இல்லாமல் நீண்ட ஆயுளுடன் வாழ வேண்டும். என்ற விருப்பம் அனைவருக்கும் பொதுவானது தான். இவ்வாறு சிந்திப்பதும் இந்த விருப்பத்துடன் மருந்துக்களை நிராகரிப்பதும் அவரவர் விருப்பம். உரிமை. அரசியலமைப்பு சட்டமும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட சட்டங்களும் இந்த விருப்பத்தைப் பாதுகாக்கின்றன. வேதி மருந்துக்களைத தயாரிப்பதற்கும் விற்பனை செய்வதற்கும் பரிந்துரைப்பதற்கும் சட்டங்களில் எண்ணற்ற கட்டுப்பாடுகள் உள்ளன. ஆனால் மருந்து இல்லா வாழ்வியலைக் கற்று தருவதற்கும் மரபுவழிப்பட்ட வீட்டு மருந்துகள் பற்றிய கருத்துக்களை பரப்புவதற்கும் சட்ட ரீதியிலான தடை ஏதும் இல்லை. இது நீண்டகால மரபு தொடர்ச்சி உள்ள நிலப் பகுதிகளில் வாழ்வோருக்குக் கிடைத்துள்ள கொடை.


மருந்து இல்லா வாழ்க்கை முறையை கடைப்பிடிப்பவர்கள் எண்ணிக்கை இப்போது உயர்ந்துள்ளது. மருந்துகளின் பிடியில் இருந்து வெளியேறுவோரின் உடலும் மனமும் விடுதலை செய்யப்பட்ட புலியின் துள்ளல் போல் திளைக்கின்றன. மருந்து இல்லா வாழ்வியல் முறைகளின் மீது மக்களின் நாட்டம் அதிகரித்துள்ளது. இந்தச் சூழல் மேன்மேலும் வளர வேண்டும் என்பது என் போன்றோரின் விருப்பம். இது எந்த மருந்துமுறைக்கும் எதிரான சிந்தனை அல்ல. சக மனிதர்களின் மீது கொண்ட அன்பின் வெளிப்பாடு. இந்த நோய்க்கு இந்த மருந்து என பரிந்துரைக்கும் போது அந்த நோயை காட்டிலும் கூடுதலான சிக்கல்களை மருந்துக்கள் விளைவிக்கின்றன என்ற உண்மையை அறிந்துகொண்ட பிறகு எனக்குள் இந்த அன்பின் தீவிரம் அதிகரித்தது.

சர்க்கரை நோய் எனப்படும் நீரிழிவு நோயைப் பற்றி அறியாதவர்கள் எவரும் இருக்க முடியாது. நீரிழிவு ஒரு நோய் அல்ல. உடலின் சுரப்புகளில் உருவாகும் சீரற்ற நிலை என்பதுதான் உலகின் அனைத்து நவீன மருத்துவ அமைப்புக்களும் ஒப்பு கொண்டுள்ள உண்மை. நீரிழிவு ஒரு நோய் அல்ல என்பதால் அதைச் சரிசெய்வதற்கு எந்த மருந்தும் இல்லை என்பது உலகின் அனைத்து மருத்துவ அமைப்புகளும் அறிவித்துள்ள உண்மை.


இந்த கட்டுரை வழியாக உங்கள் வாழ்வில் நல்ல மாற்றங்கள் வரவேண்டும் என விரும்புகிறேன். ஆகவே இரண்டு கருத்துக்களை மனதில் நன்றாக பதித்து கொள்ளுங்கள்.

1 நீரிழிவு என்பது சீர்கேடுதான் (disorder) நோய் அல்ல.

2 நீரிழிவை குணப்படுத்த எந்த மருந்தும் இல்லை.







வாழ்க்கை முறையை சீரமைப்பது ஒன்று தான் நீரிழிவு சீர்கேட்டில் இருந்து வெளியேறி நீண்ட ஆயுளுடன் நலமாக வாழும் வழி.

நீரிழிவுக்காக மருத்துவத்துறையில் மிகுதியாக விற்பனை செய்யப்படும் இரு மருந்துக்கள் மெட்போர்மின் (metformin) மற்றும் பயோக்ளிட்டஸோன (pioglitazone)

பின்வரும் உடல்நலக் கேடுகளைப் பாருங்கள். தசையில் வலி, தசை பலவீன மடைதல், மூச்சு விடுவதில் சிரமம், எந்த நேரமும்தூக்ககலக்கத்தில்இருத்தல்,தலைசுற்று சோர்வு அல்லது மிகவும் பலவீனமாக இருத்தல், வயிற்றுவலி, வாந்தியுடன் கூடிய குமட்டல்,இதயத்துடிப்பின் வேகம் குறைதல் அல்லது சீரற்ற இதயத்துடிப்பு ஏற்படுதல் இவை அனைத்தும் பொதுவான சீர்கேடுகள்.

அடுத்த பட்டியலில் உள்ளவை எல்லாம் 'தீவிர சிக்கல்கள்' என வரையறுக்கப்பட்டவை. அவை மூச்சுதிணறல், வீக்கம், திடீரென எடை கூடிகொண்டு போவது, காய்ச்சல், உடல் குளிர்ந்து போவது.

இவை தவிர சதாரண விளைவுகள் சில பட்டியல்படுத்தப்பட்டுள்ளன. அவை தலைவலி, தசை வலி, பலவீனம், குறைவான குமட்டல், வாந்தி, வயிற்றுப்போக்கு, வாயுத் தொல்லை, வயிற்றுவலி.

இவை நீரிழிவு நோயினால் வருபவை அல்ல. நீரிழிவுக்காக வழங்கப்படும் மெட்ஃபோர்மின் எனும் மருந்தினால் வர வாய்ப்பு உள்ளவை. இந்த பட்டியலை வெளியிட்டிருப்பது எந்த மரபுசார்ந்த பிற்போக்குதனமான அமைப்பும் அல்ல. அமெரிக்க தேசிய சுகாதார மையம் (national helth institute) என்பதைக் குறித்து கொள்ளுங்கள்.

அதே அமெரிக்க தேசிய சுகாதார மையம் அறிவித்துள்ள மற்றோர் அறிவுரைப் பட்டியலில் இது.

மெட்ஃபோர்மின் உட்கொள்ளும் முன்னர் பொதுமக்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள்.

1 நீங்கள் மெட்ஃபோர்மின் ஒவ்வாமை (allergy) உள்ளவரா என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

2 மெட்ஃபோர்மின் விற்பனை செய்யும் மருந்துக் கடைக்காரரிடம் அந்த மருந்தில் உள்ள உட்பொருட்களின் பட்டியலைத் தெரிந்து கொள்ளுங்கள். பின்னர் அந்த பட்டியலில் உள்ள மருந்துகளில் எவையேனும் உங்களுக்கு ஒவ்வாமை உருவாகுபவையா என்பதையும் சரிபார்த்து கொள்ளுங்கள்.

3 வேறு எந்த மருந்துகள், மூலிகைகள், சத்துணவுகள் விற்றமின்கள் உட்கொள்கின்றீர்கள் என்பதை மருத்துவர்களிடம் மருந்தாளுநரிடம் தெரிவித்து இவற்றோடு மெட்ஃபோர்மின் சேர்த்து உண்ணலாமா? எனக் கேட்டுக்கொள்ளுங்கள்.

4 நீங்கள் கருவுற்றவரா, கருவுறும் எண்ணத்தில் இருப்பவரா, குழந்தைகளுக்குத் தாய்ப்பால் ஊட்டுபவரா என்பதை உங்கள் மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

5 குறைவாகச் சாப்பிட்டு அதிகமாக உடற்பயிற்சி செய்பவராக இருந்தால் அதைப் பற்றி மருத்துவரிடம் தெரிவிக்க வேண்டும். மெட்ஃபோர்மின் உட்கொள்ளும்போது மேற்கண்டவாறு நீங்கள் நடந்து கொண்டால் ரத்ததில் குளுக்கோஸின் அளவை அது பாதிக்கும். உங்கள் மருந்துவர் அதற்கு ஏற்ப மருந்துகளை மாற்றித் தருவார்.

இவை அனைத்தும் நீரிழிவு நோயாளர்களுக்கான எச்சரிக்கைகள் அல்ல. குறிப்பிட்ட மருந்தை உட்கொள்வோருக்கானவை என்பதை மீண்டும் நினைவில் கொள்ளுங்கள்.

பயோக்ளிட்டஸோன் என்னும் மருந்தை கடந்த ஜூலை மாதம் 18ம் திகதி இந்திய சுகாதார அமைச்சகம் தடைசெய்தது. இதயக் கோளாறுகள், சிறுநீர்ப்பை, புற்றுநோய். உடல் பருமன் போன்ற ஆபத்துக்களுக்குக் காரணம் பயோக்ளிட்டஸோன்தான் என்பதை பல்வேறு ஆய்வுகளில் நிரூபிக்கப்பட்டதால் அது தடை செய்யப்பட்டது. இந்திய மருந்து உற்பத்தியாளர்கள் சங்கமும் அலோபதி மருத்துவர்கள் பலரும் இந்தத் தடைக்கு எதிராகப் போராட்டங்கள் நடத்தினர். அதன் விளைவாக அதே ஜூலை மாதம் 31ம் திகதி பயோக்ளிட்டஸோன் மீதான தடை விலக்கப்பட்டது. பயோக்ளிட்டஸோனை ஆண்டுக்கணக்கில் விழுங்கும் மக்களுக்கு இந்தத் தடையைப் பற்றியும் தெரியாது. அதற்கு எதிராக மருத்துவர்கள் போராடியதும் தெரியாது.

இந்திய சுகாதார அமைச்சகம் பயோக்ளிட்டஸோனுக்கு ஒரு கட்டுப்பாடு விதித்தது. பயோக்ளிட்டஸோன் மாத்திரைப் பெட்டிகளில் இந்த மருந்தின் தீய விளைவுகளைப் பற்றிய எச்சரிக்கை வாசகத்தை அச்சிட வேண்டும் என்றது சுகாதார அமைச்சகம். இந்திய மருந்து உற்பத்தியாளர்கள் சங்கம் இந்த கட்டுப்பாட்டை எதிர்த்து அமைச்சகத்திற்கு கடிதம் அனுப்பியது. பின்னர் மிகச்சிறிய அளவிலான எச்சரிக்கை வாசகங்கள் இடம்பெற வேண்டும் என்று அமைச்சகம் இறங்கி வந்தது.

இந்த பயோக்ளிட்டஸோன் மருந்தின் விளைவுகள் பற்றி அமெரிக்க சுகாதார அமைப்பு ஓர் ஆய்வை மேற்கொண்டது. மிக நீண்டகாலம் நடாத்தப்பட்ட விரிவான ஆய்வு அது. பயோக்ளிட்டஸோன் மருந்து மக்கள் மத்தியில் உருவாக்கும் தாக்கங்கள (Epidemiological study of pioglitazone) என்பது அந்த ஆய்வின் பெயர். 1997ம் ஆண்டு முதல் 2008ம் ஆண்டு வரை நடாத்தப்பட்ட ஆய்வின் முடிவுகளில் வெகு சிலவற்றை இங்கே குறிப்பிடுகின்றேன்.

1 பயோக்ளிட்டஸோன் மருந்தை ஓர் ஆண்டுக்கும் மேலாக உட்கொண்டு வந்தால் சிறுநீர்ப்பை புற்றுநோய் வருவதற்கான வாய்ப்புக்கள் அதிகம்.

2 மருத்துவர்களுக்கு இதனால் அறிவிக்கப்படுவது என்னவெனில், ஏற்கனவே சிறுநீர்ப்பை புற்றுநோய் இருப்பவர்களுக்கு பயோக்ளிட்டஸோனைப் பரிந்துரைக்காதீர்கள். ரத்ததில் குளுக்கோஸ் அளவை கட்டுப்படுத்துவதில் பயோக்ளிட்டஸோன் செயல்பாட்டை மதிப்பிடும்போது அந்த மருந்தால் புற்றுநோய் வரும் அபாயத்தையும் கணக்கில் கொண்டு செயல்படுங்கள்.

3 நோயாளிகளுக்கு இதனால் அறிவிக்கப்படுவது என்னவெனில், பயோக்ளிட்டஸோன் உட்கொள்ளும்போது சிறுநீர்ப்பை புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளது. பயோக்ளிட்டஸோன் வாங்கும் போது

தொடர்ச்சி அடுத்த பக்கம்





# யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

நிலவன்

வடமராட்சியின் முன்னணி பெண்கள் பாடசாலையாக நிமிர்ந்து நிற்கின்றது வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி. 21.10.1991 இல்வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி என்ற பெயரில் உருவெடுத்த இப் பாடசாலை 125 ஆண்டுகளுக்கு முன்னரே நிறுவப்பட்டதாக அறியக் கிடைக்கின்றது. 1891ம் ஆண்டளவில் குறோசற் ஐயாத்துரை என்ற பெரியவரால் கரவெட்டிப் பகுதியில் வடமராட்சி மத்திய ஆங்கிலப் பாடசாலை என்ற பெயருடன் இப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. முதல் முதலில் அப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட ஆங்கிலப் பாடசாலை என்ற பெயரையும் இப் பாடசாலை தனதாக்கிக் கொண்டது. 'செல்லையா பாடசாலை' என அழைக்கப் பட்ட இப் பாடசாலை சைவப் பாரம் பரியத்துடன் ஆங்கில அறிவையும் சிறப்பான முறையில் அப் பிரதேச மக்களிற்கு வழங்கி வந்தது. (இன்றும் கூட "செல்லையா பாடசாலை" என்ற பெயரிலேயே இப் பாடசாலை பலரால் கூறப்படுகின்றது.)

திரு.நா.கனகசிங்கம், திரு ஆ.ஞ ராஜகோபாலாச்சாரியார் போன்ற கல்விமான்கள் இக் கல்லூரியின் ஆரம்பத்தில் சிறப்பான வழிநடத்தல்களை மேற்கொண்டு பல்துறைசார் வளர்ச்சிக்கும் வித்திட்டனர். 1960ம் ஆண்டில் தனியார் பாடசாலைகளை அரசாங்கம் எடுத்து நடத்தியதன் விளைவாக இப் பாடசாலையும் உள்வாங்கப்பட்டு யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் பெண்கள் பிரிவாக இயங்கியது. பின்னர் 1991ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இக் கல்லூரி வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி என்ற பெயருடன் தனித்து இயங்க ஆரம்பித்தது. திரு.சி.த.மார்க்கண்டு, திரு.க.குணரத்தினம், பேராசிரியர் அழகையா துரைராஜா, திரு.ஏகாம்பரம் சோமசுந்தரம், திரு.கணபதிப்பிள்ளை தில்லையம்பலம், திரு.முருகேசு கதிரவேற்பிள்ளை போன்றவர்களின் பெரு முயற்சியின் பயனாகவே இவ் விடயம் சாத்தியமானது.

இக் கல்லூரி தனித்து இயங்கிய போது திருமதி.ச.சுந்தரலிங்கம் அவர்கள் இக் கல்லூரியின் அதிபராக நியமிக்கப்பட்டார். காலத்திற்குக் காலம் காணிகளைக் கொள்வனவு செய்ததன் விளைவாக இக் கல்லூரியில் கட்டடங்கள், மைதானம் போன்றவை நிர்மாணிக்கப்பட்டன. 2001 மற்றும் 2005 காலப்பகுதிகளில் 7 பரப்புக் காணிகளை பெற்றோர் மற்றும் நலன்விரும்பிகளின் ஒத்துழைப்புடன் பாடசாலை நிர்வாகம் கொள்வனவு செய்தது. இவ்வாறு பெற்றோர் பாடசாலை உறவின் தன்மை சரியான முறையில் அமைந்திருப்பதானது இப் பாடசாலையின் பெரும் பலமாக அன்றும், இன்றும் காணப்பட்டு வருவது சிறப்பாகக் குறிப்பிடக் கூடிய ஒரு விடயமாகும்.

2009ம் ஆண்டிலேயே இப் பாடசாலையில் கணித, விஞ்ஞானப் பிரிவுகள் ஆரம்பிக் கப்பட்டன. ஆரம்பமே அசத்தலாக அமைந்தது. கணித, விஞ்ஞானப் பிரிவு பொருத்தமானதே என்பதை மாணவிகள் தமது பெறுபேற்றால் வெளிக்காட்டினர். முதல் தடவையிலேயே கணிதப் பிரிவில் செல்வி அனுதர்சா செல்வராசா 3ஏ சித்தி பெற்று மாவட்ட நிலை 9ஐயும், விஞ்ஞானப் பிரிவில் செல்வி. மயூரி பத்மநாதன் 3ஏ சித்தி பெற்று மாவட்ட நிலை 18ஐயும் பெற்றுக் கொண்டனர். அன்றிலிருந்து இன்றுவரை இக் கல்லூரி மாணவிகளின் சிறப்பான பெறுபேறுகளால் கல்லூரி பெருமை தேடிக் கொண்டிருக்கின்றது. 2014ம் ஆண்டில் பரீட்சைத் திணைக்களத்தின் செயலாற்றுகைச் சுட்டிகளின்படி வட மாகாணத்தில் கணித, விஞ்ஞானப் பிரிவில் 20 பேருக்கு மேல் தோற்றி சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற 3வது பாடசாலையாக இப் பாடசாலை தெரிவு செய்யப்பட்டமை இதற்கோர் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

கடந்த வருடம் க.பொ.த சா.த பரீட்சையில் செல்வி. விருஜா 8ஏசி சித்தியையும், க.பொ.த உ.த பரீட்சையில் செல்விகள். கௌரீசா மற்றும் ரமீதா 3ஏ சித்தியையும் பெற்றமையானது இப் பாடசாலையின் அண்மைய கல்விச் சாதனையாகும். கல்வி தவிர்ந்த இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் இக் கல்லூரி கால் பதித்திருக்கின்றது. தமிழ் மன்றம், சுகாதாரக் கழகம், புத்தாக்குநர் கழகம் என்று பல கழகங்கள் இங்கே சிறப்புற இயங்குகின்றன. கிரிக்கெட், கரம், வலைப்பந்து போன்ற விளையாட்டுக்களிலும் இக் கல்லூரி மாணவிகள் சாதனை படைத்து வருவது குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய ஒரு விடயமாகும்.

இக் கல்லூரியின் வளர்ச்சிக்கான தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பழைய மாணவிகளின் பங்களிப்பும் கணிசமான அளவில் காணப்படுகின்றது. அண்மையில் நடைபெற்ற பாடசாலையின் வெள்ளிவிழா உட்பட பாடசாலையின் அனைத்து வைபவங்களையும் பழைய மாணவிகளே முன்னின்று நடாத்துகின்றனர். அத்துடன் இப் பாசாலையின் அழகிய நுழைவாயிலும் பழைய மாணவிகளாலேயே கட்டிக் கொடுக்கப்பட்டு இருக்கின்றது.

தற்போது 950 மாணவர்களையும், 48 ஆசிரியர்களையும் கொண்டு இயங்குகின்ற இப் பாடசாலை இதன் தற்போதைய அதிபரான திருமதி. பாலராணி ஸ்ரீதரனால் சிறப்புற வழிநடத்தப்பட்டு அண்மையில் (ஒக்டோபர் 21,22ம் திகதிகளில்) தனது வெள்ளி விழாவைக் கொண்டாடியது. 2011ம் ஆண்டுக்குப் பின்பே இக் கல்லூரியில் பல பௌதிக அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் இப் பாடசாலையானது 1000 பாடசாலைத் திட்டத்திலுள்ளும் உள்வாங்கப்பட்டு தொழில்நுட்ப ஆய்வுகூடம், நூலகம் போன்ற வசதிகளுடன் அழகாக காட்சியளிக்கின்றது. இக் காலகட்டத்தில் பெண் பிள்ளைகளின் ஆளுமைகள் வெளிக்கொணரப்படுவதிலும், வளர்க்கப்படுவதிலும் பெண்கள் கல்லூரிகளின் பங்கு அளப்பரியது என்பதே இக் கல்லூரியின் சகல செயற்பாடுகளும், வளர்ச்சியும் நமக்கு உணர்த்துகின்ற விடயமாகும்.

---

அதனுடன் இணைக்கப்பட்டுள்ள கையேட்டைப் படித்துப் பாருங்கள். அதில் இந்த மருந்தை உட்கொள்வதால் ஏற்படும் இடர்பாடுகள் பற்றி விளக்கப்பட்டுள்ளது. பயோக்ளிட்டஸோன் பற்றி அறிந்து கொள்ள விரும்பினால் உங்கள் மருத்துவரிடம் கேளுங்கள்.

4 மருத்துவர்களுக்கான கூடுதல் தகவல்கள் சில:

சிறுநீர் கழிப்பதில் உள்ள அறிகுறிகள் குறித்து நோயாளியிடம் உரையாடுங்கள். பயோக்ளிட்டஸோன் மருந்தின் கையேட்டைப் படிக்கும்படி நோயாளிக்கு அறிவுறுத்துங்கள்.

இந்த எச்சரிக்கைகளை வழங்கியது மரபுகளில் பிடிப்பு கொண்ட மூட நம்பிக்கையாளர்களின் அமைப்பு அல்ல. அமெரிக்க உணவு மற்றும் மருந்து கட்டுப்பாட்டு அமைப்பு (FDA).

மெட்ஃபோர்மி; மற்றும் பயோக்ளிட்டஸோன் ஆகிய இரண்டும் தான் நீரிழிவு மருத்துவத்துறையில் மிக அதிகமாகவும் அதிவேகமாகவும் விற்பனை செய்யப்படும் மருந்துகள்.

'நீரிழிவு நோயால் இறந்துபோனார், நீரிழிவால் சிறுநீரகம் பழுதானது, நீரிழிவால் இதயம் சீர்கெட்டது' போன்ற செய்திகளைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். நீரிழிவுக்கு வழங்கப்படும் மருந்துகளால் உருவாகும் நோய்களின் பட்டியலை மீண்டும் ஒருமுறை படித்துப் பாருங்கள்.

இந்தத் தகவல் யாவும் உங்களுக்கு மருத்துவர்களால் தெரிவிக்கப்பட வேண்டும். அதுதான் உலகம் எங்கும் உள்ள சுகாதார அமைப்புக்கள் வகுத்துள்ள ஒழுங்கு முறை.

இவற்றை எல்லாம் தெரிவித்த பிறகும் எனக்கு அந்த மருந்தையே எழுதித்தாருங்கள் எனக் கேட்பவர்களுக்கு மட்டுமே அந்த மருந்துகளை பரிந்துரைக்க வேண்டும் என்பது சட்டம். நடைமுறை என்னவாக இருக்கின்றது என்பதை என்னை விட நீங்கள் நன்கு அறிவீர்கள்.

நமது மரபுவழிப்பட்ட வாழ்வியலைக் கொஞ்சம் கவனியுங்கள். பசிக்கும்போது மட்டும் உணவு. தாகம் எடுத்தால் மட்டும் தண்ணீர். இரவில் கண்விழிக்காமல் இருத்தல். அதிகாலையில் எழுதல். காலையில் பசித்தால் சிறுதானியக் கஞ்சி மற்றும் கூழ் வகைகள், மதியம் பசித்தால் எளிதில் செரிக்கும் வகையிலான உணவுகள். பல்வேறு வகையிலான நாட்டு காய்கறி. இரவில் ஆவியல் வேக வைத்த உணவுகளை (இட்லி, இடியப்பம், பிட்டு) உட்கொள்ளுதல், இயற்கை விளைப் பொருட்களையே உணவாக கொள்ளுதல், இயன்ற அளவு உடல் உழைப்பில் ஈடுபடுதல் போன்ற வாழ்க்கைநெறிகளைப் பின்பற்றினால் எந்தச் சீர்கேட்டில் இருந்தும் வெளியேற முடியும்.

**இயற்கை விளைப் பொருட்களையே உணவாக கொள்ளுதல், இயன்ற அளவு உடல் உழைப்பில் ஈடுபடுதல் போன்ற வாழ்க்கை நெறிகளைப் பின்பற்றினால் எந்தச் சீர்கேட்டில் இருந்தும் வெளியேற முடியும்.**

ஒரே நாளில் மருந்துகளில் இருந்து விடுபட வேண்டும் என்ற அவசரம் தேவை இல்லை. உங்கள் உடலின் இயக்கத்தை புரிந்து கொண்டு அதற்கு ஏற்ற மாதிரி மாற்றங்களை மேற்கொண்டால் கொஞ்சம் கொஞ்சமாக மருந்துகள் இல்லாத வாழ்க்கைக்கு திரும்ப முடியும்.

'மரபு மருத்துவம்' என்ற பெயரில் நீரிழிவு நோய்க்கு மருந்து தருவதாகப் பலர் கூறுகிறார்கள். நமது மரபில் உடல் சர்க்கரையைத் தற்காலிகமாகக் குறைக்கும் மூலிகைகள் உள்ளனவே தவிர நிரந்தரமாக குணப்படுத்தும் எந்த மருந்தும் இல்லை. இது மரபு மருத்துவங்களின் குறைபாடு அல்ல. நீரிழிவு என்பது நோயே அல்ல எனும்போது அதற்கான நிரந்தரமான மருந்து எப்படி இருக்கும்?

எது நோய் இல்லையோ, அதற்கு மருந்தும் இல்லை. எது சீர்கேடாக உள்ளதோ அதைச் சீராக்க முடியும். நீரிழிவு ஒரு சீர்கேடுதான். அதைச் சீராக்க நம்மால் முடியும்.



## ஜக்கிசானிற்கு விருது!

அதிரடி நாயகன் ஜக்கிசானிற்கு வாழ்நாள் சாதனையாளருக்கான ஒஸ்கார் விருது அறிவிக்கப்பட்டுள்ளது. 8 வயதில் குழந்தை நட்சத்திரமாக திரைவாழ்க்கையை தொடங்கியவர். இப்பொழுது 62 வயதாகிறது. 200 இற்கும் அதிக படங்களில் நடித்துவிட்டார். 30 படங்களிற்கு மேல் இயக்கியுள்ளார். நடிகர், இயக்குனர், சண்டை அமைப்பாளர், தயாரிப்பாளர், பாடகர், தற்காப்பு கலை நிபுணர் என அவர் சினிமாவில் தொடாத ஏரியாவே கிடையாது. ஆனால் இதுவரை ஒஸ்காரும் அவர் வாங்கவில்லையென்பதே குறையாக இருந்தது. இந்தநிலையில், சினிமாவில் அவர் ஆற்றிய பங்கை கௌரவிக்கும் முகமாக வாழ்நாள் சாதனையாளருக்கான ஒஸ்கார் விருது வழங்கப்படவுள்ளது.

## ஜனனியின் கண்கள்!

அவன் இவன், தெகிடி படங்களின் பின் தமிழில் சரியான வாய்ப்புக்கள் கிடைக்காமல் மலையாளத்திற்கு சென்றுவிட்டார் ஜனனி. எனினும், தனது சொந்த மொழியான தமிழில் சாதிக்க வேண்டுமென்ற ஆசை அவருக்கு உள்ளது. அதனால் தமிழ் வாய்ப்புக்களிற்கு முயன்றுகொண்டிருந்தார். முயற்சிக்கு பலனாக பலூன், அதேகண்கள் பட வாய்ப்புக்கள் கிடைத்துள்ளன. அதே கண்களில் கலையரசனிற்கு ஜோடியாக நடித்துள்ளார். விரைவில் திரைக்கு வரவுள்ள இந்த படத்தில் துணிச்சலான பெண் பத்திரிகையாளராக . நடித்துள்ளார். இரண்டு கண்களை மையமாக வைத்து எடுத்த படமென்பதால் இந்த தலைப்பாம்.

## கட்டிப்பிடி வைத்தியம்!

நடிகைகளை ரசிகர்கள் பின்தொடர்வது வழக்கம். இதனை சிலர் பொருட்படுத்துவதில்லை. சிலர் இதனை பெரிதாக எடுத்துக் கொள்வார்கள். ஆனால் இந்தி நடிகை ஸ்ரதா கபூர் இந்தவகைகளிற்குள் இல்லை. அவர் வேறு மாதிரி. இளைஞன் ஒருவன் ஸ்ரதாவை விடாமல் பின்தொடர்ந்துள்ளான். ஒருநாளில் மட்டும் 17 முறை பின்தொடர்ந்துள்ளான். இதனை அவதானித்த ஸ்ரதா, எப்படி இளைஞனை கட்டுப்படுத்தலாம் என யோசித்துக் கொண்டிருந்திருக்கிறார். ஒருநாள் நிகழ்ச்சி ஒன்றிற்கு ஸ்ரதா சென்றுள்ளார். அங்கும் இளைஞன் நின்றுள்ளார். திடீரென அளைஞனை மேடைக்கழைத்த ஸ்ரதா, இவர் என்னை ஒருநாளில் 17 முறை பின்தொடர்ந்திருக்கிறார் என அங்குள்ளவர்களிற்கு அறிமுகப்படுத்தி, இளைஞனை கட்டிப்பிடித்துள்ளார். இதனால் இளைஞன் வெலவெலத்து போனார்.



## ஏங்கும் சேதுபதி!

இன்றைய திகதியில் தமிழில் பிசியான நடிகர் என்றால் அது விஜய் சேதுபதிதான். ஒரேநேரத்தில் 3,4 படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார். இந்த வருடத்தில் அதிக படங்களில் நடித்தவர் அவர்தான். அடுத்து வருடமும் அப்படித்தான் இருக்கும். இடைவேளை கிடைக்கும்போது டப்பிங் வேலைகளிலும் கவனம் செலுத்துகிறார். இடையில் டான்ஸ், சண்டைக்காட்சி ரிகர்சல்களிலும் கலந்து கொள்கிறார். ஆக, அவருக்கு தூங்கவே நேரமில்லையாம். சமயங்களில் படப்பிடிப்பு தளங்களிலேயே குட்டித்தூக்கம் போட்டு சமாளித்து கொள்கிறார். இதனால் பிள்ளைகளுடன் நேரம் செலவிட முடியவில்லையென்பதுதான் அவரது பெரிய கவலையாம்.

## பஞ்சாப் அழகி!

பஞ்சாபை சேர்ந்தவர் மெஹ்ரீன். பரதநாட்டிய கலைஞராக வாழ்க்கையை தொடங்கி மொடலாகி பின்னர் நடிகையானவர். இந்த வருட தொடக்கத்தில் வெளியான தெலுங்குப்படமான காடி வீர பிரேம கதா முதல் படம். இதை தொடர்ந்து இன்னொரு படத்தில் ஒப்பந்தமானார். பாலிவுட்டிலும் ஒரு படம் கிடைத்தது. இப்பொழுது தமிழுக்கு வருகிறார். சுசீந்திரன் இயக்கவுள்ள புதிய தமிழ், தெலுங்கு படத்தில் இவர்தான் நாயகி. சந்தீப் கிஷன் நாயகன். நிறைய பஞ்சாபி நாயகிகள் தமிழில் நடித்துள்ளனர். நான் தமிழர்களின் மனதில் இடமே பிடிப்பேன். இப்போது தீவிரமான தமிழ் கற்றுவருகிறேன் என்றுள்ளார்.

## நீச்சலுடை நாயகி!


சமீபத்தில் வெளியாகிய காகித கப்பல் படத்தில் ஹீரோயினாக நடித்தவர் டில்லிஜா. தற்போது ஆட்டகுமாரு, என்னதான் உன் கத ஆகிய படங்களில் நடித்தவர். சென்னையை சேர்ந்த இவர், தனியார் வைத்தியசாலையில் தாதியாக வேலை செய்தார். ஆட்டகுமாரு படத்தின் இயக்குனர் வைத்தியசாலைக்கு சென்றபோது அவரை கண்டு நடிக்க அழைத்து வந்துள்ளார். அதன் பின்னர்தான் காகித கப்பல் வாய்ப்பு வந்தது. ஆனால் அது முதலில் வெளியாகிவிட்டது. முதல்படத்திலேயே நீச்சல் உடையில் நடித்திருந்தார். இதுபற்றி கூறும்போது, கதைப்படி நீச்சல் உடை காட்சி அவசியம். அதனால் நடித்தேன். ஆனால் அதனை படவிளம்பரத்தில் பாவிப்பார்கள் என நினைக்கவில்லை என்றுள்ளார்.

## பாம்புசட்டையை பார்க்கும் நடிகர்!

வில்லனாக நடித்து நாயகனாகியுள்ளார் பாபி சிம்ஹா. அவரது நடிப்பில் பாம்புசட்டை விரைவில் திரைக்கு வரவுள்ளது. இந்தப்படம் அவரது கரியரில் முக்கியமான இடத்தைபெறும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார். இந்தப்படத்தில் நடித்துக் கொண்டிருந்தபோதுதான் ஜிகிர்தாண்டாவில் வில்லனாக நடித்ததற்கு தேசிய விருது கிடைத்தது, பல படங்களில் ஹீரோவாக நடிக்க இயக்குனர்கள் அணுகியது போன்ற நல்ல விசயங்கள் நடந்துள்ளதால், நிச்சயம் இந்தப்படம் பெரும் மாற்றத்தை ஏற்படுத்துமென நம்புகிறாராம். இந்தபடத்தின் டீசரை முதல்நாளிலேயே ஒன்றரை இலட்சம்பேர் பார்த்துள்ளதும் அவரது நம்பிக்கையை அதிகரித்துள்ளதாம்.

## விஜயின் புது அணுகுமுறை!

முன்னணி நாயகர்கள் கதையை தேர்வு செய்வதில் இப்போது அதிக அக்கறை எடுத்து கொள்கிறார்கள். காரணம், நல்ல கதையுடன் இளம் நாயகர்கள் ஹிட் கொடுக்க ஆரம்பித்துள்ளனர். வழக்கமாக பாணியில் நடித்து கொண்டிருந்தால் வேலைக்காகாது என்பதை முன்னணி நாயகர்கள் புரிந்து கொண்டு விட்டனர். அந்த வகையில் விஜய் இப்போது கதை விவகாரத்தில் அதிக அக்கறை எடுத்து கொள்கிறார். யாராவது இயக்குனர் வெற்றிப்படம் கொடுத்து விட்டால், உடனே அவர்களை அழைத்து வாழ்த்துகிறார். புதிய கதையிருந்தால் தன்னிடம் வரும்படி அழைப்பும் விடுக்கிறார். அப்படி வரும் இயக்குனர்கள் சொல்லும் கதை பிடித்திருந்தால் பின்னர் அவர்களின் படத்தில் நடிக்கிறார். அந்தவரிசையில் செல்வராகவன், கே.வி. ஆனந்த், ரத்தினம்சிவா, கார்த்திக் சுப்புராஜ் உள்ளிட்டவர்கள் கதை சொல்லிவிட்டு காத்துள்ளனர்.



# குழந்தைப் போராளி

சைனா கெய்ரெற்சி
தமிழில்: தேவா

ஒரு நாள் அப்பா சில மனிதர்களுடன் பண்ணைக்கு வந்தார். இவர்கள் எங்கள் கால்நடைகளை வாங்கி விற்கும் வியாபாரிகள். அப்பா அன்றிரவு பண்ணையிலேயே தங்கி விட்டார். மறு நாள் மேய்ச்சல் நிலத்திலிருந்து திரும்பி வந்த ரிச்சட் மாட்டுக் கன்றொன்று காணாமற் போய்விட்டதாகப் பதற்றத்துடன் பாட்டியிடம் சொன்னான். அதைக் கேட்டதும் பாட்டி போட்ட கூச்சலால் பண்ணை வீட்டின் கூரையே பொறிந்து விழும் போலிருந்தது. வீட்டின் பின்புறத்தில் வேலியைச் சரி செய்து கொண்டிருந்த அப்பாவை நோக்கிப் பாட்டி நான்கு கால் பாய்ச்சலில் ஓடுவதைப் பார்த்தேன். அப்பா அதிலும் வேகமாக வீட்டினுள் புகுந்தார். அவரின் முகம் கடுங் கோபத்தால் விறைத்திருக்க அவர் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார். ரிச்சட் முன்னெச்சரிக்கையாக வாசற் பக்கம் நகர்ந்தான்.

"சிங்கங்கள் மாட்டுக் கன்றினை இப்போது சாப்பிட்டு முடித்திருக்கும் இல்லையா?" அப்பா தம்பியைப் பார்த்து உறுமினார். அவரிருந்த நாற்காலி பின் நகர்ந்தது. அறையில் மயான அமைதி நிலவியது. தம்பி மூச்சுப் பேச்சில்லாமல் பொம்மை மாதிரி நின்றிருந்தான்.

"வேசி மகனே எனது மாட்டுக் கன்றைச் சிங்கத்திற்குத் தாரை வார்த்து விட்டாயே" சடுதியாக அப்பாவின் குரல் வெறியுடன் எழுந்தது. நான் பயத்தில் தரையில் மல்லாக்க விழுந்தேன். அப்பா பாய்ந்து சென்று வெட்டுக் கத்தியை எடுத்தது தான் தாமதம் தம்பி ஒரு மானைப் போல வெளியே தாவி ஓடத் தொடங்கினான். அப்பா கொலை வெறியுடன் கத்தியை உயர்த்திப் பிடித்தபடியே அவனைத் துரத்திக்கொண்டு ஓடினார். நானும் அவர்களின் பின்னால் ஓடத்தான் முயற்சித்தேன். ஆனால் அச்சத்தில் என் கால்கள் பின்னிக்கொண்டன. அப்பா எனது தம்பியை நிச்சயமாகக் கொல்லத்தான் போகிறார். நான் பாட்டியின் பக்கம் திரும்பி அவரின் முகத்தைப் பார்த்தேன். அவரின் கண்களை ஊடுருவிப் பார்க்குமளவிற்கு எனக்குத் தைரியம் இருந்தது. பாட்டியால் அப்பாவைத் தடுத்து நிறுத்த முடியும் என நினைத்தேன்.

என்னை அழுகையை நிறுத்துமாறு உணர்சியற்ற குரலில் சொன்ன பாட்டி "உனது கண்ணீர் பாலா? இல்லை இரத்தமா?" எனக் கேட்டார். அவர் என்ன கேட்கிறார் என்று எனக்கு விளங்கவில்லை. ஒன்றுமே சொல்லாது படுக்கைக்குச் சென்றேன். காத்திருப்பதைத் தவிர வேறெதுவும் செய்யாமுடியாது. சிறிது நேரங் கழித்துத் திரும்பிவந்த அப்பா இரத்தம் தோய்ந்த வெட்டுக்கத்தியை எனக்குக் காட்டித் தான் ரிச்சட்டைக் கொன்றுவிட்டதாகக் கூறினார். அந்தக் கணத்தில் அச்சம் என்னை விட்டுப் போயிற்று. எங்கிருந்தோ வந்த தைரியம் என் ஆன்மாவை நிறைத்தது. இனி இழப்பதற்கு என்னிடம் எதுவுமே இல்லை. நான் அழவில்லை. இந்த உலகத்தில் இனி நான் தனியானவள் என்ற உணர்வே என்னுள் இனம் புரியாத வைராக்கியத்தை ஊட்டிற்று. இனி யாராலும், எதனாலும் என்னை அழவைக்க முடியாது. நான் படுக்கையில் கிடந்தவாறே வற்றிய கண்களுடன் ரிச்சட்டை நினைத்துக்கொண்டேன். நானும் அவனும் விளையாடி மகிழ்ந்திருந்த தருணங்களை நினைத்துப் பார்த்தேன்.

மறுநாள் அதிகாலையிலேயே நான் எழுந்து என் சகோதரனின் உடலைத் தேடிப் புறப்பட்டேன். சிறிது நேரத் தேடுதலின் பின்பு எறும்புப் புற்றின் மேல் யாரோ விழுந்து கிடப்பது போலத் தெரிந்தது. அருகே சென்று பார்த்த போது அது யாரோ அல்ல எனது தம்பி தானெனத் தெரிந்து கொண்டேன். நான் எதையும் கேட்பதற்கு முன்னமே ரிச்சட் திரும்பி தனது இரத்தம் தோய்ந்த புட்டத்தை எனக்குக் காண்பித்தான். அவன் உயிருடன் இருப்பதைக் கண்டதும் நான் அவனை இறுகத் தழுவிக்கொண்டே மனப் பாரம் அகன்றவளாகப் பெரிதாகச் சிரிக்கத் தொடங்கினேன். அவனை முத்தமிட்டேன். அவன் உயிருடன் இருப்பது எனக்கு மிக மிக முக்கியமானது.

அவனை அங்கேயே இருக்கச் சொல்லிவிட்டு சிறிது உணவும் குடிப்பதற்குப் பாலும் வீட்டிலிருந்து யாருக்கும் தெரியாமல் எடுத்து வரச் சென்றேன். அதன் பின்பு அப்பாவை நான் முகத்துக்கு முகம் சந்திக்க நேரும் போதெல்லாம் கோபத்துடன் அவரைப் முறைக்க நான் மறந்ததில்லை. அவர் எங்களைவிட்டு நகரத்துக்குச் செல்லும் வரை இது தொடர்ந்தது.

### கைது செய்யப்பட்ட அப்பா

ஒரு சனிக்கிழமை காலையில் மாடுகளைக் கணக்கெடுத்த போது பண்ணையில் இன்னொரு பிரச்சினை ஆரம்பமாயிற்று. பதினைந்து மாடுகள் குறைந்திருந்தது. பண்ணையாட்கள் பாட்டியிடம் ஓடினர். அவர் இந்தச் செய்தியைக் கேட்டதுமே "மைக் எங்கே போய்த் தொலைந்தான்?" என ஆத்திரத்துடன் கத்தினார். மைக் தான் மாடுகளின் பராமரிப்பிற்குப் பொறுப்பானவர்.

சிலர் மைக்கைத் தேடிச் செல்ல ஆயத்தமாகையில் மைக்கே அங்கு வந்து சேர்ந்தார். ஏன் எல்லோரும் இங்கு கூடி நிற்கின்றார்கள் என்ற கேள்வி அவரின் முகத்திலிருந்தது. பாட்டி " நீ குற்றமற்வன் போல் நடிக்காதே" எனமைக் மீது எரிந்து விழுந்தார். திருட்டுப்பழி அவர் மேல் விழும் வரை அங்கு நடப்பது எதனையும் மைக்கால் புரிந்து கொள்ள முடியவில்லை. தான் மாடுகளைத் திருடவில்லை என திரும்பத் திரும்ப சொன்ன மைக் "அப்படித் திருடி இருந்தால் தான் ஏன் இங்கு வர வேண்டும்' எனக் கேட்டார்." பாட்டி நம்ப வேயில்லை. அப்பாவைக்கூட்டி வரக் ஆள் அனுப்பப்பட்டது. நானும் ரிச்சர்ட்டும் பண்ணையை விட்டு ஓடிப் போய்விடும் படி மைக்கிற்கு புத்தி சென்ன போது மைக் பரிதாபமாக நானும் உங்களைப் போல துற்சிதான், உங்கள் அப்பா என்னை புரிந்து கொள்வார், தன் இனத்தவர்களிடமே திருடுவது சரியல்லவே" என்றார்.

(தொடரும்)


---

# அந்தநாள் நினைவு

பஞ்சு அருணாசலம் திரைக்கதை எழுதி, தயாரித்த படம் குரு சிஷ்யன். இந்தப் படத்தில்தான் கவுதமி அறிமுகமானார். இன்னொரு ஜோடியாக பிரபுவும் சீதாவும் நடித்தார்கள். ரவிச்சந்திரன், ராதாரவி, சோ, பாண்டியன், வினு சக்ரவர்த்தி என பலர் நடித்தார்கள். இளையராஜா இசை அமைத்தார். எஸ்.பி.முத்துராமன் இயக்கினார்.

ரஜினிக்கு எப்போதுமே நடிகர் திலகம் சிவாஜி மீதும், அவரது குடும்பத்தினர் மீதும் தனி மரியாதை உண்டு. அதனால்தான் சந்திரமுகியில் நடித்துக் கொடுத்து அந்த குடும்பத்திற்கு பொருளாதார ரீதியாக பெரிய உதவி செய்தார்.

குரு சிஷ்யன் படத்தில் ரஜினி குரு, பிரபு சிஷ்யன் கதைப்படி, ஒருகாட்சியில் பிரபுவுக்கு சண்டை காட்சி எதுவும் இல்லை. ஆனால் ரஜினி, பிரபுவுக்கு ஒரு சண்டை காட்சி வைக்கச் சொன்னார். அதற்கு இயக்குனர் எஸ்.பி.முத்துராமன் கதையில் அதற்கு இடமில்லையே என்றார். எனது சண்டை காட்சி ஒன்றை பிரபுவுக்கு கொடுங்கள், கடைசி நேரத்தில் நான் சண்டையில் என்ட்ரி கொடுக்கிறேன். கதைக்கு சரியாக வரும் என்றார். எஸ்.பி.முத்துராமனும் அப்படியே செய்தார். படத்திற்கு ரஜினி 23 நாள் கால்ஷீட் கொடுத்திருந்தார். படப்பிடிப்பு மைசூரில் நடந்து கொண்டிருந்தது. அப்போது சீதா பிசியான நடிகையாக இருந்ததால் அவர் கால்ஷீட் கிடைப்பது பிரச்னையாக இருந்தது. இடையில் சீதாவின் 2 நாள் கால்ஷீட் கிடைத்தது. ரஜினிக்கு ஒதுக்கிய நாளில் பிரபு, சீதா பாடல் காட்சியை படம்பிடிக்க முடிவு செய்தார் எஸ்.பி.முத்துராமன். விஷயத்தை ரஜினியிடம் சொல்லி "இரண்டு நாள் ஓய்வெடுங்கள், அல்லது சென்னை சென்று வாருங்கள், இந்த இரண்டு நாளும் நீங்கள் நடித்ததாக கால்ஷீட் கணக்கில் வைத்துக் கொள்கிறோம்" என்றார். ரஜினியும் ஒப்புக் கொண்டார்.



மறுநாள் மைசூர் அரண்மனையில் பிரபு, சீதா பாடல் காட்சி படமாக்கப்பட்டது. அந்த பாடல் காட்சிக்கு புதிதாக ஒருவர் தலையில் பப்ளர் கட்டிக்கொண்டு டிராலி தள்ளிக்கொண்டிருந்தார். "யாருப்பா அது புதுசா இருக்கு" என்று எஸ்.பி.முத்துராமன் அருகில் சென்று விசாரித்தார். மப்ளரை கழட்டினால்... ரஜினி.

"என்ன ரஜினி நீங்க இப்படி....?" என்றார் அதிர்ச்சியுடன். "சார் நான் வேலை பார்க்கா விட்டாலும் இன்னிக்கு நீங்க எனக்கு சம்பளம் தர்றீங்க. ஆனால் என்னால் வேலை செய் யாமல் சம்பளம் வாங்க முடியாது. இதுவும் ஒரு வேலைதானே. அதை செய்ய விடுங்கள்" என்றார். இரண்டு நாளும் படப்பிடிப்புக்கு தேவையான உதவி வேலைகளை செய்தார் ரஜினி.



– குப்பிழான்
ஐ.சண்முகன்



# ஒரு இலக்கியக்காரனின் வாழ்பனுபவங்கள் 11

**எனது சக உத்தியோகத்தரான முஹமட் ஜிவ்ரி தனது வீட்டிற்கு எங்களை இரவு விருந்து ஒன்றுக்கு அழைத்திருந்தார். அங்கு பலதும் பத்துமான பேச்சுக்கிடையில் நேர்முகப் பரீட்சை பற்றிய கதையும் வந்தது. முஹமட் ஜிவ்ரியும் தானும் ஆசிரியர் நியமனத்துக்கு காத்திருப்பதாகவும் தனது பெயரும் இன்னும் வரவில்லை என்றும் சொன்னார்.**

**1983**ம் ஆண்டு கடைசியிலோ, 1984ம் ஆண்டு தொடக்கத்திலோ கல்முனையில் எனது இருப்பிடமான எழுத்தாளர் சண்முகம் சிவலிங்கம் வீட்டிற்கு ஒரு செய்தி கிடைத்தது. அப்பொழுது நேரம் முன்னிரவு 9மணி இருக்கலாம். அதிர்ஸ்டவசமாக நானும் அங்கேயே இருந்தேன். அந்த செய்தி என்னை உடனடியாக பாண்டிருப்பு தபால் நிலையத்திற்கு வருமாறும் 15 நிமிடத்திற்குள் ஊரிலிருந்து தொலைபேசியில் தொடர்பு கொள்வார்கள் என்றும் சொன்னது. நான் பரபரப்பாகப் புறப்பட்டு சற்றுத் தொலைவில் இருந்த தபாலகத்திற்குச் சென்றேன். ஊரில் என்னவோ ஏதோ என்று மனம் பரபரத்துக் கொண்டிருந்தது.

சற்று நேரத்தில் ஊரில் இருந்து எனது துணைவி தொலைபேசியில் தொடர்பு கொண்டார். எனக்கு ஆசிரிய நியமனத்திற்கான நேர்முகப் பரீட்சை நாளை பிற்பகல் 2மணிக்கு கொழும்பில் இளைஞர் விவகார அமைச்சில் நடக்குமென்றும் என்னை உடனடியாகப் புறப்பட்டு அங்கு செல்லுமாறும் சொன்னார். அத்துடன் எனது தராதரப் பத்திரங்களை தனது தம்பியிடம் கொடுத்து உடனடியாகவே கொழும்புக்கு அனுப்புவதாகவும், அங்கு குற்ப்பிட்ட இடத்தில் அவரைச் சந்தித்து அதனைப் பெற்றுக் கொள்ளுமாறும் கூறினார். எனக்கு இச் செய்தி ஒரு வகையில் அதிர்ச்சியாகவும் இன்னொரு வகையில் மகிழ்ச்சியாகவும் இருந்தது. எனக்கு பிடித்தமில்லாத இந்த எழுது வினைஞர் வேலையில் இருந்து விடுதலை கிடைக்கப் போவதையிட்டு மகிழ்ந்தேன்.

உடனடியாக கொழும்புக்குப் போவதற்கான பணம் கைவசம் இருக்கவில்லை. உத்தியோகத்தர்களுக்கான புகையிரத ஆணைச்சீட்டை எடுத்தால் உதவியாக இருக்கும் என நினைத்தேன். இந்த இரவு நேரத்திலும் எங்கள் கல்வி அலுவலகத்தில் சில உத்தியோகத்தர்கள் இருப்பார்கள் என்பது எனக்குத் தெரியும். எனவே அங்கு விரைந்தேன். எதிர்பார்க்கப்பட்டது போலவே சில உத்தியோகத்தர்கள் இருந்தார்கள். ஆனால் புகையிரத ஆணைச்சீட்டில் ஒப்பமிடுவதற்கான அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள் எவரும் இருக்கவில்லை.

அப்போது எனது நண்பர் ஒரு உபாயம் சொன்னார். பக்கத்திலுள்ள வெஸ்லி கல்லுலீரியின் அதிபர் விடுதியில் இருப்பார் எனவும் அவரிடம் சென்று உதவி கேட்போம் எனவும் வழிப்படுத்தினார். நண்பரும் உடன்வர அங்கு சென்று அதிபரிடம் எனது நிலைமையைச் சொன்னேன். அதிபரான திரு.மகாலிங்கம் அவர்கள் பெருமனதுடன் பாடசாலை ஆணைச்சீட்டுப் புத்தகத்தில் இருந்து எனக்கு ஆணைச்சீட்டு வழங்கி உதவினார். நேர்முகப் பரீட்சையில் தேர்வு பெற்று தன்னுடைய பாடசாலைக்கே ஆசிரியனாக வர வேண்டும் எனவும் வாழ்த்தி அனுப்பினார்.

அடுத்தநாள் காலையில் மட்டக்களப்பில் இருந்து உதய தேவியில் புறப்பட்டு, திட்டமிட்டபடியே எல்லாம் நடந்து, குறிப்பிட்ட நேரத்தில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றினேன். எனது தராதரப் பத்திரங்களைப் பார்வையிட்ட அதிகாரிகள் சில தராதரப் பத்திரங்கள் இல்லை எனச் சொன்னார்கள். அவற்றை குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் தமது பகுதிக்குச் சேர்க்குமாறும் அறிவுறுத்தினார்கள். நான் உடனடியாகவே யாழ்ப்பாணம் வந்து நண்பன் மூலம் பத்திரங்களை உரிய இடத்தில் சேர்ப்பித்தேன். அவரும் எல்லாவற்றையும் சரியாகச் செய்ததாகவே தகவல் தந்திருந்தார்.

நேர்முகப் பரீட்சைக்கான கடிதம் கிடைத்த பின்னரான தனது செயற்பாடுகளை துணைவியார் கூறினார். "அன்று பாடசாலை விட்ட பின் வேறு ஒரு நிகழ்வில் பங்கு கொண்டு தாமதமாகவே வீடு திரும்பினேன். இப்படி ஒரு கடிதம் வந்திருப்பதாகவும் என்ன செய்யப் போகிறீர்கள் என்றும் ஐயா கேட்டார். கடிதத்தை நானும் வாசித்த பின் என்ன செய்யலாம் என்று யோசித்தேன். எனது சக ஆசிரியையின் உறவினர் தொலைத் தொடர்புத் திணைக்களத்தில் உயர் பதவியில் இருக்கிறார் என்பது நினைவுக்கு வந்தது. உடனே ஒரு வாகனத்தை ஒழுங்கு செய்து 3மைல் தொலைவில் இருந்த அந்த ஆசிரியை வீட்டுக்குச் சென்றேன். அவரிடம் செய்திகளை கூறிய போது அவர் என்னை தனது உறவினரான அந்த உயர் அதிகாரி வீட்டுக்கு அழைத்துச் சென்றார்.

சுகவீனமடைந்திருந்த அவ் உயர் அதிகாரி தனது வீட்டில் படுக்கையில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். தனது உதவியாளரைக் கண்டு "என்ன இந்த நேரத்தில்?" என விசாரித்தார். அவர் என்னைக் காட்டி விபரங்களைச் சொன்ன போது அவர் கண்களை மூடிச் சற்று நேரம் யோசித்துக் கொண்டிருந்தார். பின் படுக்கையில் இருந்தெழும்பி "என்னிடம் உதவி கேட்டு வந்திருக்கிறீர்கள். எனது அதிகாரத்திற்கு உட்பட்ட வகையில் முயன்று பார்ப்போம்" எனக் கூறி முயன்று பாண்டிருப்பு தபாலகத்திற்கான தொடர்பினை ஏற்படுத்தித் தந்தார். அவருக்கு மிகுந்த நன்றி பாராட்டி விடை பெற்றோம். பிறகு நடந்ததெல்லாம் உங்களுக்குத் தெரியும் தானே"

இவ்வளவு பரபரப்பான செயற்பாடுகளால் எல்லாம் சரியாகவே முடிந்தது என்று நிம்மதி அடைந்தேன். என்றாலும் மனதில் ஒரு கிலேசம் இருந்து கொண்டே இருந்தது. பட்டதாரி ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்கள் அவ்வப்போது பத்திரிகைகளில் வந்து கொண்டே இருந்தன. எனது பெயரும் வரும் வரும் என எதிர்பார்த்துக் காத்திருந்தேன். எனது பெயர் வரவேயில்லை. இந் நிலையில் பாடசாலைத் தவணை விடுமுறையையொட்டி எனது வேலைத்தலமான கல்முனைக்கு எனது துணைவியும் வந்திருந்தார். எனது சக உத்தியோகத்தரான முஹமட் ஜிவ்ரி தனது வீட்டிற்கு எங்களை இரவு விருந்து ஒன்றுக்கு அழைத்திருந்தார்.

அங்குபலதும்பத்துமான பேச்சுக்கிடையில் நேர்முகப் பரீட்சை பற்றிய கதையும் வந்தது. முஹமட் ஜிவ்ரியும் தானும் ஆசிரியர் நியமனத்துக்கு காத்திருப்பதாகவும் தனது பெயரும் இன்னும் வரவில்லை என்றும் சொன்னார். எனவே இரண்டு பேரும் கொழும்புக்கு போய் கல்வி அமைச்சில் உரிய அதிகாரியைச் சந்தித்துப் பேசுவதாக ஏற்பாடு செய்து கொண்டோம். குறித்த தினத்தில் கொழும்பில் சந்தித்து கல்வி அமைச்சில் உரிய அதிகாரிக்காகக் காத்திருந்தோம். அவர் வரவேயில்லை.

எதற்கும் இளைஞர் விவகார அமைச்சிற்கு சென்று பார்ப்போமென்று தீர்மானித்து அங்கு சென்றோம். அங்கும் உரிய அதிகாரி எங்கோ சென்று விட்டதாயும், காத்திருக்குமாறும் சம்பந்தப்பட்ட எழுதுவினைஞர் சொன்னார். நீண்ட நேரம் காத்திருந்தும் அதிகாரி வரவில்லை. எங்களின் நிலையைப் பார்த்த எழுதுவினைஞர் தான் உதவி செய்வதாகச் சொல்லி நேர்முகப் பரீட்சை சம்பந்தமான பேரேட்டை எடுத்துப் பார்த்தார். நண்பனுடைய பெயர் தவறுதலாக விடுபட்டுள்ளதென்றும், அடுத்த பட்டியலில் வருமென்றும் கூறி அவனுக்குத் தெம்பளித்தார். என்னுடைய பெயரில் முன்னர் அதிகாரிகள் இல்லையென்று சொன்ன தராதரப் பத்திரங்களின் பதிவு இடம் பெற்றிருக்கவில்லை. நான் முன்னெச்சரிக்கையாக கையுடன் கொண்டு சென்ற அந்தத் தராதரப் பத்திரங்களை அவரிடம் கொடுத்தேன். அவற்றைப் பேரேட்டில் பதிவு செய்த அவர் புன்முறுவலுடன் எங்களைப் பார்த்து "சரி நீங்கள் போங்கோ, அடுத்த பட்டியலில் உங்கள் இருவரின் பெயரும் வரும்" என்று சொன்னரார்.

எங்கள் பார்வையில் நம்பிக்கை இருக்கவில்லை. அதை ஊகித்த அவர் மீண்டும் சொன்னார் "பயப்படாமல் போங்கோ, நான் அதிகாரியிடம் சொல்வேன், அடுத்த பட்டியலில் உங்கள் பெயர் வரும்". நாங்கள் அவருக்கு நன்றி கூறித் திரும்பினோம்.

அடுத்த வாரமளவில், தனது பெயர் பத்திரிகையில் வந்திருக்கின்றதென்றும்,எனது பெயரைக் காணவில்லை என்றும் ஜிவ்ரி சொன்னான். நானும் பரபரப்புடன் பத்திரிகையை வாங்கிப் பார்த்தேன். அவனது பெயர் இருந்தது. எனது பெயரைக் காணவில்லை. ஆனால் ஏ.சண்முகம், கரவெட்டி என்றோர் பெயர் இருந்தது.

வீரகேசரியில் தெரிந்த நண்பருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு விசாரித்தேன். அவரால் சரியான தகவலைத் தர முடியவில்லை. சரி நடப்பது நடக்கட்டுமென்று விரக்தியுடன் இருந்தேன். இரண்டொரு நாட்களின் பின் ஆசிரிய நியமனத்திற்கான கடிதம் வந்திருப்பதாக ஊரிலிருந்து தகவல் அனுப்பியிருந்தனர். இவ்வாறாக நான் ஆசிரியரானேன்.

தங்களது அதிகார வரம்பிற்குஉட்பட்டும், அப்பாலும் மனிதநேயத்துடன் உதவி செய்கின்ற அதிகாரிகள், ஊழியர்கள் அப்போது இருந்துள்ளார்கள். இப்போதுஞ்..?

எதையும் என்னால் முடிக்கமுடியுமென்று முனையும் மனிதர்கள் அக்காலத்தில் இருந்துள்ளார்கள். இப்போதுஞ்..?

பிற்குறிப்பு: 1985-1986ம் ஆண்டுகளில் இப்போதிருக்கின்ற நவீன தொடர்பாடல் வசதிகள் எவையும் இருக்கவில்லை என்பதை வாசகர்கள் கவனத்தில் கொள்க.

# திரைப் பார்வை
# மைக்கேல் மதன காம ராஜன்



நிலவன்

கமல்ஹாசனுடைய திரைப்படங்களில் சமூக அக்கறை மற்றும் புதிய பரிமாணங்களுக்கென்று ஒரு இடம் இருந்தாலும் அவருடைய நகைச்சுவை வெளிப்பாட்டுத் திரைப்படங்களும் வெளிவந்து வெற்றிநடை போட்டிருக்கின்றன. தெனாலி, பஞ்சதந்திரம், மகளிர் மட்டும் போன்ற பல படங்களில் அவர் தனது நகைச்சுவையினை சிறப்பாக வெளிப்படுத்தி வெற்றியும் பெற்றிருக்கின்றார். அவ்வாறானதொரு நகைச்சுவைக் களத்தினுள் 1990ஆம் ஆண்டு வெளிவந்த மற்றுமொரு வெற்றித் திரைப்படம் 'மைக்கேல் மதனகாம ராஜன்' கமல்ஹாசன் நாயகனாக நடித்த இத் திரைப்படத்தில் குஷ்பூ, ரூபிணி, ஊர்வசி ஆகியோர் கதாநாயகிகளாக நடித்திருந்தனர். மைக்கேல், மதன், ராஜ், காமேஸ்வரன் என்று நான்கு மாறுபட்ட கதாபாத்திரங்களை மிகவும் சிறப்பாக இந்தப் படத்தில் தாங்கிச் சென்றிருந்தார் கமல்ஹாசன்.

குறித்த ஒரு செல்வந்தருக்குப் பிறக்கும் நான்கு ஆண்குழந்தைகள் சந்தர்ப்ப வசத்தால் வெவ்வேறு இடங்களில் விடப்பட்டு வெவ்வேறானவர்களால் எடுத்து வளர்க்கப் படுகின்றன. இவர்கள் வளர்ந்து வெவ்வேறு தொழில்களையும் மேற்கொள்கின்றனர். இந் நால்வரும் எவ்வாறு ஒரே இடத்தில் சந்திக்கிறார்கள்? தாம் சகோதரர்கள்தான் என்பதை அவர்கள் அறிந்துகொண்டார்களா? இவர்களின் தந்தை என்ன ஆனார்? என்பதே படத்தின் கதை.

இரண்டரை மணிநேரம் படத்தில் வந்த ஒவ்வொரு காட்சிகளும் ரசிகர்களை குலுங்கிக் குலுங்கிச் சிரிக்க வைத்தன. 'காமேஸ்வரன்' கதாபாத்திரத்தில் நடித்த கமலும், அவருக்கு ஜோடியாக நடித்த ஊர்வசியும் நகைச்சுவையில் கலக்கியிருந்தார்கள். ஊர்வசியும், ஊர்வசியின் பாட்டியும் (லட்சுமி) கமலை ஏமாற்றித் திருமணத்திற்கு சம்மதம் வாங்குவது முதல் காமேஸ்வரனை 'மதன்' (இன்னொரு கமல்) வீட்டுக்கு அனுப்புவது வரைக்குமான காட்சிகளில் லட்சுமி தான் முழு ஆதிக்கம் செலுத்தியிருந்தார். குஷ்பூ, ரூபிணி இருவரும் ஊர்வசி அளவிற்கு இல்லையென்றாலும் தத்தமது கதாபாத்திரங்களை நன்றாகவே செய்திருந்தார்கள்.

இந்தப் படத்தில் கமலின் நான்கு கதாபாத்திரங்களையும் ஒன்றோடொன்று சம்பந்தமில்லாதவாறு வெகு இயல்பாக நகர்த்திச் சென்றிருந்தார் இயக்குநர் சங்கீதம் சீனிவாசராவ். தொழிலதிபர் (மதன்), பிராமண சமையற்காரர் (காமேஸ்வரன்), தீயணைப்பு வீரர் (ராஜ்), கடத்தல்காரர் (மைக்கேல்) என்று நான்கு வித்தியாசமான வேடங்கள் கமலுக்கு. ஆனாலும் இந் நான்கு கதாபாத்திரங்களையும் பேச்சு முதல் சிரிப்பு வரை ஒன்றிற்கொன்று வித்தியாசப்படுத்திச் செய்திருந்தார் கமல். இப்படிப்பட்ட திறமை தான் இவரை தசாவதாரத்தில் கலக்க வைத்தது என்பது உண்மையே. அப்பாவி காமேஸ்வரனாக பிராமண பாஷை பேசுவதிலும் சரி, தீயணைப்பு வீரர் ராஜீவாக மிடுக்காகப் பேசி காதலியுடன் (குஷ்பூ) டூயட் பாடுவதிலும் சரி கமல் தன்னை வேறுபடுத்தி நிலைநிறுத்தியிருந்தார். எஞ்சிய இரு கமல்களுக்கும் நடிப்பதற்கான வாய்ப்புக் குறைவு என்றுதான் சொல்ல வேண்டும்.

கமல்ஹாசனே முழுவதுமாக இப் படத்தை ஆக்கிரமித்து இருப்பதால் ஏனைய நடிகர்களின் பங்களிப்பு குறைவாகவே தேவைப் பட்டது எனலாம். இருந்தாலும் அவரவர் பாத்திரத்தை அனைவரும் அழகாகவே செய்திருந்தனர். நாகேஸ், மனோரமா போன்றோர் அனுபவரீதியான நடிப்பினை வெளிப்படுத்தியிருந்தனர். காமேஸ்வரனின் அப்பாவாக வரும் டெல்லி கணேஷ் அசல் சமையற்காரராகவே வாழ்ந்திருந்தார். சந்தான பாரதி, வெண்ணிற ஆடை மூர்த்தி, லட்சுமி போன்றோரின் இயல்பான நடிப்பும் படத்தை சிறப்பாக நகர்த்திச் சென்றிருந்தன.

மொத்தப் படத்தையும் தாங்கி நிறுத்தியிருந்தது கிரேஸி மோகனின் பேனா. இவர்தான் இப் படத்திற்கு வசனம் எழுதியிருந்தார். இவருடைய டைமிங் வசனங்கள் தான் இவரது ஸ்டைல். அதே ஸ்டைலை அச்சுப் பிசகாமல் இங்கேயும் காட்டியிருந்தார் கிரேஸி மோகன். அந்த வசனங்களை இப் படத்தின் அனைத்து நடிகர்களும் சரியாகவே கையாண்டிருந்தார்கள். தீயணைப்பு வீரராக வரும் ராஜீவின் வசனங்கள் இன்னும் Special (தண்ணீரில் நனைந்த குஸ்பூவைப் பார்த்தவுடன் கமல் 'ஹையா' என்பார். குஷ்பூ கோபமாக அவரைப் பார்க்க உடனே 'அய்யய்யோ' என்று ரூட்டை மாற்றுவார் கமல்).

வசனத்திற்கு கிரேஸி மோகன் என்றால் இசைக்கு இளையராஜா. படம் முழுவதும் இசையில் கோலோச்சியிருந்தார் இளையராஜா. டைட்டில் பாடலிலேயே அரை மணி நேரக் காட்சியை முடித்திருந்தது சிறப்பானதொரு இசைக் கையாள்கை. ஐந்து பாடல்களைக் கொண்ட இப் படத்தில் 'சுந்தரி நீயும்', 'பேரு வைச்சாலும்' போன்ற பாடல்கள் மீண்டும் மீண்டும் கேட்கத் தூண்டின. அதிலும் மலையாள மொழியில் புனையப்பட்ட 'சுந்தரி நீயும்' என்ற பாடல் இந்தியத் திரைப்பட வரலாற்றிலேயே முதல் முதலில் Slow motionஇல் எடுக்கப்பட்ட பாடல் ஆகும்.

இப் படத்தில் சகோதரர்கள் நால்வரும் இணையும் இறுதிக் காட்சியானது சார்லி சாப்ளினின் 'கோல்ட்ரஷ்' என்ற திரைப்படத்தைத் தழுவி எடுக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு கமலாக கதைக்குள் நுழைத்த சுவாரஸ்யம், குழப்பமான கதையினைக் குழப்பமில்லாமல் சொன்ன விதம், கதாபாத்திரங்களின் முக்கியத் தன்மை என்று எல்லாவற்றிலும் சிக்ஸர் அடித்திருந்தான் 'மைக்கேல் மதனகாம ராஜன்'. தமிழ் சினிமாவில் நகைச்சுவைப் படங்களைப் பார்க்க விரும்புவோரும், எடுக்க விரும்புவோரும் தவிர்த்து விட முடியாத, தவிர்த்து விட விரும்பாத திரைப்படமாக 'மைக்கேல் மதனகாம ராஜன்' இன்றுவரை நிலைத்திருக்கின்றது.





# அம்மனிற்கு வேலியிட்ட கிறிஸ்தவர்கள்

மன்னார் மூன்றாம்பிட்டி வெள்ளாங்குளம் கிராமத்தில் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய பரிபாலன சபைக்கும் அடைக்கல மாதா தேவாலய நிர்வாகத்தினருக்கும் இடையே இருந்து வந்த பிணக்கு தீர்விற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இக்கிராமத்தில் இவ்விரு சமயஸ்தலங்களும் அருகருகாக அமைந்திருந்தன. எனினும், பெரிய பிணக்குகள் எதுவும் அங்கு உருவாகவில்லை. இரு சமயத்தினரும் அமைதியாகவே இருந்து வந்தனர்.

தேவாலயத்தை அண்மித்த பகுதியினாலே இந்து ஆலயத்திற்கு செல்லும் பக்தர்கள் சென்றுவந்தனர். இது இவ்வாறு இருக்கையில் கடந்த சில மாதங்களுக்கு முன் திடீரென கிறிஸ்தவ தேவாலயத்தைச் சேர்ந்தவர்களால் கொங்கிறீட் தூண்கள் போடப்பட்டு முள்ளுக்கம்பியினால் வேலி அமைக்கப்பட்டது. இந்துக்கள் பயன்படுத்தி வந்த பாதையும் சேர்த்து அடைக்கப்பட்டது. இந்த செயல் அப்பகுதியிலுள்ள இந்து மக்கள் மத்தியில் பெரும் விசனத்தினை ஏற்படுத்தியது.

இந்த விவகாரம் அங்கு பெரும் சர்ச்சையை உருவாக்கியது. இருதரப்பிற்குமிடையில் மோதல் போக்கு ஏற்பட்டு, மதசண்டை உருவாகும் வாய்ப்பும் ஏற்பட்டது. கிராம உத்தியோகத்தர், பிரதேச செயலர் உள்ளிட்ட அதிகாரிகளை சந்தித்து, தமது போக்குவரத்து பாதையை விடுவித்து தருமாறு இந்து மக்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்த விடயத்தில் இந்து அமைப்புக்கள் பல நேரடியாக தலையிட ஆரம்பிக்க, சர்ச்சை உச்சமடைய தொடங்கியது. எனினும், பாதையை விடுவிக்க கிறிஸ்தவ அமைப்புக்கள் தயாராக இருக்கவில்லை.

அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட சிவசேனை அமைப்பிற்கும் இந்த விடயம் தெரியப்படுத்தப்பட்டது. சிவசேனை முக்கியஸ்தர்களையும் அழைத்துக்கொண்டு மறவன்புலவு சச்சிதானந்தமும் அங்கு சென்று பார்வையிட்டு, அதிகாரிகளுடன் கலந்துரையாடல் நடத்தினார்.

நிலவரம் கலவரமாவதையடுத்து விரைந்து செயற்பட்ட அதிகாரிகள் கடந்த 17ம் திகதி பிரச்சனையைக்கு முற்றுப்புள்ளியிட்டுள்ளனர். மாந்தை மேற்கு பிரதேச செயலர், பிரதேசசபை அதிகாரிகளும் இந்து அமைப்பின் பிரதிநிதிகள் சிலரும் அங்கு சென்றிருந்தனர்.

கிறிஸ்தவ ஆலய பிரமுகர்களையும் அழைத்து அங்கு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இரண்டு மத பிரதிநிதிகளின் கருத்துக்களையும் கேட்டறிந்த அதிகாரிகள், இந்து ஆலயத்திற்கு செல்வதற்காக இருந்த பாதையை திறந்துவிடுமாறு உத்தரவிட்டுள்ளனர். அதனை இருதரப்பினரும் ஏற்றுக் கொண்டனர். 13 அடி அகலமான பாதை திறந்துவிடுவதென உடன்பாடு எட்டப்பட்டது.



1980ம் ஆண்டு இங்கிலாந்து இளவரசர் சார்லஸ் சென்னை வந்தபோது ராஜாஜி மண்டபத்தில் அவருக்கு வரவேற்பு நிகழ்ச்சி நடந்தது. அப்போது, முதல்வர் எம்.ஜி.ஆர். கூறுவதை ரசித்து கேட்கிறார் இளவரசர் சார்லஸ்.

எம்.ஜி.ஆர் 100 நெடுந்தொடர் 29

# மக்களின் மனங்களில் இன்றும் வாழ்பவர்!

**எம்.ஜி.ஆர்.** பிறர் அடைய முடியாத எட்டாத உயரத்துக்குச் சென்றபோதும் அவரது எண்ணம் எப்போதும் சமூகத்தின் கடைநிலையில் வாழும் சாதாரண மக்களைப் பற்றியே இருந்தது. அதனால்தான் சாதாரண மக்களின் மனங்களில் இன்றும் அவர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

மும்பையில் மாதுங்கா, டெல்லியில் கரோல்பாக் போல கொல்கத்தா நகரில் லேக் ஏரியா என்ற இடம் தமிழர்கள் அதிகம் வாழும் பகுதி. 1982ம் ஆண்டில் அங்கு கட்டப்பட்ட தமிழ்ச்சங்கக் கட்டிடத்தை நிர்வாகிகள் அழைப்பின்பேரில் அங்கு சென்று முதல்வர் எம்.ஜி.ஆர் திறந்து வைத்தார். அந்தக் கட்டிடம் எழும்ப மூல காரணமாக இருந்தவரே எம்.ஜி.ஆர்தான். கட்டிடம் கட்டுவதற்காக ரூ.5 லட்சம் நன்கொடையாக அளித்தார்.

விமானம் மூலம் கொல்கத்தா சென்ற எம்.ஜி.ஆரை திரளான தமிழர்கள் வரவேற்றனர். மாலையில் தமிழ்ச்சங்க கட்டிடத் திறப்புவிழா நடந்தது. இரண்டு நாட்கள் அங்கு தங்கினார். அப்போது, மேற்குவங்க முதல்வராக இருந்த ஜோதிபாசுவை சந்தித்து பேசினார்.

எம்.ஜி.ஆர் அப்போது தமிழகத்தின் முதல்வர் என்ற முறையில் மேற்கு வங்க அரசின் விருந்தாளியாக வரவேற்கப்பட்டார். விமான நிலையத்தில் இருந்து அதிகாரிகள் அவரை ஆளுநர் மாளிகைக்கு அழைத்துச் சென்றனர். அங்குதான் இரண்டு நாட்களும் எம்.ஜி.ஆர் தங்குவதாக ஏற்பாடு. பிரம்மாண்டமும் ஆடம்பரமுமான ஆளுநர் மாளிகைக்கு அழைத்துச் செல்லப்பட்ட எம்.ஜி.ஆர், தான் தங்க வேண்டிய இடத்தை சுற்றிப் பார்த்தார். 10 நிமிடங்களில் "இந்த இடம் நமக்கு சரிப்பட்டு வராது. ஓட்டலுக்குச் சென்று தங்கிவிடலாம்" என்று கூறி புறப்பட்டு விட்டார்.

மேற்குவங்க அதிகாரிகளுக்கு அதிர்ச்சி ஒருபுறம்; வியப்பு மறுபுறம். "ராஜ் பவனில் எல்லா வசதிகளும் இருக்கின்றன. இங்கேயே தங்கலாமே" என்று கேட்டுக் கொண்டனர்.

எம்.ஜி.ஆர் புன்னகைத்தபடியே, "தங்களின் அன்புக்கு நன்றி. இங்கே எனக்கு வேண்டிய எல்லா சவுகரியங்களும் உள்ளன. ஆனால், நிறைய தமிழர்கள் என்னைப் பார்க்க வருவார்கள். கட்டுப்பாடுகள் நிறைந்த ஆளுநர் மாளிகைக்குள் அவர்களால் நுழைய முடியாது. அவர்களுக்கு சவுகரியமான இடத்தில் நான் இருக்கணும்" என்று சொல்லிவிட்டு ஆளுநர் மாளிகையில் இருந்து கிளம்பிவிட்டார்.

ஆளுநர் மாளிகை அமைந்திருக்கும் 'டல்ஹவுசி சதுக்கம்' என்ற பகுதியிலேயே இருந்த ஒரு ஓட்டலில் தங்கினார். தன்னுடன் வந்த உதவியாளர்கள், தமிழக அரசு அதிகாரிகளையும் அதே ஓட்டலில் தங்க வைத்தார். அரசு சார்பில் ராஜபோகங்களுடன் இலவசமாக தங்குவதற்கு வாய்ப்பு இருந்தும் தன்னைப் பார்க்க வரும் தமிழர்களின் வசதிக்காக சொந்த செலவில் ஓட்டலில் தங்கினார் எம்.ஜி.ஆர்.

அவர் வரும் தகவல் பற்றி பெரிய அளவில் கொல்கத்தாவில் விளம்பரம் செய்யப்படவில்லை. இருந்தாலும் தன்னைப் பார்க்க தமிழர்கள் வருவார்கள் என்ற எம்.ஜி.ஆரின் கணிப்பு தவறவில்லை. கொல்கத்தாவில் வாழும் தமிழர்களுக்கு விஷயம் தெரிந்து சில மணி நேரங்களில் எம்.ஜி.ஆரைப் பார்க்க ஓட்டலுக்கு கூட்டமாக வர ஆரம்பித்துவிட்டனர்.

அப்படி வந்தவர்களில் பெரும்பாலோர் சாதாரண மக்கள். எம்.ஜி.ஆரை விழிகளால் விழுங்கியபடியே அவரது கையை குலுக்கியும் காலில் விழுந்து வணங்கியும் மகிழ்ச்சியையும் அன்பையும் வெளிப்படுத்தினர்

அவரைப் பார்த்துவிட்டு வெளியே வந்த சாதாரண மக்களின் கைகளில் எம்.ஜி.ஆர் ஏற்பாட்டின்படி அவரது உதவியாளர் மாணிக்கம் பணத்தை திணித்து அனுப்பினார். மக்கள் எம்.ஜி.ஆரை வாழ்த்திச் சென்றனர்.

தமிழ்ச்சங்கக் கட்டிடத் திறப்பு விழாவுக்கு மறுநாள் காலை, திடீரென தான் தங்கியிருந்த ஓட்டலில் இருந்து புறப்பட்டு சாலையில் இறங்கி எம்.ஜி.ஆர் நடக்க ஆரம்பித்துவிட்டார். அங்கு வந்திருந்த தமிழ்ச் சங்க நிர்வாகிகளும் எம்.ஜி.ஆரோடு நடந்தனர். சாலையில் கொய்யாப்பழம் விற்றுக்கொண்டிருந்த வயதான தமிழ்ப் பெண்ணிடம் "பழம் என்ன விலை?" என்று ஜாலியாக கேட்டார். அந்த மூதாட்டியும் சளைக்கவில்லை. எம்.ஜி.ஆரை பார்த்த மகிழ்ச்சியில் அந்த மூதாட்டி, "உனக்குப் போய் விலை சொல்ல முடியுமாய்யா? எல்லாமே உனக்குத்தான் எடுத்துக்கோ" என்று கூறினார்.

எம்.ஜி.ஆரின் 100வது படம் 'ஒளிவிளக்கு'. 1968ம் ஆண்டில் வெளியாகி அமோக வெற்றி பெற்றது. மதுரையில் 21 வாரங்கள் ஓடியது. மறு வெளியீடுகளிலும் சக்கைபோடு போட்டது. 1979ம் ஆண்டு இலங்கையில் மறு வெளியீட்டிலும் 100 நாட்கள் ஓடி சாதனை படைத்தது 'ஒளிவிளக்கு'.

அந்த மூதாட்டி நினைத்துப் பார்க்காத தொகையை அவர் கையில் திணித்த எம்.ஜி.ஆர், கூடையில் இருந்த பழங்களை எடுத்து அருகே இருந்தவர்களுக்கு கொடுத்துவிட்டு அந்த மூதாட்டியிடமும் பழத்தைக் கொடுத்து "நீயும் சாப்பிடு" என்றார். அந்த மூதாட்டிக்கு அழுகையே வந்துவிட்டது. "நீ நல்லா இருக்கணும் ராசா" என்று கூறிக் கொண்டே காலில் விழ முயன்றவரை தடுத்து அணைத்து ஆறுதல் கூறினார் எம்.ஜி.ஆர்!

'நாடோடி மன்னன்' படத்தில் நாடோடியாக இருந்த எம்.ஜி.ஆர், சூழ்நிலை காரணமாக மன்னனாக நடிப்பார். ஒரு காட்சியில் எம்.ஜி.ஆர் பேசும் புகழ் பெற்ற வசனம் இது: "நீங்கள் மாளிகையில் இருந்து கொண்டு மக்களை பார்க்கிறீர்கள். நான் மக்களோடு இருந்து மாளிகையை கவனிக்கிறவன்."


தொடரும்...



அரசு விழாவில் மூதாட்டிக்கு முதல்வர் எம்.ஜி.ஆர். உதவி வழங்குகிறார். அருகே எஸ்.டி.சோமசுந்தரம்.



மக்களோடு மக்களாக மக்கள் திலகம்.



# ஏழைகளின் தோழன் பிரான்சிஸ் அசிசியார்

ஒவ்வோர் ஆண்டும் ஒக்டோபர் திங்கள் 4ம் திகதி கத்தோலிக்கத் திருச்சபையானது ஒரு முக்கியமான புனிதரின் திருநாளை கொண்டாட அழைப்பு விடுக்கிறது. கி. பி. 1182 ம் ஆண்டு இத்தாலி நாட்டில் உள்ள ஒரு செல்வந்த குடும்பத்தில் பிறந்து, வளர்ந்து பின்னர் இயேசுவுக்காக அனைத்தையும் துறந்துவிட்டு, எளிமை வாழ்வினை பூண்டு, திருச்சபை வரலாற்றில் ஒரு பெரிய திருப்பத்தை ஏற்படுத்திய ஒரு மாபெரும் புனிதர் புனித பிரான்சிஸ் அசிசியார்.

புனிதரின் திருநாளைச் சிறப்பிக்கும் இந்நன்னாளில் அவரது வாழ்வு நமக்கு ஒரு மிக முக்கியமான வாழ்க்கைப் பாடத்தைக் கற்பிக்கிறது. செல்வாக்கு மிகுந்த ஒரு வணிகரான தன் தந்தையின் செல்வச்செழிப்பில்தனதுஇளமைப்பருவத்தை செலவிட்ட அவர், 1204ல் ஆண்டவர் இயேசுவால் ஆட்கொள்ளப்பட்டு உலக வாழ்வினை வெறுத்து தனக்குச் சொந்தமான தன் தந்தையின் செல்வம் அனைத்தையும் வேண்டாம் என உதறித்தள்ளிவிட்டு ஏழைகளின் தோழனாய் எளிமை வாழ்வு பூண்டார்.

தன்னை ஆட்கொண்ட இயேசுவுக்காக எல்லாவற்றையும் இழந்து எல்லாவற்றிலும் இறைவனைக் கண்டு பாவித்து எளிமையினை மையப்படுத்தியஓர் இனிமையான ஆன்மீத்தை அனைவருக்கும் தனது வாழ்வினால் வழங்கினார். 1209 ல் பிரான்சிஸ்கன் துறவற சபையினைத் துவங்கி அதன் மூலம் எளிமை வாழ்வினை வாழ்ந்து ஏழைகளின் தோழர்களாய் இயேசுவைப் போதிக்க அழைப்பு விடுத்தார்.

தனது 42ம் வயதில் ஆண்டவர் இயேசுவின் ஐந்து திருக்காயங்கள் அவருக்கு வழங்கப்பட்டு அதிக வேதனைகளை அனுபவித்து தனது 44ம் வயதில் 1226ம் ஆண்டு உயிர் நீத்தார். இவர் மறைந்தாலும் இத்தனை ஆண்டுகள் கடந்தும் இவரின் வாழ்வும், உயரிய ஆன்மீகமும் இன்றும் பலரையும் கவர்ந்திழுக்கின்றது.

ஏழை எளியோரிலும், வாடிடும் வறியோரிலும், பறவைகள் விலங்குகளிலும் பரமனைக் கண்டு தரிசித்து இயற்கையோடு இணைந்த வாழ்வு வாழ்ந்த இப்புனிதரின் வாழ்வு இந்த நவீன உலகில் இயற்கையை மதிக்க மறுக்கும் மானுடத்தை மாற்றிட வேண்டும். பணத்திலும், பகட்டிலும் கவனம் செலுத்தும் மனிதர்கள் அனைவரும் பணிவிலும், பரிவிலும் கவனம் செலுத்தி பண்பான வாழ்வு வாழ்ந்திட புனிதரின் வாழ்வு வித்திடட்டும்.

ஏழைகளின் தோழன் புனித அசிசியை பின்பற்றி ஏழைகளின் தோழனாய் எழுச்சிமிகு வார்த்தைகளாலன்றி எளிமையான வாழ்வால் கிறிஸ்துவை அறிவித்துக்கொண்டிருக்கும்திருத் தந்தை பிரான்சிஸ் அவர்களின் தலைமையிலே ஏழைகளிலும், இயற்கையிலும் இறைவனைக் கண்டு பணிவிலும் பரிவிலும் நிலைத்து ஏழைகளின் தோழர்களாய் வாழ முற்படும் போதுதான் நாம் கொண்டாடும் இத்திருநாள் அர்த்தம் பெறும் நமது விசுவாசமும் ஆழம் பெறும்.

# உங்கள் குலதெய்வத்தை தெரிந்து கொள்வது எப்படி?

தனது குலதெய்வம் எதுவென்று தெரியாதவர்கள் தற்காலத்தில் பெருகிக்கொண்டே செல்வது வருந்தத்தக்க ஒன்று. வேலைவாய்ப்பு தேடி சொந்த ஊரை விட்டு வந்தவர்கள்,இரண்டு அல்லது மூன்று தலைமுறையாக குலதெய்வம் கோயில் பக்கம் செல்லாதவர்கள், தாங்கள் வசிக்கும் பகுதியிலேயே தங்கள் குலதெய்வத்தின் அம்சத்தினை ஒட்டிய இறை மூர்த்தங்களை வணங்குபவர்கள் என குலதெய்வத்தினை மொத்தமாக மறந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்கிறது. ஜாதகத்தில் தோஷம் எதுவும் இல்லை, ஆனால், திருமணம் தடைபட்டுக் கொண்டே செல்கிறது, உடம்பில் குறை ஏதும் இல்லை, ஆனால், என்ன காரணத்தினாலோ இன்னமும் குழந்தை பிறக்கவில்லை என்று ஏதேனும் ஒரு குறை உண்டாகும்போதுதான் நமக்கு குலதெய்வத்தின் நினைவு வருகிறது. இவ்வாறு குலதெய்வம் எது என்று தெரியாதவர்கள் தங்கள் பங்காளிகள் அனைவரின் குடும்பத்திலும் தலைச்சன் பிள்ளை அல்லது தற்போது உயிருடன் உள்ள மூத்த பிள்ளையின் ஜாதகத்தினை எடுத்துக்கொள்ளுங்கள். இவர்கள் அனைவரின் ஜாதகத்திலும் ஏதேனும் ஒரு அம்சம், அதாவது, ஏதேனும் ஒரு கிரஹத்தின் அமர்வு நிலை கிட்டத்தட்ட ஒரே மாதிரியாக இருக்கும்.

குறிப்பாக ஐந்து அல்லது ஒன்பதாம் வீட்டிற்கு அதிபதி அல்லது அந்த வீடுகளில் அமர்ந்திருக்கும் கிரஹங்கள் ஆகியவற்றின் நிலை ஒரே மாதிரியாக இருக்கும். ஐந்து மற்றும் ஒன்பதாம் பாவங்களைக்கொண்டு குலதெய்வம் என்பது என்ன அம்சம் பொருந்தியது என்பதை ஒரு ஜோதிடரால் கணித்துச் சொல்லமுடியும். குடும்பத்தில் தலைச்சன் பிள்ளை பிறக்கும்போது ஐந்தாம் வீட்டிற்கு அதிபதி நீசம் பெற்றிருந்தோ அல்லது ஐந்தாம் வீட்டில் நீச பலத்துடன் கிரஹங்கள் அமர்ந்திருந்தால் குலதெய்வ வழிபாட்டினை இந்த தலைமுறையில் செய்தாக வேண்டிய கட்டாயத்தில் உள்ளீர்கள் என்பதனைப் புரிந்துகொள்ளுங்கள். ஒரு சிலர் தங்கள் குலத்திலேயே உதித்து மனிதரோடு மனிதராக வாழ்ந்து, தன் குலத்திற்காக உயிரையும் தியாகம் செய்த உத்தம ஆத்மாவை தங்கள் குலதெய்வமாக வணங்கி வருவார்கள். அத்தகைய உத்தம ஆத்மாக்களிடம் தெய்வாம்சம் நிறைந்திருக்கும். அத்தகைய மனிதர்களுக்காக அவரது வம்சாவளியினர், அல்லது அவரது வழியினைப் பின்பற்றி நடப்பவர்கள் கோயில் கட்டி வழிபட்டு வந்திருப்பார்கள். இத்தகைய நிலையினையும் உங்கள் குடும்பத்தைச் சேர்ந்த தலைச்சன் பிள்ளைகளின் ஜாதகத்தைக்கொண்டு தெரிந்துகொள்ள முடியும். ஜாதகத்தில் அதற்கான வழிமுறை உள்ளது. எது எப்படியாயினும் குலதெய்வ வழிபாடு ஒன்றே குறைகளைப் போக்கி நிறைவான வாழ்வினைத் தரவல்லது என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.



# தமிழ் எண் கணித பலன்கள்

## எண் 5

5, 14, 23, 32 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களும் பெயர் கூட்டெண் ஐந்தாக உள்ளவர்களும் இந்த எண்ணின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளவர்கள் ஆவர்.


எண் ஐந்துக்குரிய கோள் ராகு ஆகும். இது ஒரு நிழல் கோள் ஆகும். பாம்பின் தலை கொண்ட ஒரு மனிதனாக இது கருதப்படுகிறது. ஒன்பது கோள்களில் எண் ஐந்தாகிய ராகுவே வரிசையின் நடுவில் அமைந்துள்ளது. இது ராகுவின் நடுநிலைப் பண்பைக் காட்டுகிறது. இவ்வெண்ணின் தாக்கம் பெற்றவர்கள் ஒரு சமுதாயத்திலோ நிறுவனத்திலோ வீட்டிலோ நடுநிலை கொண்டவர்களாகவே இருப்பர். எந்த ஒரு நிறுவனமானாலும் அது தொடர்ந்து இயங்குவதற்கு நடுநிலைமை அதாவது சமநிலை தேவை. சமநிலை பிறழ்ந்தால் இயக்கம் பாதிக்கப்படும். அதைப்போலவே இம்மக்கள் விரும்பினால் ஒரு சமநிலையை உடைக்கமுடியும். புதிய கருத்துக்கள் மற்றும் புதிய செயல்களின் மூலம் இவர்கள் ஒரு சமுதாயம்அல்லதுநிறுவனத்தின்சமநிலையை உடைத்து புரட்சிக்கு அடிகோலுவர்.

உடல் உறுப்புக்களில் ராகு வயிற்றை ஆள்கிறது. வயிறு கெட்டால் உடலில் அனைத்து உறுப்புக்களும் பாதிக்கப்படுவதை நாம் நன்கு அறிவோம். பசிக்கும்போது துன்புறும் நாம் புசிக்கும்போது இன்புறுகிறோம். இவ்வாறு இன்பத்தையும் துன்பத்தையும் மாறிமாறித் தரவல்ல கோள் ராகு ஆகும். இந்த எண்ணுக்குரியவர்களின் வாழ்க்கை நிலையும் அவ்வாறே ஆகும்.வாழ்க்கையில் ஏற்றத்தாழ்வுகளால் பெரிதும் பாதிக்கப்படுவர். எதிர்பாராமல் நடக்கும் இன்ப துன்பங்களால் இவர்கள் நிலைகுலைந்தாலும் மீண்டும் எழுந்து விடுவர்.

இக்கோளின் தாக்கம் பெற்றவர்களில் ஒரு சாரர் கூத்து, திரைப்படம், நாடகம் முதலான துறைகளில் பணியாற்றுவதைக் காணலாம். மகிழ்ச்சி, துயரம் முதலான முரணான உணர்ச்சிகளை வெளிப்படுத்திக் காட்டும் இத்துறைகளில் இவர்கள் தலைசிறந்து விளங்குவர்.

எண் ஐந்துக்குரிய எழுத்துக்கள் 'ஐ' என்னும் உயிரெழுத்து ஆகும்.

ராகுவின் நிலை கெட்டிருந்தால் வாழ்க்கை நீண்ட போராட்டமாகத் தோன்றும். ஒவ்வொரு செயலும் நீண்ட முயற்சிக்குப் பின்னரே முடியும். இன்பமும் துன்பமும் மாறிமாறி வரும். நண்பர்களாக இருந்தவர்களே திடீரென்று எதிரிகளாக மாறுவர். நீரோட்டத்தில் அடித்துச் செல்லப்படும் இலையைப் போல இவர்களது வாழ்க்கை விதியினால் செலுத்தப்படும்.




# வட்ஸ்அப் மெசேஜை அன்டசென்ற் செய்ய வழிகள்!

நாம் ஒருபோதும் தவறான நபருக்கு வட்ஸ்அப் செய்தியை அனுப்பியதே இல்லை என்று கூறினால் நிச்சயமாக நாம் பொய் சொல்கிறோம் என்று அர்த்தம். சில நேரங்களில், உங்கள் நண்பருக்கு அனுப்பப்படும் செய்தி தவறானதாகப் போகக்கூடும் அல்லது சில நேரங்களில் அனுப்பும் நண்பரே தவறான நபராக இருக்க கூடும். ஆனால், அப்படியாக தற்செயலாக அனுப்பிய வட்ஸ்அப் மெசேஜை தடுக்க முடியும் என்றால் நீங்கள் கண்டிப்பாக ஆச்சரியப்படுவீர்கள். அதை நிகழ்த்த இரண்டு வெவ்வேறு தந்திரம் இருக்கின்றன.!

சரியாகச் சொன்னால், நீங்கள் துல்லியமாக 100 சதவிகிதம் சென்ட் செய்த வட்ஸ்அப் செய்தியை அன்சென்ட் செய்து விட முடியாது. ஆனால்,அன்சென்ட் செய்வதற்கு சமமான ஒரு விடயம் உள்ளது அதை முயற்சி செய்து பார்க்கலாம்.

### தந்திரம் 01

ஏற்கனவே ஒரு தொடர்புக்கு அனுப்பட்ட வட்ஸ்அப் மெசேஜ் சென்ட் ஆவதற்குள் நீங்கள் உடனடியாக உங்களின் வைஃபை அல்லது மொபைல் டேட்டாவை ஓப் செய்து விடலாம்.

இப்படி செய்வதின் மூலம் நீங்கள் வட்ஸ்அப் செய்தியின் கீழே ஒரு டிக் (சென்ட் செய்யப்பட்ட அடையாளம்) ஏற்படுவதை தடுத்து நிறுத்த முடியும். இதை செய்ய நீங்கள் மிக வேகமாக செயல்பட வேண்டும்.

இதை நீங்கள் நிகழ்த்த ஒரு மோசமான இணைய இணைப்பில் இருக்க வேண்டும். ஏனெனில் பொதுவாகவே வட்ஸ்அப் வழக்கமாக மிக விரைவான மற்றும் ஒரு ஃபிளாஷில் செய்திகளை அனுப்பி விடும் சேர்வர்களை கொண்டது.

### தந்திரம் 02

சரி கவலை வேண்டாம், இன்னொரு வழி இருக்கிறது. அதாவது நீங்கள் தவறாக மெசேஜ் அனுப்பிய நபரை டபுள் டிக் வருவதற்குள் உங்கள் வட்ஸ் இப் அக்கவுண்டில் இருந்து பிளாக் செய்து விட்டால் அந்த குறிப்பிட்ட மெசேஜ் அவரை சென்றடையாது.

# ஸ்மார்ட்போன் சார்ஜிங் கோளாறுகளை சரி செய்யும் முறை!




ஸ்மார்ட்போனில் திடீரெனச் சார்ஜ் ஆகவில்லை என்றால் உடனே, பற்றரி அல்லது சார்ஜர் வேலை செய்யவில்லை என முடிவு செய்திடுவர். பொதுவாக இதுபோன்ற சார்ஜிங் கோளாறுகளை வீட்டிலேயே சரி செய்ய முடியும். அமைதியாய் சிறிது நேரம் செலவழித்துக் கீழ் வரும் வழிமுறைகளை முறையாகப் பின்பற்றினாலே சார்ஜிங் கோளாறுகளைச் சரி செய்திடலாம்.

போனின் யுஎஸ்பி போர்ட்டுடன் சார்ஜிங் கேபிள் சரியாகப் பொருந்தாமல் விட்டால் சார்ஜ் ஆகாது. இதனைச் சரி செய்யச் சிறிய ஊசி அல்லது பற்குத்தும் குச்சி கொண்டு யுஎஸ்பி போர்டினை பொருந்தும் படி நீங்களாகவே சரி 'செய்யலாம்.

ஸ்மார்ட்போன்களை எப்போதும் ஜீன்ஸ் பொக்கற்றுகளில் வைப்பவர் என்றால் பொக்கற்றில் இருக்கும் பஞ்சு யுஎஸ்பி போர்ட்டினுள் புகுந்திருக்கலாம். அவ்வாறு பஞ்சு இருக்கும் பட்சத்தில் அவற்றை எடுத்து விட்டால் பிரச்சனை தீர்ந்து விடும்.

சில சமயங்களில் வேறு யுஎஸ்பி கேபிளினை பயன்படுத்திப் பார்க்கலாம். பல முறை இது சரியாக வேலை செய்யும். இவ்வாறு வேலை செய்யும் பட்சத்தில் புதிய கேபிள் ஒன்றை வாங்குவது நல்லது.

மேலும் உங்களின் சார்ஜர் வேறு கருவியுடன் வேலை செய்கிறதா என்பதையும் உறுதி செய்து கொள்ளுங்கள். இதனால் பிரச்சனை எங்கு உள்ளது என்பதைத் தெரிந்து கொள்ள முடியும்.

ஸ்மார்ட்போன் பற்றரிகள் நீண்ட காலம் உழைக்காது. சிறிதுகாலத்தின்பின் பற்றரி வக்கப் நேரம் வழக்கத்தை விட மிகவும் குறைவாகக்கூடும். இவ்வாறு ஏற்படும் போது பற்றரியை மாற்றிட வேண்டும்.

# இணைய வசதி இல்லாமல் போட்டோ அனிமேஷன் உருவாக்குவது எப்படி?

கூகுள் போட்டோஸ் அப் அடிக்கடி, கிட்டத்தட்ட ஒவ்வொரு பயனர்களுக்கும் சுவாரஸ்யமான மேம்படுத்தல்களை வழங்கி கொண்டே உள்ளது. அதிக மடங்கு பயனர்களை கொள்வது, பயனர்களை நடைமுறையில் மகிழ்ச்சியாக வைத்திருத்தல் மற்றும் ஒரு பயனர் நட்பு இடைமுகம் உருவாக்குதல் ஆகிவைகள் தான் கூகுள் போட்டோஸ் அப்பின் நோக்கமாகும். சமீபத்திய கூகுள் போட்டோஸ் மேம் படுத்தல் ஆனது அண்ட்ரோய்ட் பயனர்களுக்கு புகைப் படங்களை ஏற்பாடு செய்ய, திருத்த மற்றும் பகிர்ந்து மற்றும் ஒரு சுவாரஸ்யமான அனிமேஷன் உருவாக்கவும் அனுமதிக்கிறது.



இந்த புதிய மேம்படுத்தல் ஆனது பயனர்கள் தங்கள் மொபைல் தொகுப்பு புகைப் படங்களில் இருந்து இணைய இணைப்பில் இல்லாத போதும் கூட, போட்டோ அனிமேஷனை உருவாக்கும் திறனை வழங்கும்.




இந்த புதிய மேம்படுத்தலை அனுபவிக்க, பயனர் கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து மேம் படுத்தப்பட்ட கூகுள் போட் டோஸ் அப்பை பதிவிறக்கம் செய்ய வேண்டும். அண்ட் ரோய்ட் ஸ்மார்ட்போன் மூலம் வெறுமனே இணைய இணைப்பு இல்லாமல் ஒரு புகைப்பட அனிமேஷன் உருவாக்க கீழ்வரும் 4 எளிய வழிமுறைகளை பின்பற்றவும்.





### வழிமுறை 01

முன்னரே கூறியபடி அண்ட்ரோய்ட் பயனர்கள் கூகுள் ப்ளே ஸ்டோர் சென்று தங்களது ஸ்மார்ட் சாதனத்தில் கூகுள் போட்டோஸ் அப்தனை சமீபத்திய பதிப்பால் புதுப்பிக்க வேண்டும்.




### வழிமுறை 02

அப்டேட் மற்றும் இன்ஸ்ரோல் செய்த பின்னர் பயனர் தங்களது அண்ட்ரோய்ட் தொலைபேசியின் இண்டர்நெட்டை ஓப் செய்துவிட்டு கூகுள் போட்டோஸ் அப்தனை திறக்கவும்.




### வழிமுறை 03


கூகுள் போட்டோஸ் பயன்பாட்டை திறந்த பின்னர், பயனர் திரையின் மேல் வலது மூலையில் கிளிக் செய்ய ஒரு பட்டியல் தோன்றும், பட்டியலில் இருந்து "கிரியேட் நியூ அனிமேஷன்" என்ற விருப்பத்தை தேர்வு செய்யவும்.



### வழிமுறை 04

புதிய அனிமேஷன் உருவாக்க என்ற விருப்பத்தை கிளிக் செய்த பின்னர், பயனர் படங்களை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கேட்கப்படும். உங்கள் தொலைபேசி கலரியில் இருந்து 50 புகைப்படங்களை தேர்வு செய்ய முடியும். பின்னர் தேவைக்கேற்ப அனிமேஷன்களை நிகழ்த்திக்கொள்ளலாம்.




மிக இலகுவா பின்னல். நீலமான முடி கட்டையான முடி அடர்த்தியான முடி அடர்த்தி குறைந்த முடி என்று வேறுபாடு பாக்காமல் எல்லோரும் தினமும் அலுவலகம் கோவில் படிக்க செல்லும் பொழுது பின்னி கொள்ளலாம். ஆழகாக இருக்கும்.



# நரை முடி வெடிப்பு நீங்க சிறந்த மருந்து

வாரம் இருமுறை கடுகு எண்ணெயை தலையில் தேய்த்து குளித்தால் வயதானாலும் நரை முடி எளிதில் வராது. கடுகு எண்ணெயை லேசாக சூடுபடுத்தி தலையில் மசாஜ் செய்தால் நரை முடி மறையும்.

ஒரு நாள் விட்டு ஒரு நாள் இந்த எண்ணெயை உபயோகித்தால் கூந்தல் அடர்த்தியாக வளரும். கடுகு எண்ணெய் பயன்படுத்துவதால் ஈரப்பதம் அதிக நேரம் கூந்தலில் நீடிக்கும். எளிதில் வறட்சி அடையாது.

பொடுகு அரிப்பினால்கூந்தல் ஆரோக்கிய மற்றதாக காணப்பட்டால் கடுகு எண்ணெய் கொண்டு தினமும் மசாஜ் செய்ய குளிக்க வேண்டும். இதனால் கூந்தல் வளர்ச்சியும் அதிகரிக்கும். மெலிதான கூந்தல் இருந்தால் வாரம் மூன்று நாட்கள் கடுகு எண்ணெய் கொண்டு ஆயில் மசாஜ் செய்து குளித்து வர கூந்தல் அடர்த்தி அதிகரிக்கும்.

கூந்தலில் நுனி அடிக்கடி பிளவு உண்டானால் அதிகமாக முடி உதிர்தல் ஏற்படும். இதனை தடுக்க கடுகு எண்ணெயால் மசாஜ் செய்து வர நுனி பிளவு நீங்கும்.

# பலன் தரும் இஞ்சி



இஞ்சிக்கு ஏராளமான மருத்துவ குணங்கள் உண்டு. நாம் உண்ணும் உணவில் இஞ்சி கலந்து சாப்பிடுவதால் உணவு எளிதில் ஜீரணமாகிறது.

இஞ்சிசாற்றை பாலில் கலந்து சாப்பிட வயிறு நோய்கள் தீரும், உடம்பு இளைக்கும். இஞ்சியை துவையல், பச்சடி செய்து சாப்பிட மலச்சிக்கல், களைப்பு, மார்பு வலி குணமாகும். சுட்டு உடம்பில் தோய்த்து சாப்பிட்டால் பித்த, கப நோய்கள் ஏற்படாது. இஞ்சி சாறில், வெல்லம் கலந்து சாப்பிட வாதக் கோளாறுகள் நீங்கும்.

இஞ்சியை புதினாவோடு சேர்த்து துவையலாக்கி சாப்பிட பித்தம், அஜீரணம், வாய்நாற்றம குறைவதோடு, துவையலாக்கி சாப்பிட வயிற்று இரைச்சல் குணமாகும். காலையில் இஞ்சி சாறில், உப்பு கலந்து மூன்று நாட்கள் தொடர்ந்து சாப்பிட பித்த தலைச்சுற்று, மலச்சிக்கல் குணமாகும்.

பத்துகிராம் இஞ்சி, பூண்டு இரண்டையும் அரைத்து, ஒருகோப்பை வெந்நீரில் கலந்து காலை, மாலை இரண்டு நாட்கள் சாப்பிட மார்பு வலி குணமாகும்.

இஞ்சி சாறோடு, தேன் கலந்து சூடாக்கி காலையில் வெறும் வயிற்றில் ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டு வெந்நீர் குடித்துவர நோய் தடுப்பு திறன் அதிகரிப்பதோடு, தொந்திகுறைவடையும், நல்ல பசி ஏற்படும்.

இஞ்சி சாறுடன், வெங்காய சாறு கலந்து ஒரு வாரம், காலையில் ஒரு கரண்டி வீதம் குடித்துவர நீரிழிவு குறைவடையும்.

இஞ்சிக்கு ஞாபக சக்தியை அதிகரிக்கும் குணம் அதிகமுண்டு. மேலும் இது குடலில் சேரும் கிருமிகளை அழிக்கும் தன்மை கொண்டது. மேலும் இது கல்லீரலை சுத்தப் படுத்துகிறது. இவ்வளவு மருத்துவ குணம் கொண்ட இஞ்சியை எமது விட்டு வைத்தியர் எனவும் கூறலாம். இஞ்சியை தினமும் உணவில் சேர்த்து கொண்டால் உடல் உபாதைகளும் வராது, ஆரோக்கியமாகவும் வாழலாம்.



# வேலைக்கு செல்லும் பெண்களுக்கு அவசியம்

பொதுவாக பெண்களுக்கு இயற்கையாகவே மாதவிலக்கு சுழற்சியின் காரணமாக பலவகையான சத்துக்குறைபாடுகள் உண்டாகிறது. இத்தகைய சத்துக்குறைபாட்டால் உடல் பலவீனமடைந்து பாதிப்படைகிறது. இதனால் பெண்களுக்கு கூடுதல் ஊட்டசத்து தேவைப்படுகிறது.

நம்வீட்டில் உள்ள பெரியவர்கள் பெண்களுக்கு பருவம் எய்தியவுடன் வீட்டில் இருக்க வைத்து உடலுக்கு வலு கொடுக்கும் உணவுகளைக் கொடுத்து, மாதவிலக்கு காலங்களில் போதிய ஓய்வும் கொடுத்து வந்தனர். ஆனால், இன்றைய சூழலில் பணிக்குச் செல்லும் பெண்களுக்கு ஓய்வு என்பது கிடையாது. மேலும் உணவு தயாரித்து அதை சாப்பிடக்கூட நேரமில்லாமல் அவசர அவசரமாக கிளம்பி பயணத்தின் போதே சாப்பிடுகின்றனர் அல்லது பட்டினி கிடக்கின்றனர்.

மேலும் மாதவிலக்கு காலங்களில் 3 அல்லது 5 நாட்கள் தனியாக அமர வைத்து, எந்த வேலையும் செய்யவிடாமல், ஓய்வு கொடுத்தனர். அதை நாம் தவறாக புரிந்து கொண்டுள்ளோம். அந்த காலங்களில் போதிய ஓய்வு தேவை என்பதாலேதான் அவ்வாறு செய்தனர் என்பதனை உணரவேண்டும்.

போதிய சத்து குறைப்பாட்டால் குடலில் புண், பித்தம், அஜீரணம், தலைவலி, கை, கால்வலி, இடுப்பு, முதுகுவலி போன்றவற்றை ஏற்படுத்துகிறது. மேலும் உடல் அசைவில்லாமல் கணனி முன் அதிக நேரம் அமர்ந்திருந்து வேலை பார்ப்பவர்கள் இரவுப் பணி, குறைவான தூக்கம், மன அழுத்தம் இவைகளாலும் பெண்களின் உடல் பாதிப்படைகிறது. இத்தகைய பாதிப்புகள் பின்னாளில் பெரிய நோய்களாக மாறிவிடும்.

இத்தகைய உடல் பிரச்சனைகளில் இருந்து விடுபட இவர்களுக்கு ஊட்டச்சத்து மிகுந்த உணவு எடுத்து கொள்வது அவசியமாகும். அதற்காக ஊட்டச்சத்து மாத்திரைகளை வாங்கி உண்பது நல்லதல்ல. அவை உடலுக்குத் தீங்கிழைக்கக் கூடியவையாக உள்ளது. நம்முடைய அன்றாட உணவில் கீரைகள், காய்கள் அதிகம் சேர்த்துக்கொள்ள வேண்டும். பலபேர்களின் பிரச்சனைகளில் ஒன்று சிறுநீரை அடக்குவது அல்லது சிறுநீர் கழிவதைத் தடுக்க தண்ணீர் அருந்தாமல் இருப்பது போன்றவற்றை தவிர்த்து நன்கு நீர் அருந்த வேண்டும். முளை கட்டிய பயறு வகைகளை உணவில் சேர்த்துக் கொள்ளலாம்.

# வயிற்றினுள் உள்ள குழந்தைகள் பக்குவம்



கருப்பையில் இருக்கும் போதே குழந்தை இறந்துவிடலாம். ஒரு குழந்தை உருவாகி 28 வாரங்களுக்கு பின்பு கருப்பையிலே இறந்து விட்டால் அது இன்ர யுரென் டெத் (intra uterine death) எனப் படுகிறது. அதாவது 28 வாரங்கள் (7 மாதம் ) ஆன குழந்தைகள் இறந்தால் அது குழந்தையின் இறப்பு எனப்படுகிறது. அதற்கு முந்தி இறந்தால் அது கருக்கலைவு எனப்படுகிறது.

**என்ன காரணத்தினால் இந்தக் குழந்தைகள் இறக்கலாம்?**

உள்ளே இருக்கும் குழந்தைக்கு தேவையான அத்தியாவசிய பதார்த்தங்கள் அனைத்தும் தொப்புள் கொடியின் ஊடாகவே குழந்தைக்கு கிடைக்கிறது. சிலவேளை இந்த தொப்புள் கொடி குழந்தையின் கழுத்தைச் சுற்றிக் கொள்வதால் அதனூடாக ரத்த ஓட்டம் நடைபெறாமல் குழந்தை இறக்கலாம்.

இந்த தொப்புள் கொடி சூழ் வித்தகம் மூலமே தாயில் இருந்து ரத்தத்தைப் பெற்றுக் கொள்ளும். இந்த சூல்வித்தகம் கருப்பையில் ஒட்டிக் கொண்டு தாயில் இருந்து குழந்தைக்குத் தேவையானவற்றை பெற்றுக் கொடுக்கும். இந்த சூழ் வித்தகம் குழந்தை பிறந்த பின்பே கருப்பையில் இருந்து பிரியும். சில வேளை இது குழந்தை பெற முன்பே பிரிந்து விட்டால் குழந்தை இறந்து விடலாம்.

போதிய வளர்ச்சியில்லாத குழந்தைகள் கருப்பையின் உள்ளேயே இறந்து விடலாம்.

குழந்தையின் உடலிலே பிறப்புக் குறைபாடுகள் ஏதாவது இருப்பதால் குழந்தை இறக்கலாம்.

இப்படி பல காரணங்கள் இருந்தாலும் எந்தக் காரணமும் இல்லாமலும் குழந்தை சடுதியாக கருப்பையின் உள்ளேயே இறந்து விடலாம்.

**எப்படியான தாய்மாரின் குழந்தை இப்படி இறப்பதற்கான சந்தர்ப்பம் அதிகம்?**

35வயதிற்கு மேற்பட்ட தாய்மார். நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட தாய்மார். உயர் குருதிய முக்கத்தால் பாதிக்கப்பட்ட தாய்மார் போசாக்கு இன்மையால் பாதிக்கப்பட்ட தாய்மார். மது மற்றும் புகைப் பிடிக்கும் தாய்மார் இப்படி பல காரணங்கள் இருந்தாலும் எந்தப் பிரச்சினையும் இல்லாத தாய்மாரின் குழந்தைகளும் சடுதியாக இறந்து விடலாம்.

**இதைத் தடுப்பதற்கான வழிகள்?**

முற்று முழுவதாக இதைத் தடுக்க முடியாவிட்டாலும் மேலே நான் சொன்ன பிரச்சினைகள் உள்ள தாய் மார்கள் தொடர்ச்சியாக வைத்தியரைச் சந்தித்து தங்கள் குழந்தையின் வளர்ச்சி மற்றும் மற்றைய விஷயங்கள் சரியாக இருக்கிறதா என்பதை அவதானிக்க வேண்டும்.

மேலும் நீரழிவு நோயினால் மற்றும் உயர் குருதிய முக்கத்தால் பாதிக்கப்பட்ட தாய்மாரின் குழந்தைகள் கொடுக்கப்பட்ட தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னே பிறக்க வைப்பது உகந்தது. ஏனென்றால் இந்தக் காலத்திற்குப் பிறகு இந்தத் தாய்மார்களில் குழந்தைகள் சடுதியாக இறப்பதற்கான சந்தர்ப்பம் அதிகம்.

கருப்பையினுள்ளே போதிய வளர்ச்சி அடையாத குழந்தைகளை கூட குறிப்பிட்ட காலத்திற்கு முன்னமே பிறக்க செய்ய வேண்டி ஏற்படலாம்.



# முருங்கைக்கீரை வாழைத்தண்டு பொரியல்

**தேவையான பொருட்கள்:** முருங்கைக்கீரை 1 கப், வாழைத்தண்டு சிறிய துண்டு, வெங்காயம் 1, தேங்காய் துருவல் 2ஸ்பூன், பச்சை மிளகாய் 1, சிகப்பு மிளகாய் 1, கடுகு, உளுத்தம் பருப்பு தாளிக்கஎண்ணெய் 2 ஸ்பூன், உப்பு தேவைக்கு

**செய்முறை**

முருங்கைக்கீரையை நன்றாக கழுவி சுத்தம் செய்து கொள்ளவும். ப.மிளகாய், வெங்காயத்தை பொடியாக நறுக்கி கொள்ளவும்.

வாழைத்தண்டை நாரை எடுத்து விட்டு மெல்லிய துண்டுகளாக நீளவாக்கில் வெட்டி மோரில் போட்டு வைக்கவும். இவ்வாறு மோர் கலந்த நீரில் வாழைத்தண்டு துண்டுகளை போட்டு வைப்பதால் நிறம் மாறாமல் இருக்கும்.வாணலியை அடுப்பின் எண்ணெய் ஊற்றி சூடானதும் கடுகு, உளுத்தம் பருப்பு, காய்ந்த மிளகாய், ப.மிளகாய் போட்டு தாளித்த பின் வெங்காயத்தை போட்டு வதக்கவும். இப்போது வாழைத்தண்டு சேர்த்து ஒரு முறை கிளறி விடவும். வாழைத்தண்டு சற்று வெந்ததும் முருங்கைக்கீரை மற்றும் உப்பு சேர்த்து நன்கு கிளறி மூடி வேகும் வரை மூடி வைக்கவும். இரண்டும் வெந்ததும் தேங்காய் துருவல் சேர்த்து கிளறவும்.

சுவையும் சத்தும் நிறைந்த முருங்கைக்கீரை வாழைத் தண்டு பொரியல் தயார். சாம்பார் மற்றும் ரசம் சாதத்துடன் தொட்டுக் கொள்ள அருமையாக இருக்கும்.

# பெண்கள் விடயத்தில் ஆண்கள் இப்படியிருந்தால் என்ன



வீட்டு வேலை தவிர தங்களால் நிறைய விஷயங்கள் முடியும் என்று பெண்கள் நிரூபித்து நீண்ட நாட்களாகி விட்டன. எனவே மனைவியை அவரது திறமைக்காக மதியுங்கள். புதிய விஷயங்களைச் சாதிப்பதற்கு ஊக்குவியுங்கள்.

இன்றைய பெண்கள் இலக்கு சார்ந்தவர்களாக உள்ளனர். அவர்களுக்கு ஓர் இலட்சியம் இருக்கிறது ஒரு கனவு இருக்கிறது. உங்களுக்காக அவர்கள் தங்கள் கனவுகளை விட்டுவிட வேண்டும் என்று கட்டாயப்படுத்தாதீர்கள்.

மனைவியை சமாதானப்படுத்துவதற்கான பழைய விதிகள் எல்லாம் காலாவதியாகிவிட்டன. புதிய யோசனைகளில், சோதனை முயற்சிகளில் ஈடுபடத் தயங்காதீர்கள். மனைவிக்குத் திடீர் ஆச்சரியம் கொடுக்கும் வழக்கத்தைக் கைவிடாதீர்கள்.

ஆண்கள் அழ மாட்டார்கள்' என்பது சரிதான். உணர்வுகளை வெளிபடுத்தும் உணர்வுபூர்வமான ஆண்களையே பெண்கள் விரும்புகிறார்கள் என்பதே உண்மை. ஆனால் எதற்கெடுத்தாலும் கண்ணைக் கசக்காதீர்கள். அழுமூஞ்சி ஆண்களை பெண்களுக்கு பிடிக்கவே பிடிக்காது.

நீங்கள் ஒரு முடிவெடுக்கும்போது உங்கள் மனைவியின் ஆலோசனையையும் கேளுங்கள். அது பணத்தை பற்றியதாக இருக்கலாம், வேலை, தொழிலை பற்றியதாக இருக்கலாம். மனைவியின் கருத்தைக் கேளுங்கள், அதற்கு மதிப்புக் கொடுங்கள்.

நேசத்தில் மட்டுமல்ல, சமையலிலும் கெட்டிக்காரராக இருக்கும் கணவரை மனைவிக்கு பிடிக்கும். அப்படிப்பட்ட கணவர் தான் அவர்களை பொறுத்தவரை முழுமையானவர்.

பேசுவது பெண்களுக்கு பிடிக்கும் என்று தெரியும். மனைவியுடன் வழக்கமான விஷயங்களை மட்டுமல்லாமல், அரசியல், பொருளாதாரம், இலக்கியம் என்று பல விஷயங்களை பற்றியும் பேசுங்கள். உங்களின் எதிர்காலத் திட்டங்கள், கனவுகள், பயங்கள் என்று எல்லாவற்றை பற்றியுமே பகிர்ந்துகொள்ளுங்கள்.

வீட்டுக்கு வருகிற மனைவி உங்கள் குடும்பத்தோடு ஒன்றிபோய்விட வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள். அப்படி நீங்களும் ஒரு அன்பான மருமகனாக மனைவியின் வீட்டில் அக்கறை காட்டுவது அவசியம்.

அழகு, பெண்கள் மட்டும் சம்பந்தபட்ட விஷயம் என்று யார் சொன்னது? வெளியிடங்களுக்கு போகும்போது உங்கள் மனைவியை வியப்பாக நான்கு பேர் பார்க்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள். அப்படி அவரும் எதிர்பார்ப்பது நியாயம்தானே?

எல்லாவற்றிலும் புதுமையாக இருக்க வேண்டும் என்பதில்லை. அவ்வபோது, நீதான் எனக்குக் கிடைத்த மாபெரும் பொக்கிஷம்' என்று டயலாக் பேசுவதில் தவறில்லை.



# ஏன் தோற்றது அம்பகாம சண்டை?

பீஷ்மர்

கட்டுப்பாட்டு மையத்திலிருந்த சாள்ஸ் அன்ரனி தூய தமிழில் கட்டளைகளை வழங்கிக் கொண்டிருந்தார். களநிலவரம் இறுகிக் கொண்டு சென்று கொண்டிருந்தது. இது களமுனை தளபதிகளிற்குள் மாத்திரமல்ல, தொலைத்தொடர்பு கட்டளைகளை கேட்டுக் கொண்டும், நிலவரங்களை அவதானித்துக் கொண்டுமிருந்த பிரபாகரனிற்கும் எரிச்சலை கொடுத்தது.

எப்படியும் இந்த தாக்குதலில் வெற்றிபெற வேண்டுமென அவர் விரும்பினார். ஏனெனில், 2006 இன் பின்னர் புலிகளால் குறிப்பிடத்தக்க வலிந்த தாக்குதல் எதனையும் செய்ய முடியவில்லை. சம்பூரில், முகமாலையில் செய்தவை வெற்றியளிக்கவில்லை. அதன் பின்னர் வன்னியில் குறிப்பிடத்தக்கதாக எதையும் செய்யவில்லை.

அதற்கு காரணம், இராணுவத்தின் இடைவிடாத நகர்வு. புலிகள் ஆசுவாசப்பட, சுதாகரிக்க, ஒன்றுதிரள அவகாசம் கொடுப்பதில்லையென்பதில் இராணுவம் குறியாக இருந்தது. இதுதான் நான்காம் ஈழ யுத்தத்தில் இராணுவத்தின் அடிப்படையான போருத்தி.

வன்னியை நாலா பக்கத்திலும் வளைத்து அவகாசமே இல்லாமல் போரிட்டு புலிகளை களைப்படைய செய்தது. இதனை புலிகளால் எதிர்கொள்ள முடியவில்லை. நிலப்பரப்பு பெரியதாக இருந்தபோது அணிகளை ஒருங்கிணைத்து தாக்குதல் நடத்த அவர்களால் முடியவில்லை. வன்னியின் பெரும்பகுதியை கைப்பற்றி, புலிகளை விசுவமடு தொடக்கம் முள்ளிவாய்க்கால் வரை நெருக்கிய பின்னர்




புலிகள் மேற்கொண்ட வலிந்த தாக்குதல் இது. இதில் வெற்றியடைய வேண்டுமென புலிகள் விரும்பினார்கள். ஏனெனில் வாழ்வா சாவா நிலையை அப்பொழுதே உணரத் தொடங்கிவிட்டார்கள்.

விடுதலைப்புலிகளுடனான அதுவரையான போரியல் அனுபவங்களை திரட்டி, நான்காம் ஈழப்போரில் இராணுவம் புதிய போருத்திகளை பயன்படுத்த ஆரம்பித்திருந்தது. புலிகள் வலிந்த தாக்குதல் நடத்தினால் தற்காலிகமாக அரண்களை பின்நகர்த்துவது, புலிகளை உள்ளே வரவிட்டு பெட்டி (ஙிளிஙீ) அடிப்பது போன்ற பல உத்திகளை கையாண்டு கொண்டிருந்தனர். ஜெயசிக்குறுவில் முன்னேறி வந்த படையினரை ஓயாத அலைகள் மூன்றில் ஒரேயடியாக விரட்டியதை போன்ற ஒரு சந்தர்ப்பத்திற்காக புலிகள் காத்திருந்தனர். ஆனால், இனி அப்படியான சந்தர்ப்பத்தை கொடுத்துவிடக்கூடாதென்பதில் இராணுவம் குறியாக இருந்தது.

ஜெயசிக்குறு காலத்தில் விட்ட தவறு கைப்பற்றிய பிரதேசத்தை வெறும் கோதாக முறையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யாமல் முன்னரணை மாத்திரம் பலப்படுத்தி வைத்திருந்தது. முன்னரணை தகர்த்தால் சரி. உள்ளே ஓட்டை. அதுதவிர, ஆயுதக்களஞ்சியங்களையும் முன்னரணிற்கு நெருக்கமான பேணினார்கள். களஞ்சியத்தை அழிக்க அல்லது கைப்பற்றவும் புலிகளிற்கு வாய்ப்பாக இருந்தது. நான்காம் கட்ட போரில் இவற்றையெல்லாம் இராணுவம் மாற்றியது.

அம்பகாமத்தில் புலிகள் தாக்கத் தொடங்கிய போது இராணுவம் மூர்க்கமாக எதிர்த்து போரிடவில்லை. சிலபகுதி முன்னரண்களிலிருந்து அணிகளை பின்னகர்த்தியது. நான்காம்ஈழப்போரில் புலிகள் இராணுவத்தை அதிகம் பின்னகர்த்திய தாக்குதல்களில் இதுவும் ஒன்று. ஆனால் இதில் இராணுவம் பின்னகர்ந்ததும் ஒரு தந்திரோபாய நகர்வே.

அது மழைக்காலம். நினைத்ததைபோல புலிகளால் தாக்குதல் நடத்த முடியவில்லை. ஆட்லறிகளை நினைத்த வேகத்தில் நகர்த்த முடியவில்லை. காட்டிற்குள் உருவாக்கப்பட்ட பாதையில் சப்ளை வாகனங்கள் ஆங்காங்கு புதையத் தொடங்கிவிட்டன. காலநிலையும் புலிகளிற்கு எதிராக நின்றது.

வன்னிக்கான ஆயுத மார்க்கங்கள் முடங்கியதன் பின்னர் விடுதலைப்புலிகளின் எறிகணை இருப்பு பெருமளவு தீர்ந்து போய்விட்டது. ஓயாத அலைகள் ஒன்றில் முல்லைத்தீவு கைப்பற்றிய தாக்குதலிலிருந்து பின்னால் நடந்த எல்லா தாக்குதல்களிலும் புலிகளின் வெற்றிக்கான காரணங்களில் ஒன்று எறிகணை. தாராளம் மற்றும் துல்லியம் தான் புலிகளின் ஆட்லறி பிரிவின் வெற்றி இரகசியம். துல்லியமாகவும் தாராளமாகவும் எறிகணைகளை ஏவினால் எதிரிகள் நிலைகுலைந்து போய்விடுவார்கள். ஆனால் கடல் மார்க்க ஆயுத விநியோகம் தடுக்கப்பட்டதன் பின் துல்லியம் மட்டுமிருந்ததே தவிர தாராளம் இல்லாமல் போனது. கையிருப்பிலிருந்த எறிகணைகளை மருந்து பாவிப்பதை போலத்தான் பாவிக்க வேண்டியிருந்தது.

அம்பகாமத்தில் தாக்குதல் மேற்கொண்ட போது தாராள எறிகணை பாவனை புலிகளிடம் இருக்கவில்லை. அதுதவிர்ந்த நேரடி சமரில் சூட்டுவலுவில் இராணுவம் தான் மேலோங்கியிருந்தது. அது நான்காம் கட்ட ஈழப்போரில் சந்தேகத்திற்கிடமின்றி நிருபணமான ஒன்று. ஆகவே, அம்பகாம தாக்குதலை இராணுவம் சுலபமாக கையாண்டது. ஆரம்பத்தில் சில பகுதி அணிகளை பின்நகர்த்தி, இன்னொரு பகுதியில் விடுதலைப்புலிகளின் அணியொன்றை முற்றுகையிட்டு விட்டது.

தாக்குதல் திட்டம் வெற்றியளிக்கவில்லை. முற்றுகைக்குள்ளிருந்த அணியை மீட்டு தாக்குதலை கைவிட புலிகள் முடிவு செய்தார்கள். சாள்ஸ் அன்ரனி கட்டளை மையத்தில் உட்கார்ந்திருந்து தூய தமிழில் கட்டளைகளை வழங்கினார். அது தமிழிற்கு நல்லதே தவிர களத்திற்கு நல்லதல்ல.

இவற்றை அவதானித்துக் கொண்டிருந்த பிரபாகரன் உடனடியாக கட்டளை மையத்தில் மாற்றம் செய்ய பணித்தார். பானு கட்டளை மையத்திற்கு மாற்றப்பட்டார். பானுதான் குட்டிசிறி மோட்டார் அணியை உருவாக்கி களங்களில் வெற்றிகரமாக கையாண்டவர். களத்திற்கு பின்னால் உள்ள மோட்டார்நிலைகளில் இருந்து துல்லியமாக எறிகணை ஏவுவதற்கு மோட்டார்காரர்கள் மட்டுமல்லாமல்; வரைபடம் தயாரிப்பவர்கள், களத்தில் நின்று இலக்கு குறிப்பவர்கள் என பலதுறைப்பட்டவர்களின் கூட்டு முயற்சி மற்றும் தொழில்நுட்ப விடயம் அது. அதனை பானு சிறப்பாக உருவாக்கியிருந்தார். மூன்றாம் கட்ட ஈழப்போரில் பெரும்பாலும் அவர் மோட்டார் அணிகளைத்தான் வழிநடத்தினார். அதனால் சாள்ஸ் அன்ரனியை கட்டளையிடும் கதிரையிலிருந்து எழுப்பிவிட்டு பானு அமர்ந்தார்.

களத்தை வழிநடத்துவதில் ஜெயம் போன்றவர்கள் பங்காற்றினார்கள். இறக்கும்வரை சாள்ஸ் அன்ரனியிடம் களத்தை வழிநடத்த முடியாத பலவீனம் இருந்தது. பின்னாளில் நடந்த கேப்பாப்பிலவு, தேவிபுர சண்டைகளிலும் சாள்ஸ் அன்ரனி நிறைய தடுமாறி, அந்த தாக்குதல்களும் எந்த பலனையும் கொடுக்கவில்லை. ஆனால், அதனை புலிகள் கணக்கில் கொள்ளவில்லை. இறுதிவரை அவர்தான் முடிவெடுப்பவராகவும், களங்களை திட்டமிடுபவராகவும் இருந்தார். சடுதியான தோல்விகளிற்கு இதுவும் காரணம்.

போரிடும் திறன் குறைந்த புதிய போராளிகள், போதிய ஆயுததளபாடங்கள் இன்மை, முறையான திட்டமிடல் வழிகாட்டல் இல்லையென எல்லாமும் சேர புலிகளின் வீழ்ச்சி சடுதியானது. அப்படியெடுக்கப்பட்ட சில முடிவுகள் மூத்ததளபதிகள் பலருக்கு பிடிக்காமலும் இருந்தது. ஆனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அதுபோல மூத்த தளபதிகள் வைத்த யோசனைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அப்படிப்பட்ட இரண்டு சம்பவங்களை குறிப்பிட வேண்டும்.

அந்த யோசனையை வைத்த தளபதிகள் பால்ராஜ், தீபன்.

அவர்கள் வைத்த யோசனை என்ன?

(தொடரும்)




வன்னி இராணுவதளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ், மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன (53 டிவிசன்), மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் (57 டிவிசன்)






வன்னியை முற்றுகையிட படையினர் ஆரம்பித்த நகர்வுகளின் விளக்கம்.

# பிள்ளைகளின் எதிர்காலத்தை நெறிப்படுத்தி விடுங்கள்



பி.சியா

பாரந்த தொடர்பு மற்றும் காதல் இரண்டிலும் இருந்து பிள்ளைகள் பாதுகாக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் தற்போதய சூழலில் உள்ளது. 21 வயது இளைஞன் பார்ப்பதற்கு அழகாகவும் சுமாராகவும் இருக்கும் இவனிடம் எப்படி எயிட்ஸ் உள்நுழைந்தது. நல்ல குடும்பம. பழகுவதற்கு நல்ல குணமுடைய பெடியன். அப்படி இருக்கையில் இவனிடம் எப்படி எயிட்ஸ். இது அவனை பற்றி அறிந்தவர்களின் கேள்வி. ஆனால் அவனுக்கும் வைத்தியருக்கும் மட்டுமே உண்மை தெரிந்தது. வாலிப வயதில் பல்வேறு உணர்வுகளுக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. உணர்வுகளுக்கு தீனி போட பல வயதில் மூத்த நண்பர்களை நாடியுள்ளான். அவர்கள் மூலம் யாரோ தெரியாத பெண்ணிடம் அறிமுகமாகினான். அந்த் பெண் மூலம் எச்.ஐ.வி யை வாங்கி யுள்ளான். பரிசோதனையின் பின்னர் இந்த வலையமைப்பு எங்கெல்லாம் பரந்திருக்குமோ என்பது வைத்தியர்களின் கேள்வி. தான் ஏமாற்றப்பட்டு விட்டேன் தப்பு பண்ணி வாழ்க்கையை இழந்து விட்டேன் என்பது அவனின் கண்ணீர்.

இதற்கு காரணம் அவனுடைய குடும்ப சூழல். பெற்றவர்களின் கண்கள் பிள்ளை களை விட்டு விலகுமிடத்தில் இப்படியான வினைகள் சூழ்ந்து விடுகின்றது. இவனின் வளர்ப்பில் இந்த இளைஞன் வழிநடத்தப் படவில்லை. நல்லது கெட்டது ஊட்டப் படவில்லை. வாலிப வயதில் அவன் உணர் வுகள் நெறிப்படுத்தப்படவில்லை. இவை சரியாக பெற்றோரால் கொடுக்கப்பட்டிருந் தால் இந்த இளைஞன் தன்னைதானே பாதுகாக்கும் புத்தியை தீட்டியிருப்பான்.

சூழலில் பாதுகாப்பு உள்ளது பாதுகாப்பு இல்லாமலும் உள்ளது. சந்தர்ப்பத்தில் எம்மை பாதுகாத்து கொள்வது எப்படி? எங்களுடைய உணர்வுகளை தூண்டுபவர்களிடம் எப்படி தந்திரமாக விலகவேண்டும். எங்களுடைய எதிர்காலத்தை சரியாக வடிவமைக்க நாம் சரியாக வளர வேண்டும் என்று அதற்கான வழிமுறைகளையும் நடைமுறையையும் பிள்ளைக்கு சொல்லி கொடுத்தால் நீங்கள் இல்லாமலே உங்கள் பிள்ளை தன்னை பாதுகாத்து கொள்ளும்.

இதற்கொரு சிறந்த சம்பவமுள்ளது. ஒரு 8 வயது பாடசாலை மாணவி பாடசாலை பஸ்ஸில் வீட்டிற்கு வரும் பொழுது. பஸ் சாரதி எல்லா பிள்ளைகளையும் இறக்கி விட்டு இவளை கடைசியாக வீட்டிற்கு கொண்டு வந்துள்ளார். அப்பொழுது பிள்ளை சாரதிக்கு பின் சீற்றில் உட்காந்திருந்தாள். சாரதி பஸ்சை ஓட்டி கொண்டே பிள்ளையின் தொடையில் கை போட்டுள்ளார். பிள்ளை உடனே இது எனக்குபிடித்திருக்கு பஸ்சை நிப்பாட்டுங்கோ முன்னாடி வந்திருக்கிறேன் என்று சொல்ல சாரதியும் பஸ்ஸை நிப்பாட்டியுள்ளார். பிள்ளை அவருக்கு கதை சொன்ன படியே இறங்கி ஓடிவிட்டது. அதன் பின்னர் பிள்ளை வீட்டில் முறைப்பாடு செய்து தன்னை பாத்து கொண்டது. இது அண்மையில் நடந்த உண்மை சம்பவம். இவ்வாறு பிள்ளைகள் புத்திசாலித்தனமாக சின்ன வயதில் இருந்தே சரி பிழைகள் சொல்லி கொடுக்கப்பட்டு வளர்க்கப்பட வேண்டும்.

ஆண் பெண் எவராயினும் சிறு வயதில் பாதுகாப்பும் அறிவும் பலமாக கொடுக்கப்படாத பொழுது அவர்கள் பலரின் கைகளில் பொம்மைகளாகின்றனர். இதில் இருந்து உங்கள் பிள்ளைகளை மீட்டு அவர்களை சரியாக வழிநடத்தும் பொருட்டு உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் சிறப்பானதாக அமையும்.

உங்களுக்காக மட்டுமின்றி பெற்றோருக்கு நாட்டிற்கு குடும்பத்திற்கு நீங்கள் அவசியமான பிரஜை. அதற்கான பொறுப்பினை சரிவர செய்ய வேண்டும். உங்களுடைய கடமை வெறுமன பரீட்சையில் சித்தியடைவது இல்லை. அதையும் தாண்டி வாழ்க்கையில் சவால்களுக்கு முகம் கொடுக்கும் திறமையும் உங்கள் பிள்ளைகளிடம் கற்பிக்கப்பட வேண்டும் என சொல்லி கொடுத்தல் வேண்டும்.

பிள்ளைகளிடம் தங்களை தாமே உணர்ந்து கொள்ள கற்று கொடுக்க வேண்டும். நீங்கள் யார்? உங்களுக்கே உரித்தான குணாதிசயங்கள் என்ன? உங்களை திறமைகளை கண்டறிந்து விருத்தி செய்யும் பொழுது யாரும் உங்கள் அருகில் கேலி செய்யவோ நெருங்கவோ வர மாட்டார்கள். உங்கள் அழகு உங்கள் திறமையை பொறுத்தது. உங்களை யாருடனும் ஒப்பிடாதீர்கள். இவை பிள்ளைகள் தங்களை தாங்களே அறியபடுகட்டப்பட வேண்டியவை.

இதையெல்லாம் மீறி தமது பிரச்சினை களுக்கு அவர்களே தீர்வுகாண கற்று கொடுங்கள். உடலில் ஏற்படும் மாற்றங்கள் போன்றே வாலிப வயதில் உளவியல் ரீதியான மாற்றங்களும் ஒன்றாகவே ஏற்படுகின்றன. இது உங்கள் நண்பர்களுக்கும் ஏற்பட்டிருக்ககூடும். அதை அறிந்து கொள்ளுங்கள். இவை இயல்பானது இவற்றை இயல்பாக கடந்தே வாழ வேண்டும்.

சிந்தனைகளையும் நேரத்தையும் கல்வி, கலை, விளையாட்டில் செலுத்தும் பொழுது உங்கள் பிரச்சினையில் இருந்து பெரும்பாலும் வெளிவருவது இயல்பு என்பதை பிள்ளைகளிடம் உறுதிப்படுத்தி கொள்ளுங்கள். அடிப்படையில் நன்மை தீமைகளை ஆராய்ந்து பார்த்து சரியான தீர்மானங்களை எடுக்க வழிகோல வேண்டும் என்பதை எடுத்துரையுங்கள். இவ்வாறு வளர்க்கப்படும் ஒவ்வொரு பிள்ளையும் நல்லவனாக அல்லது நல்லவளாக மட்டு மின்றி வல்லவளாகவும் எதிர்காலத்தில் ஜொலிப்பான் என்பதில் ஐயமில்லை. ●

## வைத்தியர் தாரணி

சின்ன வவயதில் இருந்தே குழந்தைகளுக்கு ஆடை போடாமல் நிற்க்க கூடாது என்பதை சொல்லி கொடுக்க வேண்டும். பிறந்ததில் இருந்தே குழந்தையை ஆடையோடு படுக்க வைத்து பழக்க வேண்டும். ஆடை இல்லாமல் நிற்பது வெட்கம் என்று கூச்ச சுபாவத்தை உண்டு பண்ண வேண்டும். இதனை எமது சமூகதத்தில் பண்பாட்டின் ஊடாகவே பிள்ளைகளுக்கு தெளிவு படுத்த முடியும். காட்சட்டை சட்டை போடாத ஆண் குழந்தையாயினும் பெண் குழந்தை ஆயினும் இன்னொருவரால் தெரிந்தோ தெரியாமலோ சீண்டப்படும் பொழுது அதன் உணர்வுகள் மாறி விடுகின்றன. வேட்க உணர்வு இல்லாமல் பழக்கப்பட்டு விடுகின்றது. அதன் பின்னர் வளரும் பருவத்திலும் அந்த குழந்தை கூச்சம் அற்றதாக வளர்கின்ற பொழுது அந்த பிள்ளை மிக இலகுவாக உடல் உள ரீதியாக பாதிக்கப்படுகின்றது. குழந்தைகள் மூன்று வயதை தாண்டியதும்; சமூகத்தில் அவர்கள் எப்படி வாழ வேண்டும் என்பதை கற்று கொடுக்க வேண்டும்.

உங்களுடைய உடலின் அங்கங்களில் உங்கள் அனுமதி இன்றி யாரும் கை வைக்க முடியாது என்பதை சொல்லி கொடுக்க வேண்டும். அப்படி யாராவது உங்கள் உடலை தீண்டினால் நீங்கள் பெற்றோர், பாடசாலை ஆசிரியரிடம் முறையிட வேண்டும் என்பதை உறுதியாக கூற வேண்டும். கட்டிளம் பருவத்தில் அவர்களின் உடலில் ஏற்படவிருக்கும் மாற்றங்கள் என்ன? அந்த உணர்வுகளை எப்படி கடக்க வேண்டும் என்பதை சொல்லி கொடுக்க வேண்டும்.

நண்பர்கள் மத்தியிலான ஆண் பெண் உறவு எப்படி இருக்க வேண்டும். சமூகத்தில் பெண் பிள்ளைகள் கட்டிளம் பருவத்தில் எப்படி இருக்க வேண்டும் என்பதை தவறுகளை திருத்தும்படி சொல்லாமல் தவறுகளால் வரும் விளைவுகளை எடுத்துரைக்க வேண்டும். பிள்ளைகளின் நிழல் போல் பெற்றோர் இருக்க வேண்டும். குறைந்தது 20 வயதை பிள்ளை கடக்கும் வரைக்கும் அவர்களுக்கான முழு பொறுப்பையும் பெற்றோர் சுமந்து நிற்க வேண்டும். அது 23 வயது வரைக்கும் நீடித்தால் கூட தவறில்லை. பிள்ளைகளின் கைகளில் தொழில்நுட்பத்தை (தொலைபேசி, பேஸ்புக், ஸ்கைப் ) கொடுக்க வேண்டும். ஆனால் அதனை கொடுப்பதோடு நின்றுவிடாமல் அவற்றை அவர்கள் எப்படி பயன்படுத்துவது, பாதுகாப்பானது என்பதை சொல்லி கொடுக்க வேண்டும். அவர்களின் செயற்பாட்டை தொடர்ந்து வழி நடத்த வேண்டும். இவ்வாறு 22 வயதை பிள்ளைகள் கடந்துவிட்டால் அவர்கள் செய்வதில் சரி பிழையை பிரித்து இனங்காணும் பக்குவம் பெற்று விடுவார்கள். அதன் பின்னர் பெற்றவர்களை விட அதிகமாக தங்கள் வாழ்க்கையின் பாதுகாப்பை அவர்களே உறுதிப்படுத்தி கொள்வார்கள்.

பாலியல் நோய்கள் சில் உடலுறவில் மட்டுமின்றி உங்கள் அங்கங்களை இன்னொருவர் சீண்டும் பொழுதே ஏற்பட்டு விடும். இப்படியான நோய்கள் 10 வருடத்திற்கு அறிகுறிகள் ஏதும் இல்லாமலே உங்களோடு இருக்கும். அவை குணப்படுத்துவது கடினம். அடிக்கடி காய்ச்சல், உடல்நிலை இயலாமல் போகுதல் போன்ற அறிகுறிகள் மூலமே நோயை அறிய முடியும்.





▶ கிழக்கு மாகாணத்திலுள்ள 10 பேருக்கான மருந்தாளர் நியமனம் வழங்கும் நிகழ்வு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம்.நஸீர் தலைமையில் நடைபெற்றது. கிழக்கு மாகாணத்தில் 77 வெற்றிடங்கள் காணப்படுகின்ற போதிலும் 19 பேருக்கான நியமனத்தினை வழங்குவதாகவும் மற்றைய 58 வெற்றிடங்களை ஜனவரி மாதத்திற்குள் நிரப்ப உள்ளதாகவும் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் இதன் போது தெரிவித்தார்.

## பொன்மொழிகள்

பலவீனர்கள் பிறரை மன்னிக்கமாட்டார்கள். மன்னிப்பது என்பது வலிமையுடையோரின் குணம். - மகாத்மா காந்தி.

வாழ்க்கையில் நீங்கள் அதிகம் பெற விரும்பினால் முதலில் நீங்கள் அதிகமாக்க் கொடுங்கள். - ஸ்டோன்.

குற்றவாளி சட்டத்திற்கு அஞ்சுகிறான். நல்ல மனிதன் தன் மனசாட்சிக்கு அஞ்சுகிறான். - உய்கோ.

தீயவன் மட்டும் தனியாக இருப்பான். - திதெரோ.

கட்டுப்பாடும் கவனமும் இன்றி செய்யத் தகாதவற்றைச் செய்பவனும் செய்யத் தக்கவற்றைச் செய்யாது இருப்பவனும் அதிகக் கேட்டை அடைகிறான். - புத்தர்.

முதியோர்களின் அறிவுரைகள் குளிர் காலச் சூரியனைப்போல் சுடாது ஒளிரும். - அ. எர்மான்.

மற்றவர்களை ஒதுக்கிவிட்டு எவரும் தன்னை 'உயர்த்திப் பேச முடியாது. - கல்லி புருய்தோம்.

சான்றோர்க்கு அளிக்கும் கௌரவம் கடவுளுக்குச் செய்யும் மரியாதையாகும். - நபிகள் நாயகம்.

அன்பு நிறைந்த இன்சொல் இரும்புக் கதவைக்கூடத் திறக்கும். - ஜான் கீட்ஸ்.

ஒரே புத்தகத்தை ரசிக்கும் இருவருக்கிடையே மலரும் நட்புக்கு இணையானது எதுவும் இல்லை. - இர்விங் ஸ்டோன்.

விலை குறைந்தது என்ற ஒரே காரணத்திற்காக வேண்டாத பொருள்களை வாங்காதே. - ஆஸ்கார் ஒயில்ட்.

உயர்ந்த உள்ளங்களின் இரக்க குணமே கருணை. - ஷாம்ஃபோர்.

ஒவ்வொரு நல்ல செயலும் நல்ல எண்ணமும் முகத்தில் ஒரு அழகை ஒளியைக் கொடுக்கிறது. - ரஸ்கின்.

திறமை எனும் தாயும் உழைப்பு எனும் தந்தையும் பெற்றெடுத்த அழகுக் குழந்தையே புகழ். - பாஸ்கல்.

பொறுமையோடு இடைவிடாமல் முயற்சி செய்பவனுக்கே வெற்றி கைகட்டிச் சேவகம் செய்யக் காத்திருக்கிறது. - ஹெக்டர்.

தன் கையே தனக்குதவி என்பவர்களுக்குத்தான் கடவுளும் உதவுகிறார். - ஃபிராங்க்ளின்.

உழைத்துப் போராடாமல் வெற்றியை அடைய முடியாது - தாமஸ்.

தோல்வி என்பது உண்மையை நிலைநாட்ட ஏற்படும் அனுபவம். - பீச்சர்.




# இன்பம் மட்டும் வருமா?

குருவே, வாழ்க்கை மிகவும் சிரமமாயிருக்கிறது. கவலை, கஷ்டம், வருத்தம் இவைதான் நிறைந்திருக்கிறது.' என்றான் அவரைப் பார்க்க வந்த ஒருவன்.

அதைக் கேட்ட குரு 'அப்படியா?' என்றார்.

அவன் 'ஆமாம் குருவே. வாழ்க்கை இன்பமாகவே இருக்க ஏதாவது வழியிருக்கிறதா? எனக்கு அதைப் பற்றிச் சொல்லுங்கள்' என்றான்.

குரு அவனிடம் 'காபி சாப்பிடுகிறாயா?' என்று கேட்டார். வந்தவனும் அதைக் கேட்டுத் தலையசைத்தான். குரு உள்ளே சென்று, ஒரு கிண்ணத்தில் காபித்தூள் கொண்டு வந்தார்.

'இந்தா, சாப்பிடு...' என்று காபித்தூளைக் கொடுத்தார். வந்தவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

'இதைச் சாப்பிட்டுக் கொண்டிரு, பாலைக் கொண்டு வருகிறேன்' என்று உள்ளே சென்று, இன்னொரு கிண்ணத்தில் பாலைக் கொண்டு வந்தார். அதை வாங்கிக் கொண்ட அவன் விழித்தான். பிறகும் உள்ளே சென்ற அவர், இன்னொரு கிண்ணத்தில்



தண்ணீர், சர்க்கரை எல்லாம் கொண்டு வந்தார். 'குருவே, இவற்றை எப்படி தனித்தனியே சாப்பிடுவது?' என்று கேட்டான் அவன்.

உடனே குரு, 'காபியையே உன்னால் எப்படித் தனித்தனியாகச் சாப்பிட முடியாதோ. அப்படித்தான் நம் வாழ்க்கையும், அதிலிருக்கும் இன்பம், துன்பம் என்று ஒவ்வொன்றையும் பிரித்துப் பார்க்க முடியாது' என்றார்.

# கரடிகள் என்ன உண்ணும்



கரடிகள் இலை தழைகள் மற்றும் மாமிசம் போன்றவற்றையும் உண்ணும் அனைத்தும் உண்ணியாகும். பெரும்பாலும் பழங்கள், பழ வித்துக்கள், தண்டுகள், சில குறிப்பிட்ட இலைகள், மரப்பட்டைகள் போன்றவற்றை உண்ணுகின்றன. கரடிகள், மனிதர்களை விடவும் தாவரவியல் அறிவு மிகுந்தவை.

எந்தப் பருவத்தில் எந்த வகைக் காய்கனிகள் எங்கே கிடைக்கும் என்பதைக் கரடிகள் நன்றாக அறிந்திருக்கின்றன. இவை, நாவற்பழத்தை மிகவும் விரும்பி உண்ணும். மரங்களின் உச்சிவரை எளிதில் ஏறும் திறன் கரடிக்கு உண்டு. கரடிகளுக்கு தேனையும் மிகவும் விரும்பி உண்ணும். மலைக் குகைகளிலும், மரங்களின் உச்சிகளிலும் உள்ள தேன் கூடுகளை தேனுக்காக கரடிகள் பெற்றுக்கொள்ளும்.

இது கரையானையும் விரும்பி உணவாகக் கொள்கின்றன. கரடிகள் கரையான் புற்றில் வாய் வைத்து மிகுந்த ஓசையுடன் கரையான்களை அப்படியே உறிஞ்சிவிடும் திறன் கொண்டவையாகும். கரடிகள் சராசரியாக நான்கு அடி உயரமும் நூற்றுப் பதினைந்து கிலோ எடையும் கொண்டவை. தோலுக்காகவும், மருத்துவ குணம் கொண்டதாகக் கருதப்படும். அவற்றின் கணையத்திற்காகவும் அவை வேட்டையாடப்படுகின்றன. கோடை காலத்தில் கரடிகள் இனப்பெருக்கம் செய்கின்றன.

இவற்றின் கர்ப்ப காலம் ஏழு மாதங்கள். ஒரு முறையில் இரண்டு குட்டிகள் பிறக்கும். குட்டிகளுக்கு இரண்டு அல்லது மூன்று வயதாகும் வரை அம்மாக் கரடிகள்தான் முதுகில் தங்கள் குட்டிகளைச் சுமந்து செல்லும்.


# தோற்றம் பிழைத்த விஞ்ஞானி

உலகமே போற்றும் உலக விஞ்ஞானத்தின் தந்தை தாமஸ் ஆல்வா எடிசன் பிறந்த போது சாதாரணக் குழந்தை போல் இல்லாமல் சற்று வித்தியாசமாக இருந்தாராம்.

இவரது தலையின் அமைப்பு உடல் அமைப்பு போன்றவைகள் வேறுபட்ட காரணத்தினால் மருத்துவர்கள் இவரைப் பரிசோதித்துப் பார்த்து விட்டு 'எடிசனின் தலை அமைப்பு இயற்கைக்கு மாறுதலாக இருக்கிறது. எனவே இவர் வளர்ந்த பின்பு மனநிலை பாதிக்கப்பட்டு விடுவார்' என்று தெரிவித்தனர்.

அவரது தாய் எடிசனைப் பள்ளியில் சேர்ப்பதற்காகக் கொண்டு சென்றார். அங்கிருந்த ஆசிரியர் எடிசனின் தோற்றத்தைப் பார்த்து 'மனிதத் தோற்றமே இல்லாமல் மாறுபட்ட உடல் அமைப்பில் இருக்கும் இவனைப் பள்ளியில் சேர்க்க முடியாது' என்று திருப்பி அனுப்பி விட்டார்.

இதற்காக எடிசனின் தாய் வருத்தப்படவில்லை. தனது மகனுக்குக் கல்வி கற்பித்து எப்படியும்



சிறந்தவனாக்கி விடுவது என்று முடிவு செய்தார். அவரே தனது மகனுக்கு இரவும் பகலும் பல பாடங்களைக் கற்றுக் கொடுத்தார். எடிசனும் விடாமுயற்சியுடன் பல பாடங்களைக் கற்றுக் கொண்டார். பின்னர் கடினமான உழைப்பால் பல கண்டுபிடிப்புகளைக் கண்டறிந்தார்.

அவர் 'மனிதன் கடன்பட்டிருப்பது மூளைக்கல்ல. முயற்சிக்கத்தான்!' கடவுள் வரங்களை விற்பனை செய்கிறார். மனித முயற்சிகளே அவற்றின் விலை' என்று பின்னர் குறிப்பிட்டிருக்கிறார்.

## தெரிந்து கொள்வோம்

1 இருண்ட கண்டம் - ஆபிரிக்கா
2 தங்க வாசல் நகரம் - சான்பிரான்சிஸ்கோ
3 இங்கிலாந்தின் தோட்டம் - கென்ட் (இங்கிலாந்து)
4 மரகதத்தீவு - அயர்லாந்து
5 நைல் நதியின் நன்கொடை - எகிப்து
6 முத்துக்களின் தீவு - பஹ்ரைன்
7 இந்தியாவின் தோட்டம் - பெங்களூர்
8 சீனாவின் துயரம் - ஹீவாங்கோ நதி
9 கண்ணீர் வாசல் - பாப் ஏல் மண்டப்
10 ஐந்து நதிகளின் பூமி - பஞ்சாப்
11 பொற்கோவிலின் நகரம் - அமிர்தசரஸ்
12 தெற்கு பிரிட்டன் - நியூசிலாந்து
13 அதிகாலையின் அமைதி பூமி - கொரியா
14 வெள்ளை யானைகளின் நிலம் - தாய்லாந்து
15 புனித பூமி - பாலஸ்தீனம்
16 உதயசூரியனின் பூமி - ஜப்பான்
17 நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு - நோர்வே
18 ஏழு குன்றுகளின் நகரம் - ரோம்.

## விடுகதை விடை.

1. அழுவேன் சிரிப்பேன். நான் யார் தெரியுமா?
2. இவன் வாளுக்கு இவ்வுலகமே நடுங்கும். இவன் யார் தெரியுமா?
3. பல் துலக்காதவனுக்கு உடம்பெல்லாம் பற்கள். இவன் யார்?
4. வெளிச்சத்தில் வரும் இவன் இருட்டாயிருந்தால் காணாமல் போய்விடுவான். இவன் யார்?
5. கண்ணுக்குத் தெரியாது. ஆனால் உயிருக்கு உடைமை இது. யார் இது?
6. வெள்ளை மாளிகைக்குள் மஞ்சள் புதையல். அது என்ன?
7. அள்ள அள்ளக் குறையாது குடிக்க உதவாது. அது என்ன?
8. நாலு கால் உண்டு. ஆனால் வீசத்தான் வாலில்லை. இவன் யார்?
9. மண்ணுக்குள் இருந்திருந்தாலும் மங்களத்துக்கு இது முதலிடம். இது என்ன?
10. முத்து வீட்டுக்குள்ளே தட்டுப் பலகை. அது என்ன?

*விடைகள்:*

*1. முகம் பார்க்கும் கண்ணாடி, 2. தேள், 3. சீப்பு, 4. நிழல், 5. காற்று, 6. முட்டை, 7. கடல்நீர், 8. நாற்காலி, 9. மஞ்சள், 10. நாக்கு*



# சிட்டுக்குருவி

சிட்டுக் குருவிகளின் வாழ்நாள் சுமார் 13 ஆண்டுகளாகும். இவை மனிதர்கள் இருக்கும் பகுதிகளிலேயே வசித்தாலும் மனிதர்களோடு பழகுவதில்லை. இவற்றை செல்லப் பறவைகளாக வளர்க்க முடியாது. மரத்திலும், வீடுகளின் மறைவான இடங்களிலும் வைக்கோல் போன்ற மெல்லிய பொருட்களைக் கொண்டு கூடு கட்டி வசிக்கின்றன. இவற்றின் கூடுகள் கிண்ண வடிவில் இருக்கும். இவை குளிர் காலத்தில் கூட்டமாக ஒரு புதரில் ஒன்று சேர்ந்து இரவைக் கழிக்கின்றன.

சிட்டுக் குருவிகள் அனைத்துண்ணிகள். தானியங்களையும், புழு, பூச்சிகளையும் உணவாக உட்கொள்ளும். சில வகைக் குருவிகள் பூ மொட்டுகளையும் உண்ணும்.

முட்டையிட்டுக் குஞ்சு பொரித்து இனப்பெருக்கம் செய்கின்றன. மூன்று முதல் ஐந்து முட்டைகள் வரை இடும். முட்டைகள் பச்சை கலந்த வெள்ளை நிறத்தில் இருக்கும். ஆண், பெண் இரண்டுமே முட்டைகளையும், இளம் உயிரிகளையும் பாதுகாத்து வளர்க்கின்றன. குஞ்சுகள் பெரிதாகும் வரை கூட்டிலேயே வளர்கின்றன, பறக்கத் தொடங்கியவுடன் தனியே பிரிந்து விடுகின்றன.




பொலிவியாவில் 4 வயது சிறுமி சீரகாணாமல் போன விவகாரத்தில் சந்தேகத்தில் இளைஞன் ஒருவன் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தான். சிறுமியின் உடல் கண்டெடுக்கப்பட்ட பின்னர், சீரழிக்கப்பட்ட பின்னர் கொல்லப்பட்டது தெரிய வந்தது. இதனால் ஆத்திரமடைந்த மக்கள் பொலிஸ் நிலையத்திற்குள் புகுந்து, தடுத்து வைக்கப்பட்டிருந்த வாலிபனை அடித்து இழுத்து வந்து மரத்தில் தூக்கில் தொங்கவிட்டுள்ளனர்.



சீனாவின் ஹேங்சோ சஃபாரி பூங்காவில் உள்ள, 'கோல்டன் பெசன்ட்' பறவையின், தலைஅலங்காரம் ட்ரம்ப்பின் தலைஅலங்காரத்தை போலவே இருந்ததை பார்த்த ஒரு உள்ளூர் பத்திரிகையாளர், அந்த பறவையை படம் பிடித்து இணையத்தில் பதிவேற்றி உள்ளார். அது தற்போது வைரலாக பரவி வருகிறது. இது பற்றி பறவையை வளர்ப்பவர், 'நான் முன்னர் அப்படி நினைக்கவில்லை. ஆனால், அமெரிக்க அதிபராக ட்ரம்ப் வெற்றி பெற்ற பிறகு, அவரின் நிறைய புகைப்படங்களைப் பார்த்தேன். தற்போது, பறவைக்கும் அவருக்கும் இருக்கும் ஒற்றுமையை என்னால் உணர முடிகிறது' என்றார்.

இந்தியாவில் மனைவி ஒருவர் நோயாளி கணவரை சிகிச்சைக்காக தரையில் இழுத்துச் சென்ற சம்பவம் வீடியோவாக வெளியாகியுள்ளது. நடக்க முடியாத நிலையில் கணவனை முதல் மாடிக்கு அழைத்துச் செல்ல நிர்வாகத்திடம் மனைவி ஸ்ட்ரெச்சர் கேட்டுள்ளார். நிர்வாகம் ஸ்ட்ரெச்சர் தர மறுத்துள்ளது. வேறு வழியில்லாமல் கணவரை முதல் தளத்திற்கு இழுத்தே சென்றுள்ளார். அவருக்கு யாரும் உதவ முன்வரவில்லை.






எதை பார்த்தாலும் செல்பி எடுத்து கொள்வது வழக்கமாகிவிட்டது. அண்மையில் இப்படித்தான் தமிழகத்தின் கோவையில் மலைகோயில் படிகட்டுகளில் நின்றிருந்த யானையை பார்த்ததும் சிலர் செல்ஃபி எடுக்க முயன்றுள்ளனர். இதனை பார்த்து ஆத்திரமடைந்த யானை அவர்களை வெகுதூரம் விரட்டி சென்றுள்ளது.



மட்டக்களப்பு வாழைச்சேனையில் வீடொன்றின் சுவாமி அறையில் வைக்கப்பட்ட கண்ணாடி போத்தல் ஒன்று பிள்ளையார் உருவமாக மாறியுள்ளது. கடந்த 27 வருடங்களாக கேதாரகௌரி விரதம் இருந்து வருபவர் யோகராணி. ஒவ்வொரு வருடமும் பழைய காப்பை இந்த கண்ணாடி போத்தலில் போட்டு வைப்பார். இந்தவருட காப்பை சுவாமியறையில் வைத்தபோது வெளிச்சமொன்று போத்தலில் இறங்கி, போத்தல் பிள்ளையார் உருவமாகிவிட்டதென்றார்.



விஞ்ஞானிகள் உலகிலே மிகவும் உயரமான வெப்ப மண்டல மரம் ஒன்றினை கண்டுபிடித்துள்ளனர். தென் கிழக்கு ஆசியாவில் உள்ள உலகின் மூன்றாவது மிகப்பெரிய தீவான Borneo இல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் உயரம் 94.1 மீற்றர்கள் (309 அடி). இதற்கு முன்னர் மிகவும் உயரமான இவ்வாறான 49 மரங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன. இவற்றின் ஆகக் கூடிய உயரம் 90 மீற்றர்களாக இருந்தது. இந் நிலையில் தற்போது கண்டுபிடிக்கப்பட்ட மரம் 50வது மரமாக இருப்பதுடன் ஏனையவற்றினை விடவும் உயரமாக இருக்கின்றது.



தாய்லாந்தில் பாம்பை திருமணம் செய்துள்ளார் ஒரு இளைஞன். 5 ஆண்டுகளுக்கு முன். இவரின் காதலி நோயால் இறந்து விட்டார். 10 அடி நீளமுள்ள வெள்ளை நாகப்பாம்பு ஒன்று அவரின் காதலி போல தெரிய, தற்போது அதனைத் திருமணம் செய்து கொண்டு குடும்பம் நடத்தி வருகிறார். தினமும் அந்த பாம்புடன் அமர்ந்து உணவு உண்கிறார். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்க்கிறார். இருவரும் சேர்ந்து காரில் நீண்ட தூரம் பயணம் செய்கின்றனர். படுக்கையில் ஒன்றாக தூங்குகின்றனர்.















விளம்பரத் தொடர்புகளுக்கு

076 825 5567, 021 492 7561

இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி,
கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 20.11.2016 அன்று வெளியிடப்பட்டது.